


1888-89

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு.

இஃது

திருமயிலை-வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

பு. அப்பாசாமிமுதலியாராலும்,

வே. வேலுமுதலியாராலும்,


சென்னை:

மீனாட்சியம்மை கலாநிதி

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரிஸு

பரிசோதனபத்திரம்.



பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௱௨	௧௮	பொறுக்கு	பொறுக்கு
௨௪௧	௧௯	பொய்டலை	பொய்யுடலை
௨௪௭	௨௯	னேனென்ற	னென்ற
௨௬௫	௨௨	வெடவெளி	வெட்டவெளி

உ

சிவமயம்.

நூலினுட்பிரிவு.

நூலினுட்பிரிவு.

உ

திருச்சிற்றம்பலம்

தாயுமானசுவாமிகளது

சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் பலவற்றினுஞ் சிறந்து விளங்குகின்ற சோழமண்டலத்திலே வேதங்கள் இறைவனைப்பூசித்துத் திருக்காப்பிட்ட தலமாய் வேதாரணியமென்னும் வடமொழிப்பெயரையுடைய திருமறைக்காடாகிய சிவஸ்தலத்திலே சற்றேறக்குறைய ௨00 வருஷத்துக்கு முன்பாக வேளாண்குலதிலகராயும் குருலிங்க சங்கம பத்தியிலே சிறந்தவராயும், கேடிலியப்பிள்ளை யென்பவரொருவர் இருந்தார். அவராலே அந்தச் சிவஸ்தலவிசாரணை நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அக்காலத்திலே திரிசிரபுரத்திலே அரசாட்சிசெய்துகொண்டிருந்த விஜயரகுநாத சொக்கலிங்க நாயக ரென்பவர் கேடிலியப்பிள்ளையினுடைய நற்குணங்களையும் கணக்கு வல்லமையையும் சிலர் சொல்லக்கேட்டு அவரை அழைப்பித்துப் பரீட்சித்து அவருக்குப் பெரிய சம்பிரதி யுத்தியோகம் கொடுத்துத் தம்மிடத்தில் வைத்துக் கொண்டார். அந்தக் கேடிலியப் பிள்ளை சந்ததி யில்லாதவரா யிருந்த

தமையனாருக்குத் தம்முடைய ஒரே பேறாகிய மெய்மெனி பயிர்க்கே யென்றும் குமாரனைக்கொடுத்துவிட்டு மறுக் கதிருல் தமக்குச் சந்ததி உண்டாக அருள்செய்யும் படி அந்தத் திரிசிரபுரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற தாயுமானேசுவரைத் தரிசித்துக்கொண்டு வந்தார். அக் கடவுள் திருவருளினலே ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அதனுல் அவர் மகிழ்ச்சி கூர்ந்து அக்கடவுளுக்குக் காணிக்கை முதலானவை செலுத்திக் குமாரனுக்குத் தாயுமானவரென்கிற அக்கடவுள் பெயரைக்கொடுத்தனர். அந்தத் தாயுமானவர் சம்பிரதாயமுறையினவும் மனமகி ழ்ச்சியுண்டாக அவர் செய்யுமாறு வளர்ந்து அதி சயமான வடமொழி, தென்மொழி முதலிய கல்விப் பயிற் சியில் சிறந்தவரானார். உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் இவை முதலிய நற்குணங்களெல் லாம் அவரோடு கூடவே வளர்ந்தன. ஓர் அஞ்ஞானி மனம் நிலையில்லாத செல்வப் பொருளை எப்படி விரும் புமோ அப்படியே இவர் மனம் தத்துவப்பொருளையே விரும்பிநின்றது. அப்படி யிருக்கையில் திருச்சிராப ளி மலையில் எழுந்தருளிய மௌனதேசிகர் தாயுமா னவரைச் சந்தித்து அவர் அறிவின் பக்குவங்கண்டு வே தாகமங்களின் முடிவான தத்துவப்பொருளை உபதேசித் தருளினர். அத்தருணத்தைத் தாயுமானவர் தம் நூலுள் பலவிடத்தே யிருந்து பக்தி பரவசமாய் அவ்வப்போதப்

பொருளைச் சிந்தித்துத் தெளிந்து தினந்தோறும் தட்சிணாமூர்த்தி சந்நிதியிலே நிஷ்டை செய்துகொண்டு வந்தார். பின்பு தாயுமானவர்க்குப் பிதா தேகவியோகம் அடைதலினாலே அவர் லௌகீகத் தொழிலை அரசன்வேண்டுதல்பற்றி அதில் விருப்பமில்லாதவராயிருந்தும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அரசன் அவரை முதலிலே ஞானவானென்று அறிந்திலனாயினும் கேடிலியப்பிள்ளையினும் இவர் யோக்கியரென்றுநன்குமதித்து மிகவுஞ் சிறப்புச் செய்து வைத்திருந்தான். ஆனால் கலைக்கூத்தன்கருத்து உடல் காப்பிலும் அவன் செய்கை கூத்திலும் எப்படிவைக்கப்பட்டிருக்குமோ அப்படியே தாயுமானவர் கருத்துச் சிவத்திலும் அவர் செய்கை லௌகிகத்திலும் வைக்கப்பட்டிருந்தன. இப்படி சிலநாள் சென்றதன்மேல் அரசன் அவரிடத்தே விளங்கிய அபூர்வமான சில செய்கைகளைக்கண்டு அவர் மகிமையை அறிந்துகொண்டான். உடனேவிவேகியாகிய அவ்வரசனுக்கு அவரைக்குறித்து அச்சமும் அன்பும் உண்டாதலால் அவரை அழைப்பித்து உயர்ந்த ஆசனத்தின்மேல் எழுந்தருளப்பண்ணி சுவாமிஅடியேன் இதுவரையிலே உமதுமகிமையைக் கண்டுகொள்ள மாட்டாதவனா யிருந்ததனால் உமக்குஊழியஞ் செய்யத்தக்க நான் உம்மை என் ஊழியத்திலேவைத்திருந்தேன். ஆயினும் இது பெரியகுற்றமாகலின் கிருபா மூர்த்தியாகிய தேவரீர் இக்குற்றத்

தைப் பொறுத்தருளி இன்று முதலாக அடியேனால் ஆக
வேண்டியவற்றைச் செய்வித்துக்கொண்டு நிட்டைக்
குக் குறைவுபடாமல் இருந்தருளவா மென்று வேண்டு
தல் செய்தான். அது கேட்டவுடனே தாயுமானவர் திரு
வுளமகிழ்ந்து அன்று முதலாக அளவற்ற ஞானயோகத்
திலே இருந்துகொண்டு கடவுளையும் குருவையும் அற்
புத சின்மய மதுரமான தமிழ்ச்செம்பாடல்களைப் பாடித்
துதிசெய்துகொண்டு வந்தார். இப்படியிருக்கையில் அவ்
வரசன் இறந்துபோய் விட்டான். அவ்வரசன் மனைவி
தாயுமானவர் திருமேனியின்கண் உள்ள அழகைக் கேள்
விப்பட்டு அவரை அழைப்பித்துக் கண் களிகூர நோக்
கிக் கேள்விப்பட்ட அளவினும் அதிகமாய் விளங்கு
தலால் உளமருண்டு அவரைத் தன்னரசாட்சிக்குத் தலை
வராக்கவும் தன்னால் விரும்பப்பட்ட தகாத செய்கைக்கு
உடன்படுத்தவும், தான் கொண்ட கருத்தைக் குறிப்பித்
தாள். அக்கருத்தை அறிந்த தாயுமானவரோ ஒரு உபாய
வழியினாலே அங்கிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு
அவள் அரசாட்சியினெல்லையைக் கடந்து இராமநாதபுர
த்தைச் சேர்ந்து எழுந்தருளினார். இச்செய்தி சிவசிதம்
பரம்பிள்ளை செவியை அடைந்ததனாலே அக்குருப்பிறியதா
யார் குமாரராகிய அருளையப்பிள்ளையும் தேடிக்கண்டு
பிடித்துச் சந்ததி விளக்கவேண்டுமென்னும் கருத்தைக்
கொண்டு திருக்கல்யாணம் செய்யும்படி முயற்சி செய்

னார்கள். தாயுமானசுவாமிகளுக்கு அந்த காரியத்திலே சிறிதும் திருவுள மில்லாதிருந்தும் தமையனார் வேண்டுதலின் மிகுதியினாலே உடன்பட வேண்டியதாயிற்று. உடனே பத்தினியார் ஓர் ஆண்பிள்ளையைப் பெற்று வைத்துச் சிவபதம் அடைந்தார். அந்தப்பிள்ளைக்குக் கனகசபாபதி பிள்ளை யென்று பெயர் இடப்பட்டது. அது முதலாகத் தாயுமானசுவாமிகள் கௌபீனத்தோடு பரிசுத்த சிவஸ்தலந்தோறும் சஞ்சரித்துக்கொண்டு இவ்வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பெற்று அஞ்ஞான விருளினின்று நீங்கி உய்யும்படி பலவகைப்பட்ட அற்புதமான பாடல்களைச் செய்தருளினார். அருளையனென்பவரும் அவரிடத்தே தத்துவோபதேசம் பெற்றுக்கொண்டு அவரைவிட்டு நீங்காமல் பணிவிடை செய்துகொண்டு வந்தார்.

தாயுமானசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொருபமாகிய சிவத்திலே கலந்த பின்பு அருளையசுவாமிகள் அகவற்பாயினாலே குருவைத்துதித்துச் சிவயோகத்தில் இருந்து தமக்குப்பின் பக்குவப்பட்டுவரும் அடியார்களுக்கு அநுக்கிரகஞ்செய்ய மேற்படி கனகசபாபதிபிள்ளைக்கு அபிஷேகம் செய்தருளினார்.

இக்குருபரம்பரையில் தஞ்சைமா நகரத்துக்குக் கீழ்பால் அன்னப்பன் பேட்டையி லுள்ள மடத்தில் சந்ததி அவர் திருமரபென்றறியவேண்டும்.

தாயுமானசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

முற்றுப்பெற்றது.

உ

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிகள் பாடல்.

திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம். (க)

ஊராத்தப் பெற்ற பேரன்பர்க்குச் சற்று
　　முறவனைத் தப்பிலையிரு
முடலனைத் துஞ்செயும் வினையனைத் துங்கருத்
　　தொகையனைத் தும்பெற்றபேர்
பேரனைத் துஞ்சொர்க்க நரகமு மனைத்துந்
　　தெய்வமு மனைத்தபேதச்
திகழ்கின்ற சமயமு மனைத்தனைத் துள்ளான
　　சிற்சத்தி யாலுணர்த்தி
காரணந் தந்தோடு வருவித்த வெனவைப்பர்
　　கண்ணுறும்விண் ணூர்தேக்கமே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைக்
　　கடவுளைத் துரியவடிவைப்
பேரனைத் தும்பெறு மறையனைத் துஞ்சொலும்
　　பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
　　பெரியபொரு ளைப்பணிகுவாம். (௨)

அத்துவித வத்துவைச் சொற்பிரகா சத்தனியை
　　யருமறைகள் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
　　வாதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம் மதம்பெறாச்
　　சாலம்ப ரகிதமான

நாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்வாம். (ரு)

பரிபூரணானந்தம்.

வாசாக யிங்கரிய மன்றியொரு சாதன
மனேறவாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்றுறவு
மார்க்கத்தி னிச்சைபோல
நேசாநு சாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்தபோது
நித்திரைகொள் வேன்றேக நீங்குமென வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே

பெற்றதுணை யுதித்திடுத லின்றியொரு பெரியபொருள்
    பேசிய நீட்டாட புமன்னவும்
பான மயிர்முடி கொள்ள நானிகருள்
    பழுத்தொழுகு தேவதருவே
பார்த்தவிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூரணானந்தமே. (௪)

தேர்வரு நூலான உடம்பான புருவமா
    செயர்கொண் டருப்பனமுதற்
சேகர வத்திளையு சொக்கவெள் வெளந்தத்து
    செனிபிக்க லக்கிறக்கும்
விக்ரம புரக்க தொல்லெடொன் றைறும்
    மேற்கொண்ட சேடகமே
வேதமொடு சாஸ்திர மகாநுபவ முமாகிய
    மெய்தரிசன தாக்கராணம்
பிர்மன் பொருள் விளக்கிமை ஸ்துறுடே
    பெற்றோர்கள் பெற்றபெருமை
கிரணமே பெரிதாகவும் கிரணமோ யாவர்க்கு
    பேசாவ யானுமனமே
பரிமா மொனக்குநீ யதிலிக்க லைரமே
    பரிபாவ காவலனமே
பார்த்தவிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூரணானந்தமே. (௫)

ஆராயும் வேளையிற் பிரமாதி யானோரு
　　மையமொரு செயலுமில்லை
யமைதியொடு போதக பெருமைபெறு குணசந்த்ர
　　ராமென விருந்தபேரு
நேராக வொருகோப மொருவேளை வரவந்த
　　நிறைவொன்று மில்லாமலே
கெட்டுயிர்த் தத்தட் டழிந்துளறு வார்வசன
　　நிர்வாக மொன்றபேரும்
பூராய மாயொன்று பேசுமிட மொன்றைப்
　　புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயி லோமென்ற விரதியரு மறிதுயிற்
　　போலேயி ருந்துதுயில்வார்
பாராதி யினிதுள்ள செயலெலா முடிவிலே
　　பார்க்கினின் செயலல்லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
　　பரிபூர ணாநந்தமே. (க)

அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே
　　யம்மாயை யில்லாமையே
யாமெனவு மறிவுமுண் டப்பாலு மறிகின்ற
　　வறிவினை யறிந்துபார்க்கி
னெண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளல்லாம
　　லில்லையெனு நினைவுமுண்டிங்

மோனென தற்சொரூப நிலைநாடி நிற்பதே
    இன்பமெனு மன்புறுண்டு
கண்டன வெலாமல்ல வென்றுகண் டனைசெய்து
    கருவிகர ணங்களோயக்
கண்மூடி யொருகண மிருக்கவென் றால்பாழ்த்த
    கர்மங்கள் போராடுமே
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
    பக்ஷதா னிச்சிப்பனோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணானந்தமே. (௩)

சந்ததமு மெனதுசெய லினதுசெய லாயினுந்
    தன்மையினை யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
    சமரச சுபாவமிதுவே
யிந்தநிலை தெளியநா னெக்குருகி வாடிய
    வியற்கைதிரு வுளமறியுமே
யிந்நிலையி லேசற் றிருக்கவென் றாலுடலை
    யிதசத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுமே மலமாயை கன்மந்
    திரும்புமோ தொகெடுக்காய்ச்
சென்மவரு மோவெனவுஞ் சோகிக்கு மேமனஞ்
    சிரத்தையெனும் வாளு முதவிப்

பேதமற மெய்ஞ்ஞான நீரமுந் தந்தெனைப்
        பாதுகாத் தருள்செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
        பரிபூர ணனந்தமே. (ரு)

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
        பொறிபுலன டங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
        போனவிட மென்பர்சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
        நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
        னுடலரு ளென்பர்சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்
        பேசினரு வென்பர்சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
        பிறவுமே மொழிவரிதனுற்
பாதரச மாய்மனஞ் சஞ்சலப் படுமலாற்
        பரமசுக திட்டைபெறமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
        பரிபூர ணனந்தமே. (சு)

அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலென்
        னறிவைச் சுருக்கினவரா

ரவ்வறிவு தானுமே பற்றினது பற்று
யழுந்தவுந் தலைமீ திலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிட்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு
தூங்கவைத் தவரார்கொலோ
தந்தைதாய் முதலான வகிலப்ர பஞ்சந்
தனைத்தந்த தெனதாசையோ
தன்னையே நோவனோ பிறரையே நோவனோ
தற்கால மதைநோவனோ
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ
பரமார்த்த மேதுமறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (எ)

ஆராதெ லாமொழிய வருவனவெ லாமெய்த
மனதுசா க்ஷியதாகவே
மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த
மரபுசம ரசமாகவே
பூராய மாயுணர வூகமது தந்ததும்
பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறி தந்ததுஞ் சாசுவத வானந்த
போகமே வீடென்னவே

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பரிபூர ணானந்தமே. (அ)

[illegible]
ணாலமுமு தாகவில்லையோ
[illegible]
[illegible]
[illegible]
தனுவாக விளையவில்லையோ
[illegible]
[illegible]
[illegible]
மடமங்கை யாகவில்லையோ
[illegible]
மார்க்கத்தில் வைக்கவில்லையோ
[illegible]
பண்ணுவ தனக்கருமையோ

பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (௯)

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக
அம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னானெனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (௰)

ஆக பாடல்-௰.

பொருள் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
　　நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
　　சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
　　மனவாக் கெட்டாச் [யைச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளி
　　சிந்தை செய்வாம். (க)

யாதுமனை நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
　　யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
　　பேரா னந்தக் [னைக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்
　　கொடுத்துக் காட்டுந்
நீதிபரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
　　சிந்தை செய்வாம். (உ)

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
　　பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
　　மயமாய் ஞானக்

குருவருளாற் காட்டிடவு மன்பனைக்கோத் தறவிழுங்கி
கொண்டப் பாலுந் [னயாஞ்
தெரிவரிதாய்க் கலந்தவெந்தப் பொருளந்தப் பொருளி
சிந்தை செய்வாம். (௩)

இகபரமு முயிர்க்குயிரா யானெனதற் றவருறவை
யெந்த நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரிய வாழ்வை
முகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தை நாடி [கண்
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்
முகிழ்த்து நிற்பாம். (௪)

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாம [நின்
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற
றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம். (௫)
இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலக
மெமக்குத் தோன்றச்

சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யனுதினமும்
வழுத்தல் செய்வாம். (௬)

பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற் பொருளாகிப்
போத மாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி
யருளானோர்க் ககம்புறமென் றன்றைப் பூரணவா
னந்த மாகி
யிருடீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையா
மிறைஞ்சி நிற்பாம். (௭)

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா முனிவர்சித்த
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கம் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிர்போற்
கலந்தெந் நாளுந்
துரியநடு ஆடிருந்த பெரியபொரு ளியாதனைத்
தொழுதல் செய்வாம். (௮)

விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாகக் கண்டவன்பர் கண்ணூடே யானந்தக்
கடலாய் வேறொன்
றெண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளு
மிறையே யுன்றன்
றண்ணாருஞ் சாந்தவரு டனைநினைந்து கரமலர்க
டலைமேற் கொள்வாம். (௧)

விண்ணிறைந்த வெளியாயென் மனவெளியிற் கலந்த
வெளியி னூடிக் [றிவாம்
தண்ணிறைந்த பொருளாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பா
லுண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுளறி
யுவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம். (௨)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னை போல
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமலமாகி

ஓதரிடுஞ் சமயநெறிக ளரிய தாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியையென் றுயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறா
யமர்ந்தெனவெ கிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல வாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளாசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம்.

ஆக பாடல்—௨௫.

சின்மயானந்தகுரு.



பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினா லுருகிவிழிநீ
ராருக வாராத முத்தியினை தாவேச
வாசைக் கடற்கண்மூழ்கிச்

சங்கரசு யம்புவே சம்புவே யெனவமொழி
தழுதழுத் திடவணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள்கையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க
டொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபாநு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லால டிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௪)

ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவினா
னத்துவித வாஞ்சையாத
லரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
யாகுமறி வவிழவின்பந்
தாக்கும்வகை யேதிகாட் சரியைகிரி யாயோக
சாதனம்வி டுத்ததெல்லாஞ்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும்ப டிக்குபாயம்

வெருவித்து வட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய்மடுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௨)

ஒளவியமி ருக்கநா னென்கின்ற வாணவ
மடைந்திட் டிருக்கலோப
மருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமே
லாசாபி சாசமுதலாம்
வெவ்வியகு ணம்பல விருக்குமென் னறிவூடு
மெய்யனீ வீற்றிருக்க
விதியில்லை யென்னிலோ பூரண னெனும்பெயர்
விரிக்கிலுனா வேறுமுளதோ
கவ்வுமல மாகின்ற நாகபா சத்திறுற்
கட்டுண்ட வுயிர்கண்மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
கதியான பூமிங்வெட்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண பேருவே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவி ளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௩)

ஐவகையெ னும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னையா னணுகவுந்
தண்ணருள் வகுக்கவிலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவசொ ரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௩)

ஒத்தவகை யாகின்ற பூதபே தத்தினா
லாகின்ற வாக்கைநீர்மே
லமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநா
னறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போக்கநெறி யென்றிருந்தேன்

பூரய மாகநின தருள்வந்து ணர்த்தவிது
போனவழி தெரியவில்லை
யெந்தநிலை பேசினு மிணங்கவில்லை யல்லா
லிறப்பொடு பிறப்பையுள்ளே
யெண்ணினு னெஞ்சது பகீரெனுந் துயிலுரு
விருவிழிப் பிரவுபகலாய்ச்
செந்தழலின் மெழுகான தன்மையை யென்கொலோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவி ளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௫)

காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட்ட தற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்திடைப் போக்குவர வுறுகின்ற
பெரியவினை யாட்டமைத்திட்
டோரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டடருறவு றக்கியிட [illegible]
திரவுபக லில்லாத பே[illegible]ட்டினி
விசைந்து [illegible]னென்று

சிரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௩)

கருமருவு குகையனைய காயத்தி னடுவேட்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக விருக்கவே ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவமத றிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை யென்சொல்லுவேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதிய மனந்தமீது
மத்துவித நிலையாக வென்னையாண் டென்னடிமை
யானவர்க் கறிவிறுபேக்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௪)

கூடுதலு டல்பிணி மலத்தினிற் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்

குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்றவிந்து
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று
ஞாதுருவின் ஞானமற்று
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (அ)

தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித்
தாளிணையென் முடிசூட்டி யறிவித்த மாதியே
சாசுவத சம்ப்ரதாய
மோராமன் மந்திரமு முன்னுமன் முத்திநிலை
யொன்றோடி ரண்டெனும
லொளியெனவும் வெளியெனவு முருவெனவு நாதமா
மொலியெனவு முணர்வுமற்

பாராது பார்ப்பதே பெருநலந் தலைமற்ற
 பாமவரு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தியது பாராம லந்நிலை
 பதித்தின் பழமைபர்க்கும்
ஓராயி ருக்கநினை தருள்செய்வதென் மையனே
 சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவி ளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
 சின்மயா னந்தகுருவே. ([illegible])

போதமா யாதிநடு வந்தமி லாததாய்ப்
 புனிதமா யவிகாரமாய்ப்
போக்குவர வில்லாத வின்பமாய் நின்றநின்
 பூரணம் புகலிடமதா
ஆதார மையமற வறிவிலோ மறைப்பதுங்
 வருள்பெற்று மறிவின்மைதீர்த்
தறிவித்து நிற்பதுவு மருளாகி வெளிப்படைத்
 தறிவாவ தேதறிவிலா
வேதம்வரு கலைபேத வினைபேத வினைநாம்
 நீடான காயமேதென்
விச்சைக ளந்நாளு மிந்நாளில் விஷய
 பிரபஞ்சமுள ளமைதீர்த்
நிறைவுங் கொண்டுனது ணர்ந்திடவோ லல்லமையே
 சித்தாந்த முத்திமுதலே

சிரகிரிவி ளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௰)

பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பரவையிடை மூழ்கியு நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெமுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசித னக்கடைத்து
மௌனத்தி ருந்துமுயர் மலைமுழை புகுந்துமே *
மன்னுதச நாடிமுற்றுஞ்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத்துஞ்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
ளோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ்ஞான மல்நாகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (௰௧)

ஆக பாடல் - ௩௩.

---

* மலைநுழைவு புக்கியுமெனவும் பாடம்.

மௌனகுரு.

ஆசைநிக ளத்தினை யிர்த்துவெளி படவுதறி
　　யாங்கார முளையையெற்றி
யத்துவித மதமாகி மதமாறு மாருக
　　வங்கையின்வி லாழியாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனக்கவிழ்த் தார்த்துமேற்
　　பார்த்துப்ப ரந்தமனமே
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
　　படாமன்ன மாயைநூறித்
தேசுபெற நிலைத்த சின்முத்தி ராங்குசச்
　　செங்கைக்கு ளேயடக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம்ப டிந்துநின்
　　றிருவருட் பூர்த்தியான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
　　மத்தகஜ மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
　　மரபில்வரு மௌனகுருவே. (௩)

ஐந்துவகை யாகின்ற பூதமுத னாதமு
　　மடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிறிவாக வறிவார்க
　　ளறிவாக நின்றநிலையிற்
சிந்தையற நில்லென்று சும்மாவி ருத்திமேற்
　　சின்மயா னந்தவெள்ளந்

தேக்கித்தி லைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகா
ணைந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு
ளியநந்தி மரபுவாழ்க
வென்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (உ)

ஆதிக்க நல்கினவ ராரிந்த மாயைக்கெ
னறிவின்றி யிடமில்லையோ
வந்தரப் புட்பமுங் கானலின் னீருமோ
ரவசரத் துபயோகமோ
போதித்த நிலையைய மயக்குமே யபயநான்
புக்கவரு டோற்றிடாமற்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்கு ளிந்த்ரசாலஞ்
சாதிக்கவே யிதனை வெல்லவு முபாயநீ
தந்தருள்வ தென்றுபுகல்வாய்
சண்மதத் தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையு

மாதிரமொ டண்டப் பரப்பெலா மறிவே
வந்தருள் ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (௨)

இல்லாமை யொப்புடைமை யென்று மயவிரு
விழிகொண்டு மையல்பூட்டி
மின்றோய் கனிந்தமே மெய்யென்றும் கோடா
மேல்வீடு சொர்க்கமென்றும்
பொன்னொழி யாதவர் பொருளென்று போற்றிப்
பொய்வேட மிகுதிகாட்டிப்
பொறைப்பிழை தாமிர சாதிநற் குணமெலாம்
போக்கியே போகவிட்டுத்
தன்னிசை மேவுதி பாழ்ம்பெய் மிகைத்திடத்
தாளிக்கை மேவாமல்
சமயமட சாரலை வேதாந்த சித்தாந்த
சமரச நிராகுலி
கன்னமொழு சொற்கொண் டுணர்த்தித் தண்டளிர்
கழல்தந்த ஞானகுருவே [ன்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (௩)

போதம் பிறக்கின்ற சாலையினை வெண்டுகில்
பசிக்கத் திருந்துமதுபோற்

புருஷர்பெறு தர்மாதி வேதமுடி யாகமம்
      புகலுமதி நூலாம்பரன்
ஞானநெறி யும்பெறும் காட்சியுறு மானமுத
      நறுநெறி தங்கிட்டோர்ந்து
காருணைக்குளாற படைபுடை பெயர்த்திடவு
      நான்குசா தனமுமேபார்த்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்
      றறுபட்ச சம்புபட்ச
மாமிருவி கற்பமு மாயாதி சேதமையு
      மதித்திரண் டொன்றென்றுமோர்
மானதவி கற்பமற வென்றனற் பதமதா
      மரபென்ற பரமகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
      மரபில்வரு மௌனகுருவே. (௯)

கல்லாத அறிவின்மேற் கேளாத கேள்வியுங்
      கருதொணா நிறைநிலைக
காட்சியுங் கோணமன கட்சமய சாட்சியாய்க்
      காதலித் திடுமெய்ச்சுகம்
பொல்லாத பொய்ம்மொழி யல்லாத நன்மைகள்
      பொருந்துறு மேதமற்றுமேன்
புருடர்வடி வானதே யல்லாது கனவிலும்
      புருடார்த்த மேதுமிலையே

னெல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ண முய்வண்ணமோ
விருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
மெனக்குநின் னருடாரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாளநினையாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (சு)

கானக மிலங்குபுலி பசுவொடு குலாவுநின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையா னெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே
புவிராசர் கவிராசர் தவராச னென்றுனைப்
போற்றிசெய போற்றியென்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
னட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளு முனைமெச்சுவார்
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்லவெளிதோ

மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (எ)

சருகுசல பக்ஷணிக ளொருகோடி யல்லாற்
சகோரபக்ஷிகள்போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மைய ரனந்தகோடி
யிருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத
வேகாந்த மோனஞான
வின்பநிட் டையர்கோடி மணிமந்த்ர சித்திநிலை
யெய்தினர்கள் கோடிசூழக்
குருமணி யிழைத்திட்ட சிங்காத னத்தின்மிசை
கொலுவீற் றிருக்குநின்னைக்
கும்பிட்ட னந்தமுறை றெண்டனிட் டென்மனக்
குறையெலாந் திரும்வண்ண
மருமல ரெடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை
வாவென்ற ழைப்பதெந்நாண்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (அ)

ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
வாணவத் திலும்வலிதுகா
ணறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாதி
யாதொன்ற தொடினுமதுவாய்த்

தாக்கரு தொழிற்பெறு மரியைப் பிரமாதி
  தம்பொருட்கெ மானமென்றுந்
தடையற்ற தெரிசனக் கருணைநிதி போலவே
  தன்னிலைமை யாருமிற்கு
நீக்கமற வைக்குவிக்கச் சொன்னப் பாலித்
  நிராலம்ப காரமாகி
நிறைவெளி யெங்கணுந் தன்னாசை யாவிலும்
  நிருக்குணிக மெறுமெடமோரும்
வாக்கான் மனமதை போய்நட முமையமே
  மௌனநிறை தேசகுருவே
மக்கநந்த வேபோக நக்கநந்த வெளுலன்
  மாசிமைரு மௌனகுருவே. (௩)

பற்றுமெது விரமாகி மொக்கறையிட் டொன்றனைப்
  பற்றியழல் கிருமிபோலப்
பார்த்திருக்கை பெற்றசான் வெளியாக மின்னறுந்
  பார்த்துமறு பொன்றமவிதமொ
நித்தமுல சன்றிடி மெலபோறு மொருமொழி
  நிமக்கென் றுரைக்கபோது
நிக்கைசெலி மாசமெ பலறயமறைய வுதமெல்
  நிமெத்ச மனவனாவ
வற்றுளா வணர்வுற்றுன் மற்றமெழி மினாபோல
  வளறமெவன் முக்திமார்க்க

முணர்வதெப் படியின்ப துன்பஞ்ச மானமா
யுறுவதெப் படியாயினு
மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை
மலையிலக் கெனநம்பினேன்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. (ய)

ஆக பாடல் - ௪௬.

கருணாகரக்கடவுள்.

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விடய கைவல்யமா
நிட்களவ சங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுத்த
தற்பரவிசு வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞானபகவ
சம்புசிவ சங்கர சர்வேச வென்றுநான்
சர்வகா லமுநினைவனே
வற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
வத்துவித நிச்சய சொரூபசாட் சாத்கார
வநுபூதி யனுகூ[illegible]ன்

கற்பனைய றக்காண முக்குணமுடன் மடங்கிமுற்
கண்ணாடி ருந்தகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகர க்கடவுளே. (க)

மன்றாதி யைக்கொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி கரோத்ராதியும்
வளர்கின்ற சத்தாதி மனமாதி கலையாதி
மன்றுசுத் தாதியுடனே
தொன்றாற்றொ டாறுமற் றன்னவு மௌனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றமுற வென்சொல்லுகேன்
பன்றருக விசையிலொடு பாடிப்ப டித்தருட்
பான்மைநெறி நின்றுதவருப்
பக்குவி கெடாய் நெக்குநெக் குருகிப்
பணிந்தெழுந் திருகைகூப்பிக்
கண்ணருவி சொரியுமின் றவன் பருவபேர்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகர க்கடவுளே. (உ)

எல்லாமு மாடைமையே யெல்லாமு முடையவே
யெல்லாமு முடையசெயலே

மெய்யங்கணும் வியாபிநீ யென்றுசொலு மியல்பென்
றிருக்காதி வேதமெல்லாஞ்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
சொல்லிறந் தவரும்விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
தொகுத்தநெறி தானுமிவையே
யல்லாம லில்லையென நன்றாவ றிந்தே
னறிந்தபடி நின்றுசுகநா
னாகாத வண்ணமே யிவ்வண்ண மாயினே
னதுவின தருளென்னவே
கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்திவை
கதிக்குவகை யேதுபுகலாய்
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே. (௩)

பட்டப்ப கற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
பட்சமோ வெனதுபட்சம்
பார்த்தவிட மெங்கணுஞ் சோதிநிலை குலையாது
பரமவெளி யாகவொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராம லாராகநான்
சிறுவீடு கட்டியடு மண்சோற்றை யுண்டுண்டு
தேக்குசிறியார்கள்போல

நட்டணைய தாக்கற்ற கல்வியும்வி வேகமு
 நன்னிலய மாகவுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
 நடுவேமு ளைத்தமனமே
சட்டவறி யாயலே வாடினே னெப்போது
 கருணைக்கு ரித்தாவனோ
கருதரிய சிற்பவையி லானந்த நிர்த்தமிடு
 கருணைக ரக்கடவுளே. (௪)

மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்தும்
 மெய்யான மெய்யையெல்லா
மெய்யெனவு ணர்த்தியது மெய்யிதற் கையமிலை
 மெய்யேது மறியாவெனும்
பொய்விடாப் பொய்யினை யுள்ளத் திருந்துதால்
 பொய்யான பொய்யையெல்லாம்
பொய்யென வண்ணமே புகலவைத் தாயெனிற்
 புன்மையே னென்செய்குவேன்
மைவிடா தெழுநீல கண்டகுருவே விட்டு
 வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறைபோது நான்முகக் குருவே
 மதங்கவொடாறு நின்றகுருவே
கைவிடா தையென்ற வன்பருக் கன்பாய்க
 கருத்தாடு ணர்த்துகுருவே

கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே (௫)

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித்தி றைஞ்சவாங்கே
பார்க்கின்ற மலருடு நீயேயி ருத்தியப்
பனிமலரொ டுக்கமனமு
நண்ணென லாமலிரு கைதான்கு விக்கவெனி
னாணுமென் னுளநிற்றிநீ
நான்கும்பி டும்போ தரைக்கும்பி டாதலா
லென்பூசை செய்தன்முறையோ
விண்ணேவி ணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேய வித்தின்முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே. (௬)

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமெனலாற்
சகமீதி ருந்தாலு மரணமுண் டென்பது
சதாநிட்டர் நினைவ தில்லை

சிந்தையறி யார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாந்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலவோ
விந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளி
ருக்காதி வேதமுனிவ
ரெண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்க
ளிரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னர்கண் மற்றையர்க ளியாவருங்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே. (எ)

துள்ளுமறி யாமனம் பலிகொடுத் தேன்கர்ம
துட்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாமு னக்கே
தொழும்பனன் பபிடேகநீ
ருள்ளுறையி லென்னுவி நைவேத்தி யம்ப்ராண
னேங்குமதி தூபதீப
மொருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே

திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத வானந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே. (அ)

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றென வெதும்பியூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானனைய வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாக ரக்கடவுளே. (கூ)

இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞ
ரெக்கால முமுமுதவுவா
ரின்சொ றவ ருர்பொய்மை யாமிழுக் குளையா
ரிரங்குவார் கொலைகள்பயிலார்
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாட்சிநீ யிகபரத்துஞ்
சந்தான கற்பகத் தேவா யிருந்தே
சமஸ்தவின் பமுமுதவுவாய்
சிங்கத்தை யொத்தெனைப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தாகு லத்திமிர மகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளரருட்
கலனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணைக ரக்கடவுளே. (ய)

ஆக பாடல்—௫௬.

சித்தர்கணம்.

திக்கொடுதி கந்தமும் மனவேக மென்னவே
சென்றேடி யாடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு வென்னவே
திகழ்துருவ னளவளாவி

யுத்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையி
ஹுழுந்தமிழு மாசமனமா
வோரேழு கடலையும் பருகவல் லீரிந்த்ர
னுலகுமயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா வெடுத்துவிளை யாடுவீர்
ககனவட் டத்தையெல்லாங்
கடுகிடை யிருத்தியே யட்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலுமேலு
மிக்கசித் திகளெலாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்தியிலையோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (௧)

பாட்டளிது தைந்துவளர் கற்பகந னீழலைப்
பாரினிடை வரவழைப்பீர்
பதுமநிதி சங்கநிதி யிருபாரி சத்திலும்
பணிசெயுந் தொழிலாளர்போற்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போரையுங்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுகவைப்பீ
ரோட்டினை யெடுத்தா யிரத்தெட்டு மாற்றுக
வொளிவிடும் பொன்னாக்குவீ

ருரகனு மிளைப்பாற யோகதண் டத்திலே
    யுலகுசுமை யாகவருளான்
மீட்டிடவும் வல்லநீ யென்மனக் கல்லையனன்
    மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே. (உ)

பாரொடுநன் னீராதி யொன்றொடொன் றுகவே
    பற்றிலய மாகுபோழ்து
பரவெளியின் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
    பரந்திடி னதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
    நிற்பீர்வி கற்பமாகி
நெடியமுகி லேழும் பரந்துவரு ஷிக்கிலோ
    நிலவுமதி மண்டலமதே
யூரென விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை
    யூர்தியரு ளாலுலவுவீ
ருலகங்கள் கீழ்மேல தாசப் பெருங்காற்
    றுலாவினற் றூரணையினுன்
மேருவென வசையாம னிற்கவல் லீருமது
    மேதக்க சித்திவெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே. (௩)

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
ணியாதினும் மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவரு மோவறிகிலேன்
கண்ணகனி லத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தினின்று
காலூன்றி நின்றபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவித னருளினாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (௪)

பொய்திகழு முலகநடை யென்சொல்கே னென்சொல்
பொழுதுபோக் கேதென்னிலோ [கேன்
பொய்யுடனி மித்தம் புசிப்புக்க லைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவம லாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும்வெளியாய்க்

கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ வதையறிகிலேன்
மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட
வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
வரைந்துசய விருதுநாட்டி
மெய்திகழு மட்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரோ குணசாந்தரோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (௫)

கெசதுரக முதலான சதுரங்க மனமாதி
கேள்வியி னிசைந்துநிற்பக்
கெடிகொண்ட தலமாறு மும்மண்ட லத்திலுங்
கிள்ளாக்கு செல்லமிக்க
தெசவிதம தாய்நின்ற நாதங்க ளோலிடச்
சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத்தி கந்தமும் பூரணம திக்குடை
திகழ்ந்திட வசந்தகால
மிசையமலர் மீதுறை மணம்போல வானந்த
மிதயமேற் கொள்ளும்வண்ண
மென்றைக்கு மழியாத சிவராச யோகமா
யிந்த்ராதி தேவர்களெலாம்

விஜயசய சயவென்ன வாசிசொல வேகொலு
　　விருக்குநும் பெருமையெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
　　வித்தகச் சித்தர்கணமே.　　　　(சா)

ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை
　　யகிலத்தின் மிசையுள்ளதோ
வாடியக றங்குபோ லோடியுழல் சிந்தையை
　　யடக்கியொரு கணமேனும்யான்
காணிலேன் றிருவருளை யல்லாது மௌனியாய்க்
　　கண்மூடி யோமூச்சைக்
கட்டிக்க லாமதியை முட்டவே மூலவெங்
　　கனலினையெ ழுப்பநினைவும்
பூணிலே னிற்றைநாட் கற்றதுங் கேட்டதும்
　　போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக ஞயினே ஞயினுங் கடையான
　　புன்மையே னின்னமின்னம்
வீணிலே யலையாமன் மலையிலக் காகநீர்
　　வெளிப்படத் தோற்றல்வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
　　வித்தகச் சித்தர்கணமே.　　　　(எ)

கன்னலமு தெனவுமுக் கனியெனவும் வாயூறு
　　கண்டெனவு மடியெடுத்துக்

கடவுளர்க டந்ததல வழுதழுது பேய்போற்
கருத்திலெழு கின்றதெல்லா
மென்னதறி யாமையறி வென்னுமிரு பதியாயா
வீட்டுதமி ழென்றமிழினுக்
கின்னல்பக ராதுலக மாராமை மேலிட்
டிருத்தலா வித்தமிழையே
சொன்னவனி யாவனவன் முத்திசித் திகளெலாந்
தோய்ந்தநெறி யேபடித்திர்
சொல்லுமென வவர்நீங்கள் சொன்னவவை யிற்சிறிதுந்
தோய்ந்தகுண சாந்தனெனவே
மின்னல்பெற வேசொல்ல வச்சொல்கேட் டடிமைமன
விகசிப்ப தெந்தநாளோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (அ)

பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர்ப டைத்தலாற்
பொங்கிடை யொடுக்கமுறலாற்
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையா
லெற்படவி ளங்குகக னத்திலிமை யாவிழி
யிசைந்துமே ஞேக்க முறலா
லிரவுபக லிருளான கனதந்தி படதூறி
யிதயங்க ளித்திடுதலாற்

டிற்பலவி தங்கொண்ட புலிகலையி னுரியது
படைத்துப்ர தாபமுறலாற்
பனிவெயில்கள் புகுதாம னெடியவான் றொடர்நெடிய
பருமரவ னங்களாரும்
வெற்பினிடை யுறைதலாற் றவராச சிங்கமென
மிக்கோரு மைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. (கூ)

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென் [வேன்
கர்மத்தை யென்சொல்வேன் மதியையென் சொல்லு
கைவல்ய ஞானநீதி
நல்லோரு ரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவ
னட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லாரெ ருத்தன்வர வுந்த்ராவி டத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ

வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
      வித்தகச் சித்தர்கணமே. (௰)

ஆக பாடல்—சுசு.

ஆனந்தமான பரம்.

~~~~~~~~~~~~~~~~

சொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
      குணமொன்று மொன்றிலேன்பாற்
கோரமெத் தனைபட்ச பாதமெத் தனைவன்
      குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
      கள்ளமெத் தனையுள்ளசம்
சாரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
      கதிக்கென் றமைத்தவருளிற்
செல்லாமை யெத்தனை விர்தாகோட்டி யென்னிலோ
      செல்வமெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரசா லம்போன்ற
      தேகத்தில் வாஞ்சைமுதலா
யல்லாமை யெத்தனை யமைத்தனையு னக்கடிமை
      யானேனினி வைக்குமாளோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
      யானந்த மானபரமே. (க)
~~~~~~~~~~~~~~~~

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகியச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய்வி சித்ரமாய்த்
திரமாகி நானுவிதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகியைம்
புலனுமா யைம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ்ச மீபமாய்ப்
போக்கொடுவ ரத்துமாகி
யிருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி
யின்றாகி நாளையாகி
யென்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா
யிவையல்ல வாயநின்னை
யருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவ
ரறிவதற் கெளிதாகுமோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (உ)

மாறுபடு தர்க்கந்தொ டுக்கவறி வார்சாண்
வயிற்றின்பொ ருட்டதாக
மண்டலமும் விண்டலமு மொன்றாகி மனமுழல
மாலாகி நிற்கவறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
யெணமெணென் றகம்வேறதாம்

வித்தையறி வாமைப் போலவே சந்தைபோன்
மெய்ந்நூல்வி ரிக்கவறிவார்
சிறுபுலி போற்சிறி மூச்சைப்பி டித்துவிழி
செக்கச்சி வக்கவறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு மூளறவறிவா
ராறுசம யங்களொ டோறும் வேறுவே றாகிவிளை
யாடுமூனே யாவரறிவா
ரண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (௫)

காயிலையு திர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசித னக்கடைத்துங்
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்துந்
தீயினிடை வைகியுந் தோயமதின் மூழ்கியுந்
தேகங்க ளொன்பெலும்பாய்த்
தெரியநின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
தெற்றவெயி லூடிருந்தும்
வாயுவைய டக்கியு மனத்தினைய டக்கியு
மௌனத்தி லேயிருந்து
மதிமண்ட லத்திலே கனல்செல்ல வமுதுண்டு
வனமூடி ருந்துமறிஞு

ராயுமறை முடிவான வருணாடி ஞாடிமை
யகிலத்தை நாடன் முறையோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (௫௮)

சுத்தமும சுத்தமுந் துக்கசுக பேதமுந்
தொந்தமுட னிர்த்தொந்தமும்
தூலமொடு சூட்சுமமு மாசையுநி ராசையுஞ்
சொல்லுமொரு சொல்லின்முடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொட பாவமும்
பேதமொட பேதநிலையும்
பெருமையொடு சிறுமையு மருமையுட னெளிமையும்
பெண்ணினுட ணுமற்று
நித்தமும நித்தமு மஞ்சனநி ரஞ்சனமு
நிட்களமு நிகழ்சகளமு
நீதியும நீதியு மாதியொட நாதியு
நிர்விடய விடயவடிவு
மத்தனையு நீயலதெ ளத்தனைய மில்லையெனின்
யாங்களுனை யன்றியுண்டோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (௫௯)

காராரு மாணவக் காட்டைக்க ளைந்தறக்
கண்டகங் காரமென்னுங்

சல்லேப்பி லந்தநெறு சுகமான பூமிவெளி
காணத்தி ருந்திலேன்மேற
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமோ மாயையவன்
பறவையணு காதவண்ண
சோரக் கேள்புலிலே பேரகப்பு சித்தவண்ட
நின்னன்பர் கூட்டமெய்த
நிலையின்ப மக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்று
மாறாத பரியாத ஞான வெளியில்வெளி
யாகின்ற அறிவாயமே
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (௮)

காறுதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி யலைகடலுமாய்
மதியாகி ரவியாய் மற்றவெ வையாகி
வான்கருணை வெள்ளமாகி
நாலுமி லின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நானெனவ லத்துவ நானுவி னரியாய்
நானறிந் தறியாமையாய்ப்

பொறுல திட்டவலி வெல்லவெளி தோபற்ற
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வான்றனை யெழுப்பவச யோகி
போதிப்ப தெந்தநெறியை [ளிப்
யாறுவு மென்கொடுமை யநியாய மநியாய
மார்பாலெ பெத்தமொழிவே
னண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (எ)

பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருட்
புலப்படவ றிந்திலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையே னன்மைபோற்
பொருளலாப் பொருளோராம்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையினே னென்றென்னைநீ
விட்டுவிட நினைவையேற் றட்டழிவ தல்லாது
வேறுகதி யேதுபகலாய்
தூய்யனே மெய்யனே யுயிர்க்குயிரான
துணைவனே யிணையொன்றிலாத்
துரியனே துரியமுங் காணாவ தீதனே
சுருதிமுடி மீதிருந்த
வையனே யப்பனே யெனுமறிஞ ரறிவைவிட்
டகலாத கருணைவடிவே

யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (அ)

எத்தனைவி தங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமுமொ டுங்கவில்லை
யானெனுமகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீமையொடி ரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லா லநுபமாவி ருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
யத்தனைகு ணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வவனிமிசை யுண்டோசொலா
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (கூ)

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
வேழைநீ யென்றிருந்திட்
டெனதாவி யுடல்பொருளு மௌனியாய் வந்துகை
யேற்றுநம தென்றவன்றே

பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையான்
மைக்காலி ருட்டனைய விருளில்லை யிருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
யக்கால மிக்கால மென்பதிலை யெல்லா
மதீதமய மானதன்றோ
வண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (ய)

ஆக பாடல்-எசு.

சுகவாரி.

இன்னமுந் கனிபாகு கற்கண்டு சீனிதே
னெனருசித் திடவலியவந்
தின்பங்கொ டுத்தநினை யெந்நேர நின்னன்ப
ரிடையறு துருகினாடி
யுன்னியக ருத்தவிழ வுணர்குளறி யுடலெங்கு
மோய்ந்தயர்ந் தவசமாகி

யுணர்வரிய பேரின்ப வநுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ளபடிகாண்
கன்னிகையொ ருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்குவத்திற்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
கருதிநகை யாவளதுபோற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற்சு காரம்பமாஞ்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (க)

அன்பின்வழி யறியாத வென்னைத்தொ டர்ந்தென்னை
யறியாத பக்குவத்தே
யாசைப்பெ ருக்கைப் பெருக்கிக்கொ டுத்துநா
னற்றேன லந்தேனென
வென்புலம யங்கவே பித்தேற்றி விட்டா
யிரங்கியொரு வழியாயினு
மின்பவெள மாகவந் துள்ளங்க ளிக்கவே
யெனைநீக லந்ததுண்டோ
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகைத னக்குமுண்டோ

தாயினேற் கிவ்வணந் திருவுளமி ரங்காத
தன்மையாற் றனியிருந்து
துன்பமுறி னெங்ஙனே யழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்குமுறையாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (உ)

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே
கருணைக்கி ணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான்வ குத்ததே வாய்க்காலெ னும்பெரு
வழக்குக்கி ழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையாயி ரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ள லீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னுவனந்தோ
சொல்லான்மு ழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மாவி ருக்கவருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௩)

என்பெய செக்குடைய *சோமந்திவிர்ப்பவுடை
    யிசைகளை யருவிசெழுமா
மிடைபடு தருக்களு மழைபோ லிரக்கிடுமெ
    மிருவிழிக ளாசைநெய்ப
வம்பிறுள் குழக்கிரக்க வல்வருக் கக்கவிலை
    யகிர்தசஞ் சிவிபோல்வர்
தாவக்க மழைபொழிவரை புன்னம்பி லாதுமெலி
    யாக்கார வடையொண்டாம்
பரைபதான் மகிழ்ந்தா லாக்கொள்பு மொக்கநிய
    புகைக்குமலி வருகருப்பப்
பொரம்பல சேவிதலை செய்வெய்து கம்பிமெய்
    யக்கிசெலு மொபாழிலே
துன்பமா யிவைபசோ லுலகாளை லயமுமொரு
    சொப்பனத் திறுச்செண்குவேன்
சத்திக் குணமான பரதெய்வ மோருஞ்
    சோதியே சகலாசியே. (௬)

* பக்தமகுக்கல் மலைவும்; ககவாபரி, சவிகுலமதிவசல வளவம்; சோமகள் வலவம்; வக்கமெக்கு வளவும்; சர்மகாவலி வலவும் முறையே வடமொழியிற் பிரக்க வன்னமே தன்மகாசிசியரும், செகாயமளியரும், கம்பாடரும், சேவிசாதத்தாரும், பிரயோக விவேகநூலாரும் கூறுவதுபோல 'சோமந்திவிர்ப்ப' என வடமொழியிற் பிறந்தவன்னமே கூறவும் இக்காசிரியரும்.

வெண்ணிப்பொ ருதெந்துடன் கானின்புட் கைடக்கவும்
வெம்பெக்கெண்டு தைத்திருத்துதல்
விஸ்திரைத் தகைமோ தன்னையுமொ ராயிரேன்
வெமெழுவரை மோவருவாசொல்
கைக்கோர கைகோமரனென் முதக்கைஷ சிறப்புடனை
கையக்கின் வெருவதிடமே
மாகுற மெத்தப்ப மக்தமைன் மாமென்னே
மாண்டமீ கைவிட்டாகத
மிக்கோர மொன்றிலே டிடநகையை தாக
மெல்ப்தால் நகமென்ற
பொன்றெண்ணு மொருதீமை யாயுயன் டாலும
பிரைறந்கைக நாதிமா
தொன்னீமை மாலைக்கு மானிடம்மை குத்தமெ
வியனென்று கம்புகிம்மேன்
சுத்தசித் தனமாமை பரிதந்ம போருந்
சோதியே சுகுமாரியே. (௩)

பத்தமைத சுற்றிவ சிராமைசமென் மெருமூச்
பக்கிப்பி லக்கும்போகப்
பாக்கியநபி ரணமைய மென்றுமொரு பூமிவிமை
பக்கின்மை பதமென்னமே
சுத்தமயந் சகைடமென்னி நாமெைக வித்தகனி
கனிவிக்க லைத்தகனிபோற்

கண்டதிங் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
    கனிவாய்தி றந்துமொன்றைப்
பெற்றவனு மல்லேன் பெறுதவனு மல்லேன்
    பெருக்கத் தவித்துளறியே
பெண்ணீர்மை யென்னவிரு கண்ணீரி றைத்துநான்
    பேய்போலி ருக்கவுலகஞ்
சுற்றிநகை செய்யவே யுலையவிட் டாயெனிற்
    சொல்லவினி வாயுமுண்டோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
    சோதியே சுகவாரியே. (சு)

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
    வறிவேயெ னறிவிலூறு
மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
    னாடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
    மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
    வேசற்ற யர்ந்தேனியா
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னலுமுனை
    யிடைவிட்டு நின்றதுண்டோ
வென்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
    யாதேனு மறியாவெறுந்

துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரோடு கூட்டுகெண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௭)

பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மைகாட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றேய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்
தாராள மாய்நிற்க நிர்ச்சிந்தை காட்டிச்
சதாகால நிட்டையெனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலயந்
தனைக்காட்ட நாள்செல்லுமோ
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி மழைபொழிதல்போற்
கால்வீசி யின்னிப்ப டர்ந்துபர வெளியெலாங்
கம்மியா னந்தவெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௮)

பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று
பேசாது துறவாகியே

பேசாத பெரியோர்க ணிருவிகற் பத்திறற்
 பேசார்கள் பரமகுருவாய்ப்
போதிக்கு முக்கணிறை நேர்மையாய்க் கைக்கொண்டு
 போதிப்ப தாச்சறிவிலே
போக்குவர வறவின்ப நீக்கமற வசனமாப்
 போதிப்ப தெவனையனே
சாதித்த சாதனமும் யோகியர்க ணமதென்று
 சங்கிப்ப ராதலாலே
தன்னிலே தானு யயர்ந்துவிடு வோமெனத்
 தனியிருந் திடினங்ஙனே
சோதிக்க மனமாயை தனையேவி னலடிமை
 சுகமாவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
 சோதியே சுகவாரியே. (க)

அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
 வலரிமண் டலநடுவிலோ
வனனடுவி லோவமிர்த மதிநடுவி லோவன்பு
 ரகமுருகி மலர்கவேித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
 திகந்தத்தி லோவெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
 சித்தாந்த நிலைதன்னிலோ

கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டகூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த
தொண்டர்களி டத்திலோ நீவீற்றி ருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௰)

எந்தநாள் கருணைக்கு ரித்தாகு நாளெனவு
மென்னிதய மெளனவாட் டமே
யேதென்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவறவு
மிற்றைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதிலிட்ட மெழுகாகி யுள்ளம்
பதைத்துப்ப தைத்துருகவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
தெய்வநீ யன்றியுளதோ
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி யூடுசெலுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தன்முறையோ

சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௰க)

எந்நாளு முடலிலே யுயிராமு னைப்போ
லிருக்கவில்லை யோமனமெனும்
யானுமென் னட்பாய்பி ராணனுமெ மைச்சடம
தென்றனைச் சிற்றென்றுமே
யந்நாளி லெவனோ பிரித்தா னதைக்கேட்ட
வன்றமுத லின்றுவரையு
மரியாய மாயெமை யடக்கிக்கு றுக்கே
யடர்ந்தரசு பண்ணியெங்கண்
முன்னேநீயென்ன கோட்டைகொண் டாயென்று
மூடமன மிகவுமேச
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன்
முறைமையோ பதினாயிரஞ்
சொன்னாலு மின்னரு ளிரங்கவில்லை யேயினிச்
சுகம்வருவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (௰உ)

ஆக பாடல்—அஅ.

எங்குநிறைகின்றபொருள்.

அவ்வனன்றி யோரணுவு மசையாதெ னும்பெரிய
வாத்தர்மொழி யொன்றுகண்டா
லறிவாவ தேதுசில வறியாமை யேதிவை
வறிந்தார்க ளறியார்களார்
மௌனமொடி ருந்தசா ரென்போலு டம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனமெனவு மொருமாயை யெங்கேயி ருந்துவரும்
வன்மையொடி ரக்கமெங்கே
புவனம்ப டைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொரு மையுமெவ்விட
மெவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞ
ராதுமுனை யன்றியுண்டோ
விசபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (க)

அன்னைய தெனயெனுஞ் சிலசமய மின்னையே
யையாவை யாவென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்றுமிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேற்

பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
 பிறவுமே நிலயமென்றுந்
தன்னேரி லாததோ ரணுவென்று மூவிதத்
 தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
 சதாஞான வானந்தமா
யென்னையனே கருணை விளையாட்டி ருந்தவா
 றெம்மனோர் புகலவெளிதோ
விகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
 யெங்குநிறை கின்றபொருளே. (௨)

வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
 வேறுமுள கலைகளெல்லா
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
 விரிவாயெ டுத்துரைக்கு
மோதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
 யுண்டுபணு ஞானமாகு
மூகமனு பவம்வசன மூன்றுக்கு மொவ்வுமீ
 துபயவா திகள்சம்மத
மாதலினெ னக்கினிச் சரியையா திகள்போதும்
 யாதென்று பாவிக்கநா
னதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
 னத்துவித மார்க்கமுறலா

மேதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செ
யெந்தைநீ குறையுமுண்டோ
விகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (௫)

சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டியாட்டித்
தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றிற்
றொடுக்குந்தொ டுத்தழிக்கும்
பொல்லாத வாதனை யெனுஞ்சத்த பூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருடனி லடங்காத பூவைபோற் றானே
புறம்போந்து சஞ்சரிக்குங்
கல்லோடி ரும்புக்கு மிகவன்மை காட்டிடுங்
காணாது கேட்டவெல்லாங்
கண்டதாக் காட்டியே யணுவாச் சுருக்கிடுங்
கபடநா டகசாலமோ
வெல்லாமும் வலதிந்த மனமாயை யேழையா
மென்னா லடக்கவசமோ
விகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (௬)

கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னானலுமோ

கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
யண்ணு பரஞ்சோதி யப்பா வுனக்கடிமை
யானெனவு மேலெழுந்த
வன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை
யகிலமுஞ் சிறிதறியுமேற்
றண்ணரு நின்னருளறியாத தல்லவே
சற்றேனு மினிதிரங்கிச்
சாசுவத முத்திநிலை யிதென்றுணர்த்தியே
சகசநிலை தந்துவேறொன்
றெண்ணமலுன்னடி சுகமாயிருக்கவே
யேழையேற் கருள்செய்கண்டா
யிகபரமிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (௫)

காகமானவைகோடி கூடினின் றாலுமொரு
கல்லின்முன்னெதிர்நிற்குமோ
கர்மமானவைகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப்ர வாகவருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லவோ
தமியேற்க ருட்டாகமோ
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலாஞ்
சங்கேத மாய்க்கூடியே

தேகமா னதைமிகவும் வாட்டுமே துன்பங்கள்
சேராமல் யோகமார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுதூரநா
னேகமாய் நின்றோ டிருக்குநா ளெந்தநா
ளிந்நாளின் முற்றுறுதோ
விகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (அ)

ஒருமைமன மாகியே யல்லலற நின்னருளி
லொருவனென் வந்திருக்கி
னுலகம்பொ ருதஞோ மாயாவி சித்ரமென
வோயுமோ விடமில்லையோ
வருநடைய நின்னன்பர் சங்கைசெய் திடவோ
வலதுகிர்த் தியகர்த்தரா
யகிலம்ப டைத்தெம்மை யாள்கின்ற பேர்சில
ரடாதென்ப ரோவகன்ற
பெருமைபெறு பூரணங் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோல மாய்விதண்டை
பேசுமோ வலநதான் பரிபாக காலம்
பிறக்கவில்லை யோதொல்லையா
மிருமைசெறி சடவினை யெதிர்த்துவாய் பேசுமோ
வேதுளவு சிறிதுபுகலா

யிகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (எ)

நில்லாது தேகமென நினைவுண்டு தேகநிலை
நின்றிடவு மௌனியாகி
நேரோயு பாயமொன் றருளினையை யோவிதனை
நின்றனுட் டிக்கவென்றற்
கல்லாத மனமோ வொடுங்கியப ரதிபெறக்
காணவிலை யாகையாலே
கையேற்று ணும்புசிப் பொவ்வாதெ நாளுமுன்
காட்சியிலி ருந்துகொண்டு
வல்லாள ரா*யியம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல்செய்து
மனத்தின்ப டிக்கெலாஞ் சித்திபெற லாஞானம்
வாய்க்குமொரு மனுவெனக்கிங்
கில்லாமை யொன்றினையு மில்லாமை யாகவே
யிப்போதி ரங்குகண்டா
யிகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (அ)

மரவுரியு டுத்துமலை வனநெற்கொ றித்துமுதிர்
வனசருகு வாயில்வந்தால்

* இயம நியமாதி என்றார்.—இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என்பவற்றை.

வன்பசித விர்த்துமனல் வெயிலாதி மழையால்
வருந்தியும் மூலவனலைச்
சிரமளவெ ழுப்பியு நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்லவென்று
சிற்சுகவ பேட்சையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்தினர் யாம்பாவியேம்
விரவுமறு சுவையினொடு வேண்டுவபு சித்தனையில்
வேண்டுவவெ லாமுடுத்தி
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொருவ ருத்தமின்றி
யிரவுபக லேழையர்கள் சையோக மாயினோ
மெப்படிபி ழைப்பதுனையா
யிகபரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (க)

முத்தனைய மூரலும் பவளவா யின்சொலு
முகத்திலகு பசுமஞ்சளு
மூர்ச்சிக்க விரகசந் நதமேற்ற விருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமைம யக்கியிரு கண்வலையை வீசியே
மாயாவி லாசமோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ

புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத
    பொன்னாட்டும் வந்ததென்றாற்
போராட்ட மல்லவோ பேரின்ப முத்தியிப்
    பூமியிலி ருந்துகாண
வெத்தனைவி காதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
    யிவ்வுலக மறியாததோ
விக்பரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
    யெங்குநிறை கின்றபொருளே.   (ம)

உன்னிலைய மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
    துளறிமெ வத்தையாகி
யுருவுதான் காட்டாத வாணவமு மொளிகண்
    டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினாற்
    றுவசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற்
    றடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
    மூதறிவு மேலுதிப்ப
முன்பினொடு கீழ்மே னடுப்பக்க மென்னமன்
    முற்றுமா னந்தநிறைவே
யென்னிலைமை யாய்நிற்க வியல்புகூ றருள்வடிவ
    மெந்நாளும் வாழிவாழி

யிசையரமி ரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே. (கக)

ஆக பாடல் - கக.

சச்சிதானந்த சிவம்.

பாராதி ககனப் பரப்புமுண் டோவென்று
படர்வெளிய தாகியெழுநாப்
பரிதிமதி காணுச் சுயஞ்சோதி யாயண்ட
பகிரண்ட வுயிரொவைக்கு
நேராக வறிவா யகண்டமா யேகமாய்
நித்தமாய் நிர்த்தொந்தமாய்
நிர்க்குணவி லாசமாய் வாக்குமன மணுகாத
நிர்மலா னந்தமயமாய்ப்
போராது நிற்றிநீ சும்மாவி ருந்துதான்
பேரின்ப மெய்திடாமற்
பேய்மனம தண்டியே தாயிலாப் பிள்ளைபோற்
பித்தாக வோமனனநான்
சாராத படியறிவி னிருவிகற் பாங்கமாஞ்
சாசுவத நிட்டையருளாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (க)

குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு
கொள்ளல்போ லைந்துபூதங்
கூடுஞ்சு ருங்கிலைச் சாலேக மொன்பது
குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெண்ணாரம் பாவென்பு தசையினான்
மதவேள்வி ழாநடத்த
வைக்கின்ற கைத்தேனை வெண்ணீர்செ நீர்கணீர்
மலநீர்பு ணீரிறைக்கும்
விடக்குத்து ருத்தியைக் கருமருந் துக்கூட்டை
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமர முறகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்துபொய்யாஞ்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானாகி நிற்பதென்றோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (௨)

பாகத்தி னாற்கவிதை பாடிப்ப டிக்கவோ
பத்திநெறி யில்லைவேத
பாராய ணப்பனுவன் *மூவர்செய் பனுவலது
பகரவோ விசையுமில்லை
யோகத்தி லேசிறிது முயல்வென் றாற்றேக
மொவ்வாதி னூண்வெறுத்தா

* மூவர்செய் பனுவலென்றார்.—ஆளுடையபிள்ளையார்முதலிய மூவருளிச்செய்ததேவார மேழு திருமுறைகளையும்.

னுயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னூற்செய்யவோ
மோகத்தி லேசிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்கவென்றான்
முற்றாது பரிபாக சத்திக ளனேகநின்
மூதறிவி லேயெழுந்த
தாகத்தி லேவாய்க்கு மமிர்தப்ர வாகமே
தன்னந்த னிப்பெருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (௩)

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
மிவ்வுலக மெவ்வுலகமோ
வென்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
வென்னின்மக மேருவாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கினாளுந்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்த்ரசால
மமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
யம்மம்ம வெல்லவெளிதோ
வருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
தருளோவ லாதுமருளோ

சமையநெறி காணுத சாட்சிநீ சூட்சுமமாத்
 தமியனேற் குளவுபுகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
 சச்சிதா னந்தசிவமே. (௪)

இனியேதெ மக்குனருள் வருமோவெ னக்கருதி
 யேங்குமே நெஞ்சமையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக்கி ருப்பரொன்
 றெண்ணவோ திடமில்லையே
யநியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
 மந்தகற் காளாகவோ
வாடித்தி ரிந்துநான் கற்றதுங் கேட்டது
 மவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
 கந்தமூ லங்களேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப்பு சித்துநான்
 கண்மூடி மௌனியாகித்
தனியேயி ருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
 சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
 சச்சிதா னந்தசிவமே. (௫)

மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு
 வாயிலுடன் மதியகடுதோய்

மாடகூ டச்சிகர மொய்த்தசந் திரகாந்த
மணிமேடை யுச்சிமீது
முத்தமிழ்மு ழக்கமுடன் முத்தநகை யாரொளொடு
முத்துமுத் தாய்க்குலாவி
மோகத்தி ருந்துமென் யோகத்தி னிலைநின்று
மூச்சைப்பி டித்தடைக்நுக்
கைத்தலந கப்படை விரித்தபுலி சிங்கமொடு
கரடிநுழை நூழைகொண்ட
கானமலை யுச்சியிற் குகையூடி ருந்துமென்
கரதலா மலகமென்னச்
சத்தமற மோனநிலை பெற்றவர்க ளெய்வர்காண்
சனகாதி துணிவிதன்றே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (கூ)

கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்
கண்டவே தாகமத்தின்
காட்சிபுரு டார்த்தமதின் மாட்சிபெறு முத்தியது
கருதினனு மானமாதி
யுத்திபல வாநிருவி கற்பமே யில்லையா
லொன்றேடி ரண்டென்னவோ
வுளையுமிலை நீயுமிலை நானுமிலை யென்பது
முபாயநீ யுண்டுநானுஞ்

சித்தமுன றனிலிலே பெறுஞ்சாசன ரீயுமதை
　　தெரியார்க டெரியரோதா
செப்புமெ லவிது பொப்புவலை யல்லவே
　　சின்மூர்த்தி ராங்கமரயிற்
சத்தாதி வெளியண்ட குருவெனனீ லடைகிறுந்
　　தமியனேக் குசுவுபொருளே
சக்கமயி புரான வைண்டத் துவமான
　　சச்சிதா னந்தசிவமே. (௩)

காயத்த னாதிக ளக்கேது சொற்றதோ
　　கடவுளீ யாக்களடியேங்
தன்மயத் தத்திறஞ் சன்மார்க் கத்தெதுக்
　　கற்பித்த தன்னைதுருவே
வாயார வண்டபோ ரார்த்துவது மொர்த்தமே
　　லைவதுவு மெக்களுலக
வாக்பால் சிக்கமிக் னைதிகவெ ருங்குகிலா
　　வாழ்த்திறுத் மெதமேபொருள
தோபா து பெறவெனை முறைமிட்ட தாற்பின்ன
　　குசறுவது சுருடமனா று
முடிமொதி பிதெல்ணீ ஞானமொதி மெத்தமெதி
　　புவகியெ மிதைுமொருத்தும்
தாமான கருவெய ழுணக்குண டெனக்கினிச்
　　சற்சமக் தொடவருள்செய்வாய்

சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (அ)

இன்னம்பி றப்பதற் கிடமென்னி னிவ்வுடல
மிறவாதி ருப்பமூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண்ட லத்திலுற
வென்னம்மை குண்டலினிபாற்
பின்னம்பி றக்காறு சேயெனவ ளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டென்னி லிம்மையே
பேசுகர்ப் பூரதீப
மின்னும்ப டிக்ககண் டாகார வன்னைபால்
வினையேனை யொப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதன் பிகவநன் றிவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னந்த னிச்சிறிய னற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (௯)

வேதாவை யிவ்வணம் விதித்ததே தென்னிலுன்
விளைப்படகுதி யென்பனந்த
வினைபேச வறியாது சிற்கவிவை மனறால்
விளைந்தான் மனைனாடிற்

போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
    போதமுங் குல்விளக்கம்
பொய்யன்று மெய்யுமன்று யாவுமே நீயென்று
    போக்குவர வறநிகழ்த்து
மாதார வாசேய முழுதுநீ யாதலா
    லகிலமீ தென்னை யாட்டி
யாடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ
    யருளுநீ மோனஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
    தமருநீ யாவுநீகாண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
    சச்சிதா னந்தசிவமே. (௰)

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழ லிடையினுங்
    குளிர்தீம்பு னற்கையள்ளிக்
கொள்ளுமிட மந்நீ ரிடைத்திளைத் தாடலுங்
    குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவ நின்றதென முன்றிலிடை யுலவல்
    வசதிபெற போதும்வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
    மகிழ்போதும் வேலையமுதம்
விக்கைபெற வறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
    வேளையினு மாலைகந்தம்

வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினுஞ்
சந்ததமு நின்னருளை மறவாவ ரந்தந்து
தமியேனை ரட்சைபுரிவாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே. (௰க)

ஆக பாடல் - ராய.

தேசோமயானந்தம்.

மருமலர்ச் சோலைசெறி நன்னீழன் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா விசைசொல்லு மியமநிய மாதியா
மார்க்கத்தி னின்றுகொண்டு
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச னாதிசேர்த்துக்
காலைப்பி டித்தனலை யம்மைநுண் டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
யுருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காம
லுணர்வான விழியைநாடி
யொன்றோடி ரண்டெனாச் சமரசசொ ரூபசுக
முற்றிடவென் மனவண்ணமே

திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
    தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
    தேசோம யானந்தமே. (க)

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கிநா
    னென்னுமொரு மகரவாய்ப்பட்
டிருவினையெ னுந்திரையி னெற்றுண்டு புற்புத
    மெனக்கொங்கை வரிசைகாட்டுந்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
    சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத வாசையாங் கானாறு வானதி
    சுழலென்ன மேலெறிப்பக்
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங்
    கைவிட்டு மதிமயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருமென் றஞ்சியே
    கண்ணருவி காட்டுமெளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
    செய்வையோ சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
    தேசோம யானந்தமே. (உ)

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
    சந்தையிற் கூட்டமிதிலே

சந்தத மிக்கமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுபோ லிந்த்ரசா லக்கோலம்
வந்தனைபொ றுமைமேலாம்
வைத்தமனை மக்கிளைஞர் சேர்த்தமை பாண்டமோ
வாஞ்சையொழி லாதமனமே
யெந்தநா ளுந்தெரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடந்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள நிறைவிலே
யானென்ப தறமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோமயானந்தமே. (௫)

ஆடாமை யோய்ந்திட்ட பம்பரம் போல்வினை
யடங்கியவ மவிழுமோ
யறியாமை யாகின்ற விருளகல விருவொளிய
மல்லாதி ருந்தவெளிபோற்
கோடாதெ னக்கண்டெனக் குண்ணிறை சாந்தவெளி
கூடவின் பாநிதமுங்
கூடினே னேசரியை கிரியையின் முயன்றநெறி
கூடினே னேவல்லன்யா

விடாத வொன்று விட்டவிடு தப்பிலே
விளைவிக்கப் பொலாணமென்று
மிருத்தியி லக்கிடப் போருமா ருணாம்
வெறாழக்கு மிப்பறுக்
தேடாத நீக்கவொரு மறிவுற்ற தெள்ளொளியே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

பாடாத பாடலிப் பாத்ததனின் சுவையும்
பஞ்சபூச் சொல்லுலரியனைப்
பாடிநெறு பாரிபிறு தென்றநவை கூடல்
பாரார்த்த ச்துவெல்லவே
மாறாது மறுவெஞ்சு மறுதிரிக நாடவே
மனமென மொழியும்
வாழிய வொழிய வெங்குநிறை தடமென
மாயமெய லக்கவிநான்
தேடாது வரியவன் முகலாட்ட முகலன்றி
வாடாமெ லக்கதுவினாதி
வைத்திடா வன்னமே யக்கேத மறித்தல்
வனவன மறிப்பித்த தார்
தேடாத தெய்வமோ தெட்டத் தெட்டவே
தேடரிய சத்தாகியென்

சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (ரு)

பிறியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்ப வுண்மையை யளித்தனையென் மனமறப்
பேரம்ப லக்கடவுளா
யறிவாயி ருந்திடு நாதவொலி காட்டியே
யமிர்தப்ர வாகசித்தி
யருளினைய லாதுதிரு வம்பலமு மாகியெனை
யாண்டனைபி னெய்திநெறியாய்க்
குறிதான ளித்தனைநன் மரவரிகொ ளங்கணக்
கோலமா யசபாநலங்
கூறினபின் வெளியாய்ச் சும்மாவி ருக்கநெறி
கூட்டினையெ லாமிருக்கச்
சிறியேன்ம யங்கிமிக வறிவின்மை யாவன்றோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (சு)

ஆராலெ னக்கென்ன போதித்து மென்னவென்
னறிவினைம யக்கவசமோ
வண்டகோ டியையெலாங் கருப்பவறை போலவு
மடுக்கடுக் காவமைத்துப்

பேராம னின்றபர வெளியிலே மனவெளி
 பிறங்குவத லாதொன்றினும்
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப்
 பேரின்ப முத்திநிலையுந்
தாராது தள்ளவும் போகாது ஞலது
 தள்ளினும் போகேனியான்
றடையேது மில்லையாண் டவனடிமை யென்றுமிரு
 தன்மையினு மென்வழக்குத்
தீராது விடுவதிலை நடுவான கடவுளே
 தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
 தேசோம யானந்தமே. (எ)

கந்துகம தக்கரியை வசமாந டத்தலாங்
 கரடிவெம் புலிவாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
 கட்செவியெ டுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
 வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத்து லாவலாம்
 விண்ணவரை யேவல்கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
 சரீரத்தி னும்புகுதலாஞ்

சலமென டக்கலாங் கனன்மேலி ருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மாவி ருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (அ)

எல்லாம றிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையென மிவ்வுலகமீ
தேதுமறி யாதவ னெனப்பெயர் தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாத வறிவிற் கடைப்பட்ட நானன்று
கையினு லுண்மைஞானங்
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவனு
னல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
ருபாச வடிவமான
வந்தகா நீயொரு பகட்டாற்ப கட்டுவ
தடாதடா காசுநம்பாற்
* செல்லாத டாவென்று பேசவா யதுதந்த
செல்வமே சத்தாகியென்

---

* எடா என்பது சோழன் முன்னிலைப் பெயரொன்றமையான் அஃதிடைச்சொல் லன்மையுணர்க என்பர். இலக்கணவிளக்கச் சூறாவளியாரும்;அது அடா எனமரீஇயது.

சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (கூ)

மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்
மென்சிலம் பொலிகளார்ப்ப [போன்
வீங்கிப்பு டைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்னேவலா
லென்போல லைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்க
ளிருவர்களி லொருவருண்டோ
வென்செய்கே னம்மம்ம வென்பாவ மென்கொடுமை
யேதென்றெ டுத்துமொழிவே
னன்பால்வி யந்துருகி யடியற்ற மரமென்ன
வடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம்
மடிகளே யுமதடிமை யாங்களெனு நால்வருக்
கறமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவாலி ருக்கின்ற
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (ம)

புத்தமிர்த போகமுங் கற்பகந னீழலிற்
பொலிவுறவி ருக்குமியல்பும்
பொன்னுலகி லயிராவ தத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்கமு

மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ
மாலுமொரு சுட்டுமறவே
வைக்கின்ற வைப்பாளன் மௌனதேசிகனென்ன
வந்தநின் னருள்வாழிகாண்
சுத்தபரி பூரண வகண்டமே யேகமே
சுருதிமுடி வானபொருளே
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (௰க)

ஆக பாடல்—௱உக.

சிற்சுகோதயவிலாசம்.



பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காக மோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடுது ருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேண்டன சாலையை

மோக வாசைமுறி யிட்ட பெட்டியைமு
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
மூடங்க லார்கிடை சரக்கினை
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதியகு லாலனார்
வனைய வெய்யதடி கார ரனையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெ னக்கருதி
யைய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (க)

குறிக ளோடுகுண மேது மின்றியன
லொழுக நின்றிடுமி ருப்பனற்
கூட லின்றியது வாயி ருந்தபடி
கொடிய வாணவவ றைக்குளே
யறிவ தேதுமற வற்வி லாமைமய
மாயி ருக்குமெனை யருளினா
லளவி லா*தனு கரண மாதியை
யளித்த போதுனை யறிந்துநான்

* தனுகரணமாதி என்றது தனு கரண புவன போகங்களை.

பிறிவி லாதவண நின்றி டாதபடி
பலநி றங்கவரு முபலமாய்ப்
பெரிய மாயையில ழுந்தி நின்னதுப்ர
சாத நல்லருண் மறந்திடுஞ்
சிறிய னேனுடனே வந்த ணேந்துசுக
மாயி ருப்பதினி யென்றுகாண்
டெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (உ)

ஐந்து பூதமொரு கான னிமொன
வடங்க வந்தபெரு வானமே
யாதி யந்தநடு வேது மின்றியரு
ளாய்நி றைந்திலகு சோதியே
தொந்த ரூபமுட னரூப மாதிகுறி
குணமி றந்துவளர் வஸ்துவே
துரிய மேதுரிய வுயிரினுக் குணர்வு
தோன்ற நின்றருள்சு பாவமே
யெந்த நாளுநடு வாகி நின்றொளிரு
மாதி யேகருணை நீதியே
யெந்தை யேயெனவி டைந்தி டைந்துருகு
மெளிய னேன்கவலை தீரவுஞ்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள்
செய்ய நானுமினி யய்வதே

தெரிவ தற்கரிய பிரம மேயமல
திருக் கோதயவி லாசமே. (௩)

நூல மென்றபல வேடர் கொட்டம
தடங்க மாக்கடவன் முட்டியா
யடவி நின்றமலே யருகி னின்றசரு
காதி தின்றபணி வெயிலிறுன்
மெய்வ ருத்துதவ மில்லை நற்சரியை
கிரியை யோகமெறு மூன்றதாய்
மேவ நின்றசவு பான னன்னெறி
விரும்ப மில்லையுல கத்திலே
பொய்மு டங்குதொழில் யாத தற்குகல
கார திற்றொழிலை டத்திடேக்
புத்தி பூகமறி வற்ற தூசிலை
பொருளி லக்கருத மருளல்பால்
தெய்வ சலருக்ப வடைத்த வன்பனோர்க்
சேர வக்கருளை கூர்ஜவையோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
திருக் கோதயவி லாசமே. (௪)

மச மானவரு வான வீயருவி
றுவ சேகவரு வாகியே
மெய்த்த சாலதில லோடி டெட்டிசெய
ய்லசய காலகலா யாலான்றுத

லாக நாளதுவ ளாக்கு முன்னடிமை
 கூட வேசனன மானதோ
வனந்த முண்டுநல சனன மீதிதனு
 ளறிய வேண்டுவன வறியலா
மோக மாதிதரு பாச மானதை
 யறிந்து விட்டுனையு மெனையுமே
முழுது ணர்ந்துபர மான வின்பவெள
 மூழ்க வேண்டுமிது வின்றியே
தேக மேநழுவி நானுமோ நழுவில்
 பின்னை யுய்யும்வகை யுள்ளதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
 சிற்சு கோதயவி லாசமே. (௫)

நியம லட்சணமு மியம லட்சணமு
 மாச ஞதிவித பேதமு
நெடிது ணர்ந்திதய பத்ம பீடமிசை
 நின்றி லங்குமச பாநலத்
தியல றிந்துவளர் மூல குண்டலியை
 யினிதி றைஞ்சியவ ளருளினு
லெல்லை யற்றுவளர் சோதி மூலவன
 லெங்கண் மோனமனு முறையிலே
வயமி குந்துவரு மமிர்த மண்டல
 மதிக்கு ளேமதியை வைத்துநான்

வாய்மடுத்தமிர்த வாரி யைப்பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செயமி குந்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞானநெறி யடைவனோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (௬)

எறிதி ரைக்கடனி கர்த்த செல்வமிக
வல்ல லென்றொருவர் பின்செலா
தில்லை யென்றுமுரை பேசி டாதுலகி
லெவரு மாமௌன மிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிட்டை கூடவெந் நாளுமே
யறிவி னின்றகுரு வாயு ணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே
யகில மீதுவர வந்த சீரருளை
யைய வையவினி யென்சொல்கேன்
சிறிய னேனைநம சடிமை யென்றனது
திருவு ளத்தினிலி ருந்ததோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (எ)

எவ்வுயிர்த் திரளு முலகி லென்னுயி
ரெனக்கு ழைந்துருகி நன்மையா
யிதமு ரைப்பவென தென்ற யாவையு
மெமெத்தெ திர்த்துமத யானைபோற்
சவ்வை யற்றநடை பயில வன்பரடி
கண்ட தேயருளின் வடிவமாக்
கண்ட யாவையுங் கண்ட மென்னவிரு
கைகு வித்துமலர் தூவியே
பவ்வ வெண்டிரைகொ டுத்த தண்டரளம்
விழியு திர்ப்பமொழி குழறியே
பாடி யாடியுரு டைந்து டைந்தெழுந்து
பாவை யொத்தசைத லின்றியே
திவ்ய வன்புருவ மாகி யன்பரொடு
மின்ப வீட்டினிலி ருப்பனே
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (அ)

மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய்
மன்னு தேசமொடு கால மாதியை
மறந்து நின்னடிய ரடியிலே
பத்தி யாய்நெடிது நட்பு மென்னையொரு
மைய றந்தகில மாயையைப்

பாரு பாரென நடத்த வந்ததென
பார தத்தினுமி துள்ளதோ
சுத்த நித்தவியல் பாருமோ வுனது
விசுவ மாயைநடு வாகவே
சொல்ல வேண்டும்வகை நல்ல காதிகளை
சொல்லு மாயையினு மில்லையென்
சித்த மிப்படிம யங்கு மோவருளை
நம்பி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே. (௫)

பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
*மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலைவ ணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெய
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்க டந்
சொன்ம யக்கமது [illegible] வங்கைகொடு
மோன ஞானம [illegible] ளர்க்கிடே

* யாங்களேகடவுள் என்றமையான் இது சான்மவாதிகள் கூற்றாக் [illegible] ளக.

சத்த சித்தவரு ளியல்ப தாகவுள
  சோம சேகரகிர் பாலுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகொறு
  வெம்மு கத்திலும்வ ணங்குவேன்
நெரிவ தற்கரிய பிரம மேயமல
  சிற்சு கோதயவி லாசமே. (உ)

ஆக பாடல்—கருக.

ஆகாரபுவனம் சிதம்பர ரகசியம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிவிருத்தம்.

ஆகார புவனமின்பா கார மாக
  வங்ஙனே யொருமொழியா லகண்டா கார
யோகானு பூதிபெற்ற வன்ப ராவிச்
  குறுதுணையே யென்னளவு முகந்த நட்பே
வாகாரும் படிக்கிசைகிங் கிணிவா யென்ன
  மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோற்
றேகாதி யலகமெங்குங் கலந்து தானே
  திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. (க)

அனந்தபத வியிர்கெடாத ருயிரா யென்று
  மானந்த நிலையாகி யனைவைக் கெட்டாத்

தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதசத்தா யருட்கோயிற் றழைத்த தேவே
யினம்பிரிந்த மான்போரு னிடையா வண்ண
மின்பமுற வன்பர்பக்க லிருத்தி வைத்துக்
கனந்தருமா கனமேதண் ணருளிற் றூனே
கனிபலித்த வானந்தக் கட்டிப் பேறே. (உ)

பேறனைத்து மனுவெனவே யுதறித் தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
வீறனைத்து மின்னெறிக்கே யென்ன வென்னை
மேவென்ற வரத்தே பாழ்வெய்ய மாயைக்
கூறனைத்துங் கடந்தவெல்லைச் சேட மாகிக்
குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற
வாறனைத்தும் புகுங்கடல்போற் சமய கோடி
யத்தனையுந் தொடர்ந்துபுகு மாதி நட்பே. (௩)

ஆதியந்த மெனுமெழுவா யீறற் றோங்கி
யருமறையின் னமுங்காணு தரற்ற நாணு
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப்
பெற்றியரும வாய்வாரப் பேய ராகச்
சாதகமோ னத்திலென்ன வடவா னீழற்
றண்ணருட்சந் திரவெளி தடக்கைக் கேற்க
வேதகசின் மாத்திரமா யெம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே. (௪)

விமலமுதற் குணமாகி நாற்றெட் டாதி
வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க
வமையுமிலக் கணவடிவா யதுவும் போதா
தப்பாலுக் கப்பாலா யருட்கண்ணாகிச்
சமரமுடன் கலப்புமவிழ் தலும்யாங் காணத்
தண்ணருடன் தெமைக்காக்குஞ் சாட்சிப் பேறே
யிமையளவு முபகார மல்லால் வேறொன்
றியக்காநிர்க் குணக்கடலா யிருந்த வொன்றே. (௬)

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
வொளியாகி வெளியாகி யுருவ மாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுட னுற்பத்தி நண்ணு தாகி
யின்றாகி நாளையுமாய் மேலு மான
வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
கடிதினில்வந் தருள்கூருங் கருணை வின்னே. (௲)

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
யாரமிர்தே யென்கண்ணே யரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி

விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும் [னே.
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கே
விண்ணவர்க் கிறைமுதலோர் யாதாதி
விளங்குசத்த ரிஷிகள்சன கானை யல்லோ
ரெண்ணரிய சித்தர்மரு வாதி யோர்த
ரிருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக்
கண்ணனைக் குரலம்பதிக்குத் தாமே யுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியதல் லறிவாலிச் சமயந் தன்றே
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும். (அ)

செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றன்
றெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
வப்பரிசா லருமறையே பிரமாணமிப்பா
லதிர்சயத்தால் தெரிவித்தே *யனுமானாதி
யொப்பவிரித் துரைப்பரிக்கன் பொய்மெய் யென்ன
வொன்றிலதென் றெனப்பாய்ப தொய்வார் தார்க்கு
மிப்பரிசாஞ் சமயமுமோ யல்ல வாகி
யாவசமய முமிணங்கு மியல்ப தாகி. (கூ)

இயல்பென்றத் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்

* அனுமானாதி என்றது அநுமானம், காண்டல், உவமானம் முதலிய அளவைகளை என்க.

பயினருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சோபான பட்சங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
யயர்வறச்சென் னியில்வைத்து ராசாங்கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ. (௰)

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரொல்லா நவெறிய *வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்று
மிந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகப்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம். (௰௧)

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானென் றுகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
†பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்

---

* அணிமாவாதி என்றது. அணிமா, கரிமா, இலகிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்பவற்றை என்க.

† இதனை 'ஆரணங்கள் முடிந் தபதத் தாளைத்தொளி' என்ற கோயிற்புராணத் திருவிருத்தத்தானுமுணர்க.

கென்மார்க்க மிருப்பதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
சன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னனந்தங் காண்ட லாகும். (௰௨)

காண்டல்பெறப் புறத்தினுள்ள படியே யுள்ளுங்
காட்சிமெய்ந்நூல் சொலும்பதியாங் கடவுளேநீ
நீண்டநெடு மையுமகலக் குறுக்குங் காட்டா
நிறைபரிபூ ரணவறிவாய் நித்த மாகி
வேண்டுவிருப் பொடுவெறுப்புச் சமீபந் தூரம்
விலகலணு குதன்முதலாம் விகா ரங்கள்
பூண்டவள வைகண்மனவாக் காதி யெல்லாம்
பொருந்தாம லகம்புறமும் புணர்க்கை யாகி. (௰௩)

ஆகிய*சற் காரியவூ கத்துக் கேற்ற
வமலமாய் நடுவாகி யனந்த சத்தி
யோகமுறு மானந்த மயம தாகி
யுயிர்க்குயிரா யெந்நாளு மோங்கா நிற்பாய்
மோசவிருண் மாயைவினை யுயிர்கட் கெல்லா
மொய்த்ததென்கொ லுபகார முயற்சி யாகப்
†பாகமிக வருளவொரு சத்தி வந்து [கொல்.
பதிந்ததென்கொ லென்னுமப் பான்மை யென்

---

* சற்காரியவூக மென்றது-சற்காரிய வாதத்தை.

† 'பாகமிகவருளவொருசத்திவந்துபதிந்த' தென்றது நால்வகைச் சத்திநிபாதத்தை.

நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
　　நலிந்தவுடன் சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
　　சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லா
ருனென்று முடலென்றங் கரண மென்று
　　முள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீநீ ரென்று
　　மண்ணென்று மலையென்றும் வனம தென்றும். ()

மலைமலையாங் காட்சிகண்கா ணமை யாதி
　　மறப்பென்று நினைப்பென்று மாயா வாரி
யலையலையா யடிக்குமின்ப துன்ப மென்று
　　மதைவிளைக்கும் வினைகளென்று மதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றந் தெய்வ மென்றுஞ்
　　சாதகமென் றம்மதற்குச் சாட்சி யாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்க மெ[illegible]ங்
　　கடலுறநண் மணலெண்ணிக் காணும் போதும்.

காணரிய வில்லலெல்லாந் தானே கட்டிக்
　　கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலை பற்றிப் பட்ட
　　விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஊனுறக்க மின்பதுன்பம் பேரூ ராதி
　　யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்

கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து,
வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி
யைந்துபுல னைம்பூதங் கரணமாதி
யடுத்தகுண மத்தனைய மல்லை யல்லை
யிந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யெம்யாம். ()

அறிவாகி யானந்த மயமா யென்று
மழியாத நிலையாகி யாதின் பாலும்
பிறியாமற் றன்னருளே கோயி லான
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டி
னெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
நிர்க்குணநிற் குளம்வாய்த்து நீடி வாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்கச்
சிற்சுகம்பெற் றிடுகபந்தந் தீர்க வென்றே. (௯௧)

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை

தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
யந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை. ()

இல்லையில்லை யென்னினொன்று மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்று னென்னத்
தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
யல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டுங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே. (உக)

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்று
ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவ நழுவாம னழுவி நிற்கு
மானாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவான லதுவாவ ரதுவே சொல்லும். (உஉ)

அதுவென்று லதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினா லதுவெனலு மறவே விட்டு

மருவுண்ட வண்டெனவுஞ் சனக ஞாதி
　　மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா றொன்றும்
பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
　　படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
　　கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன். (௨௯)

பாராதி விண்ணனைத்து நீயாச் சிந்தை
　　பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ வென்ப்ராண நாதா வென்பேன்
　　வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன் றறியா வண்ணம்
　　புண்ணுளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர
　　நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்பேன்.

ஆயுமறி வாகியுன்னைப் பிரியா வண்ண
　　மணைந்துசுகம் பெற்றவன்ப னாயோ வென்னத்
தீயகொலைச் சமயத்துஞ் செல்லச் சிந்தை
　　தெளிந்திடவுஞ் சமாதானஞ் செய்வேன் வாழ்வான்
காயிலைபுன் சருகாதி யருந்தக் கானங்
　　கடன்மலையெங் கேயெனவுங் கவலை யாவேன்
வாயில்கும்பம் போற்கிடந்து புரள்வேன் வானின்
　　மதிகதிரா முன்னிலையா வைத்து நேரோ. (௨௫)

சோதா னிரவுபகல் கோடா வண்ண
நித்தம்வர வுங்களையிந் நிலைக்கே வைத்தா
ராரோயங் கவர்பெருமை யென்னே யென்பே
னடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றா யென்பேன் வந்து
பெய்கின்ற முகில்காளெம் பெருமா னும்போற்
றாராள மாக்கருணை பொழியச் செய்யுஞ்
சாதகமென் னேகருதிச் சாற்று மென்பேன். (௨௬)

கருதரிய விண்ணேநீ யெங்கு மாகிக்
கலந்தனையே யன்முடிவின் காட்சி யாக
வருபொருளைப் பயிருக்குஞ் சொல்லா யென்பேன்
மண்ணேயுன் முடிவிலெங்கு வயங்கு மாங்கே
துரியவறி வுடைச்சேட னீற்றி னுண்மை
சொல்லானே சொல்லென்பேன் சுருதி யேநீ
யொருவனைப்போ லெனக்கு முண்மை யாமுன்
னுரையன்றே யுன்முடிவை யுரைநீ யென்பேன்.

உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
யொலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தார் யாரோ யென்பேன்
கானகத்திற் பைங்கிளிகாள் கமல மேவும்
வரிசிறைவண் டினங்காளோ திமங்கா ளேது
மார்க்கமன்றே நீங்களிது வரையி லேயும்

பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோவொருகாற் பேசு மென்பேன். ()

ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
யோட்டுதல்போ லுன்பேதை யுப்போ டப்பை
மருவவிட்டங் கற்பூர மதனிற் றீபம்
வயங்கவிட்டு மைக்கியமுள்ளி வருந்தி நிற்பே
னருளுடைய பாவென்றே வன்று தானே
யாளனெனல் றய்மெனக்கே யானவைதி
பெருகுவினைக் கட்டொன்று மென்றுங் கட்டப்
பேரியதன் றேயருளால் பேசிற் றன்றே. (௩௧)

அன்றுமுத லின்றைவரைச் சனன சோம
யடைந்தடைந்தி னியாதலையா லழிந்த தல்லா
லின்றைவரை முத்தியின்றே யெடுத்த தேக
மெப்போதோ தெரியாதே யிப்போ தேதான்
றன்றமனக் கவலைகெடப் பலகா லேனுந்
தொழும்புகொளச் *சிகாழிந் துணையே †மாது
சென்றிடவே பொருளைவைத்த காவ லோடுந்
‡சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே. (௩௨)

* ஆளுடைய பிள்ளையார்.

† ஆளுடைய நம்பிகள்.

‡ ஆளுடைய வரசு.

தேவர்தொழும் வாதவூர்த் தேசிகனை யொப்பேன்
திருவுலாத் தேகேலிச் சகத்தோர் முற்றிக்
காவறுநாச் சிவகொள்ளைக் குடையை வைத்த
கடிசேகம் மாவிருந்தன் அருளைச் சாரப்
புவலியில் வாருண இச்சே மந்தைப் [ளை
பன்னவியர்க்க ரோவென்பேன் புளைவயான் றில்
கோவியர்க்கோ ரசைசேறுவக் தானே பிற்பே
ஜெருசிய தாயர்கொடவே மறைக்கு முன்னே. (கக)

*தருசிய கள்போல வேதேவ கொள்ள
கொருவுகர்வ பேரெனவு முனைப்பேன் குவேர
பேராவே தங்கொடவ கொருபே காமை
பிறவாதோ வாசையிற் பெரிய பேரவ
காதிலெறு தாமுகைக் பார்க்க விச்சை
தன்னுறுவே வேள்கொண்டே மறை வாகில்
காதன்மிரு மணிபுகைழுயா மெள்ளா விற்றேன்
கருத்தமிழ்த புரம்தன்மேற் கடன்முக் காறும். ()

காவபோமி தேசவர்த்த மான மாறி
கலக்குன்ற சிவமாழ் கருணை வாழி

*திருவிக இன்னாசிரியர் 'அகைசே ன்னவடிவ மானசு
ர கைப்பிடசி, செக்குவே னென்ற தென்னே
பராபரமே' என்றதனுது முணர்க.

மாலறவுஞ் சைவமுதன் மதங்க ளாகி
மதாதீத மானவருண் மரபு வாழி
சாலமிகு மெளிபேனிவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வாரத்தவருட் டன்மை வாழி
யாலடியிற் பரமகுரு வாழிவாழி
யகண்டிதா காரவரு ளடியார் வாழி. (௯௯)

ஆக பாடல்—கக௯.

தேன்முகம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தேன்முகம் பிறிதுயம் வைத்தாட் செய்யபங் கயத்தின்மேவு நான்முகத் தேவே நின்றன் றேட்டிய வகிலமாயை, நான்முகன் றொயமே யென்கோ கானலம் புனலேயென்கோ, நான்முக முனி யென்கோ மற்றென்சோ விளம்பல் வேண்டும். (க)

வெண்கமலப் படைத்தாப் நத்தை விதிப்படி புரந்தானத்தைக், [illegible] நான் முக்கட் கடவுளா னினைய வாழ்த்து, [illegible]டவ னெவனோ வென்ன வறிகிலாதகில நீயே, யீண்டிய வல்ல நீர வெம்மனோர்க் கியம்பு கண்டாய். (உ)

கண்டன வல்ல வென்றே கழித்திடு மிறுதிக் கண்ணே, கொண்டது பரமா னந்தக் கோதிலா முத்தி யத்தாற், பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே, வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன். (௩)

விளங்கவெண் ணீறு பூசி விரிசடைக் கங்கை தாங்கித், துளங்குநன் னுதற்கண் டோன்றச் சுழல்வளி நெடுமூச் சாகக், களங்கமி லுருவந் தானே ககனமாய்ப் பொலியப் பூமி, வளர்ந்ததா னென்ன வுள்ள மன்றேன மறையோன் றின்றி. (௪)

மறைமுழக் கொலிப்பத் தானே வாதமோ டபயக் கைகண், முறைமையி னேங்க நாத முரசெனக் கறங்க வெங்குங், குறைவிலா வணங்கி னைந்து கோதிலா நடனஞ் செய்வா, னிறையவ னெனலாம் யார்க்கு மிதயசம் மதமீ தல்லால். (௫)

அல்லலாந் தொழிற்ப டைத்தே யடிக்கடி யுருவெடுத்தே, மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் கடவு ளென்னிற், றொல்லையாம் பிறவி வேலை தொலைந்திடா திருணீங் காது, நல்லரு மாயை தானு நாமென வந்து நிற்கும். (௬)

நாமெனு நிற்கு ஞான ஞானமன் றந்த ஞான, மோனமா யிருக்க வொட்டா மோனமின் றாக வேதான், றே

னென குசிக்கு மன்பாற் சிக்கைதனைத் துருதுள் ளன்பே
ம்,வாளென விறைந்தா னந்த மாகடல் கலியே நின்றே

இன்றென விருப்போ மென்னி னென்றநிற்கு மிய
மா முத்தி, என்றொரு நீது மன்றி நாமுன்னே பெறும
வித்தை, யின்றது பெத்தத் தானே யிந்த முத்தி யெ
ன்னி, னொன்றொரு வரைநான் கேட்க வனைவில்லை கு
ருவு மில்லை. (௪)

இல்லையென் றிடனிப் புயி பிருக்கவா திருப்போ மெ
ன்னி, னல்லவன் காருவாக றுமொழு நெறிக்கு வீ
னிற், றொல்லையே றுக மாதி தொடுப்பதேன் மயக்க
மேதின். சொல்லவர் திருமி னென்ன வுறவெசய் நிலே
வ னங்தோ. (௫)

அர்ச்சனை நால்வர் வாமை வகுட்குரு வாகி வந்த, வெ
ங்கதையே யெல்லாச் சுடுதான் திமம்பின சென்மைப்படை
த்த. தங்கைதீ யெம்மைக் காக்குச் சிலையெ நாக்கை
ன்றே, பந்தமில் சித்தி முத்தி படைக்கான் வருள்பா
லிப்பாய். (௬)

ஆக பாடல்-௧௭௪.

பன்மாலை.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்சமென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனே னெந்நாளுஞ் சூட்டி நிற்பே
னென்மாலை யறிந்திங்கே வாவா வென்றே
யெனைக்கலப்பாய் திருக்கருணை யெம்பி ரானே.(க)

கருணைமொழி சிறிதில்லே னீத விக்கின்
கண்ணீர்க்கும் பஞ்சமென்றாற் கருத்துக் கேற்க
வொருபொழுதும் பெற்றறியே னென்னை யாளு
மொருவாவென் னடிமைநா னிருந்த தெக்கோ
விருவினையு முக்குணமுஞ் சூழ நொந்து
மிடர்செயுமைம் புலன்களா லாதி யாதும்
வரவரவு மேனைக்கோ லெட்டா தானை
மதந்தொடும்பக் கெதிர்த்தரக வல்ல மன்றே.(உ)

வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளை யெளிதினென் மனமா யாவைக்
குடிகெடுக்க வசங்கட்டிக் கொண்ட மோன
குருவேயென் றெய்வமே கோதி லாத

படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் றிருக்கருணை பற்று மாறே
யடியெடுத்தென் முடியிலின்னம் வைக்க வேண்டு
மடிமுடியொன் றில்லாத வகண்ட வாழ்வே. (௩)

வாழ்வினைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேநா னெப்பாலோர் வழிபா ராமற்
றாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
தடையுற்றேன் மேற்கதியந் தடைய றாமே
யூழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தா யின்னம்
பாழுவதிப் படவெனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே. (௪)

நானானிங் கெனுமகந்தை யெனக்கேன் வைத்தாய்
நல்வினைதீ வினையெனவே நடுவே நாட்டி
யூனுறு முடற்சுமையென் மீதேன் வைத்தா
யுயிரெனவு மென்னையொன்று வுள்ளேன் வைத்தா
யானுமை யாயகில நிகில பேத
மனைத்திலுள்ளுந் தானுமி யறிவா னந்தத்
தேனாகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த வொன்றே

ஒன்றியொன்றி நின்றுநின்ற மென்னை யென்னை
யுன்னியுன்னும் பொருளனைநீ யுன்பா லன்பா

னின்றதன்மைக் கிரங்கும்வை ராக்கிய னல்லே
னிவர்த்தியவை வேண்டு மிந்த நிலனுக்கே
யென்றுமென்று மிந்நெறியோர் குணமு மில்லே
யிடுக்குவார் கைப்பிள்ளா யேதோ வேதோ
கன்றுமனத் துடனோடி தழைதின் றாற்போற்
கல்வியுங்கேள் வியுமாகிக் கலக்குற் றேனே. (சு)

உற்றதுணை நீயல்லாற் பற்று வேறொன்
றுண்டென்பன் றுலகத் தோடி யாடிக்
கற்றதுங்கேட் டதுமிதனுக் கேது வாகுங்
கற்பதுங்கேட் பதுமமையுங் காணு நீத
நற்றுணையே யருட்டாயே யின்ப மான
நாதாந்த பரம்பொருளே நாத ஜோதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சே யாகத்
தொழும்புகொள்ளுங் கருணையே சோதிக் குன்றே.

குன்றாத வுருவருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமையக் கூத்து மாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்ச
மன்றாக வின்பக்கூத் தாட வல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞான
மமைத்தசின் முத்திரைக்கடலே யமர ரேறே. (அ)

திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்துருகும் பொன்போலச் செகத்தை யெல்லாங்
கரையவே கனிந்துருக்கு முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி யிந்நாள்
வரையிலே வரக்காணே னென்றாற் கட்டி
வார்த்தைசொன்னாற் சுகம்வருமோ வஞ்ச னேனை
யிரையிலே யிருத்திநிரு விகற்ப மான
வின்பநிட்டை கொடுப்பதையா வெந்த நாளோ. (௯)

எந்தநா ளுனக்கடிமை யான நாளோ
வெந்நாளோ கதிவருநா ளெளிய னேன்றன்
சிந்தைநா ளதுவரைக்கு மயங்கிற் றல்லாற் [சொற்
றெரிந்ததுண்டோ மௌனியாய்த் தெளிய வோர்
றந்தநாண் முதலின்பக் கால்சற் றல்லாற்
றடையறவா னந்தவெள்ளந் தானே பொங்கி
வந்தநா ளில்லைமெத்த வலைந்தே னுன்னை
மறவாவின் பத்தாலே வாழ்கின் றேனே. (௰)

ஆக பாடல்—௧௮௪.

நினைவொன்று.

வேறு.

ஞானிகளிடம்பொருளைவல்.

நினைவொன்று நினையாம னிற்கினைக மென்பார் - நிற்குமிட மேயருளா னிட்டையருளொட்டுந், தனையென்று மறந்திருப்ப தருள்வடிவா னதுமேற் - றட்டியெழுந் திருக்குமின்பத் தன்மயமே யதுவாம், பினையொன்று மிலையந்த வின்பமெனு நிலயம்-பெற்றோ பிறவாமைபெற்றோர்மற் றுந்தான், மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த - வாதனையா மாசையொழி மன்னொரு சொற் கொண்டே. (க)

ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த - வொருமொழியே பலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த, குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங் - கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய், கருமொழியின் குணக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கங் கரும்பனைய சொற்கொடினைக் காட்டவுங் கண் டனைமேற், றருமொழியின் குணக்கில்லை புல்லை விட்டு நீங்காத்-தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் தில்லை. (உ)

நில்லாத வாக்கைநிலை யன்றெனவே கண்டாய் - மெய்ய வருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக், கல்லாதே யே

ன்படித்தாய் கற்றதெல்லா மூடங்-கற்றதெல்லா மூட
மென்றே கண்டனைய மன்று, சொல்லாலே பயனில்லை
சொன்முடிவைத் தானே-தொடர்ந்துபிடி மர்க்கடம்போ
ற் றொட்டதுபற் றாகில், எல்லாரு மறிந்திடவே வாய்
ப்பறைகொண் டடித்-*திராப்பகலில் லாவிடமே யெம
க்கிடமென் றறைந்தே. (௯)

இடம்பொருளே வலக்குறித்த மடம்புகுதா யென
வே - யெங்கோர் பரப்பட்டா ரிக்கேர் வாடா, மடம்பெ
றுபாழ் கெந்நாளை யந்நாளைத் திராசை - மன்னிடமே யி
டமத்த மாலத்தே பொருளாக், கிடம்பெறவே நிற்கி
னெல்லா வலகமும்வந் தேவல் - செய்புயிக்க நிலைசின்
றோர் சனகன்முதன் முனிவர், கடம்பெறுமா மதயானை
யென்னவலி பாசக் - கட்டான தளைபற்றக் கட்டவிழப்
பாரே. (௰)

பாராதி யண்டமெலாம் படர்கான சலம்போற்-பார்
த்ததணையே முடிவினின்ற பாரொருதா னின்று, தாராலு
மறியாத சத்தன்றோ வதுவா - யங்கிருநீ யெங்கிருந்து ம
றுவாறை கண்டாய், பூராய மாகவுநீ மற்றொன்றை விரி
த்துப் - பலம்பாதை சஞ்சலமாய்ப் புத்தியைநாட் டாதை,

* இராப்பக லில்லாவிட மென்றது - சகலகேவலங்க
ளொழிந்த சுத்தாவத்தையை.

போராதை யொன்றையுந் முன்னிலைவை யாதை-யுள்ள
படி முடியுமெலா முள்ளபடி காணே. (௫)

உள்ளபடி யென்னவுந் மற்றொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிட் களங்கமதி யாகிக், கள்ளமனத்
துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர் -- கற்பித்த
மொழிப்படியே கங்குல்பக லற்ற, வெள்ளவெளிக் கட
ன்மூழ்கி யின்பமயப் பொருளாய்-விரவியெடுத் தெடுத்தெ
டுத்து விள்ளவும்வா யின்றிக்,கொள்ளைகொண்ட கண்ணீ
ருங் கம்பலையு மாகிக்-கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்
பட்ட மடியே. (௬)

அடிமுடியு நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டா-லத்
துவித வானந்த சித்தமுண்டா நமது, குடிமுழுதும் பி
ழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த - கோலமெல்லா
நன்றாகுங் குறைவுநிறை வறவே, விடியுமுதயம்போல
வருளுதயம் பெற்ற-வித்தகரோ டுங்கூடி விளையாட லா
கும், படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்-
பாலருட னுன்மத்தர் பசாசர்குணம் வருமே. (௭)

வரும்போமென் பனவுமின்றி யென்றுமொரு படித்
தாய் - வாறாறு தத்துவத்தை வளைந்தருந்தி வெளியா,
மிரும்போகல் லோமரமோ வென்றுநெஞ்சைக் கனன்
மே-விட்டமெழு காவுருக்கு மின்பவெள்ள மாகிக், கரு
ம்போகண் டோசீனிச் சருக்கரையோ தேனோ-கனியமி

ர்தோ வெனருசிக்குங் கருத்தவிழ்ந்தோ ருணர்வா, ரரும்
போநன் மணங்காட்டுங் காமரசங் கன்னி - யறிவாளோ
வபுக்குவர்க்கோ வந்நலந்தான் விளங்கும். (அ)

தானேயு மிவ்வுலக மொருமுதலு மாகாத் - தன்மையி
றூற் படைத்தளிக்குந் தலைமையது வான, கோறுக
வொருமுதலிங் குண்டெனவும் யூகங்-கூட்டியதுஞ் சக
முடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான, வாறுக வம்முதலை
நிற்குநிலை நம்மான்-மதிப்பரிதா மெனமோனம் வைத்த
தூமுன் மனமே, யாறேலு மனஞ்சடமென் றழுங்காதை
யுண்மை - யறிவித்த விடங்குருவா மருளிலதொன்றி
லேபே. (கூ)

ஆக பாடல்-ககூ.

பொன்னைமாதரை.



*கலிவிருத்தம்.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடே
னென்னை நாடிய வென்னுயிர் நாதனே
யுன்னை நாடுவ னுன்னருட் டேவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே. (க)

* 'அளவடி நான்கின கலிவிருத்தம்மே' என்பதோத்
தாகலின்.

தன்னை தென்றுணை சாற்றுவ னவெலா
நின்ன தென்றனை நின்னிடத் தேதந்தே
னின்ன மென்னை யிடருறக் கூட்டினுற்
பின்னை யுய்கிலன் பேதைய ஞவியே. (உ)

ஆவி யேயுனை யானறி வாய்நின்று
சேவி யேன்களச் சிந்தைதி றைகொடேன்
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி யாளெனை யாட்கொண்ட கோலமே. (௩)

கோல மின்றிக் குணமின்றி நின்னருட்
சீல மின்றிச் சிறியன் பிழைப்பனே
வால மூண்டு மமிர்தரு வாய்வந்த
கால மெங்கை கதிநிலை காண்பதே. (௪)

காணுங் கண்ணிற் கலங்குகண் ணேயுனைச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ
வாணும் பெண்ணு மதுவெனும் பான்மையும்
பூணுங் கோலம் பொருந்தியு ணிற்கவே. (௫)

நிற்கு நன்னிலை நிற்கப்பெற் றாரருள்
வர்க்க மன்றி மனிதரன் றேயையா
துர்க்கு ணக்கடற் * சோங்கன்ன பாவியேற்
கெற்கு ணங்கண் டெனபெயர் சொல்வதே. (௬)

* சோங்கு—மரக்கலம்.

சொல்லை யுன்னித் துடித்தன லாலரு
ளெல்லை யுன்னி யெனையங்கு வைத்திலேன்
வல்லை நீயென்னை வாவென் றிடாவிடிற்
கல்லை யாமிக் கருமிக டக்கையே. (௭)

கையு மெய்யுங் கருத்துங் கிசைபவே
யைய தந்ததற் கையமி னியுண்டோ
பொய்ய னென்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாயின்ப மென்று விளைவதே. (௮)

என்று முன்னை யிதய வெளிக்குளே
துன்ற வைத்தனை யருட் சோதியீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையா
நன்று நீதற வைத்த நலிவதே. (௯)

வைத்த தேகம் வருந்த வருந்தியும்
பித்த ஞானருள் பெற்றுந் திடமிலேன்
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்த வைய வருட்செம்பொற் சோதியே. (௰)

செம்பொன் மேனிச் செழுஞ்சட ரோழு
வம்ப னேனுனை வாழ்த்து மதியின்றி
யிம்பர் வாழ்விலுக் கிச்சைவைத் தேன்மன
நம்பி வாவெனி னென்கொல் செய்வதே. (௰௧)

செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையு
மைய நின்னதென் றெண்ணு மறிவின்றி

வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யி லேசுழன் றேனென்ன புன்மையே. (௰௨)

புன்பு லானரம் பென்புடைப் பொய்யுட
லன்பர் யார்க்கு மருவருப் பல்லவோ
வென்பொ லாமணி யேயிறை யேயித்தாற்
றுன்ப மன்றிச் சுகமொன்று மில்லையே. (௰௩)

இல்லை யுண்டென் றெவர்பக்க மாயினுஞ்
சொல்ல வோவறி யாதசொ ழும்பன்யான்
செல்ல வேறொரு திக்கறி யேனெலாம்
வல்ல நீயெனை வாழ்விக்க வேண்டுமே. (௰௪)

வேண்டுஞ் சீருன் மெய்யன்பர்க் கேயன்பு
பூண்ட னானென் புலமறி யாததோ
வாண்ட நீயுன் னடியவ னென்னென்று
தூண்டு வேனென்றித் தொண்டனென் சொல்வதே. (௰௫)

எனக்கு னேயுயி ரென்னவி ருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல்வ ழக்கன்றோ
கனத்த சீரருட் காட்சிய லாதொன்றை
நினைக்க வோவறி யாதென்ற னெஞ்சமே. (௰௬)

நெஞ்சு கந்துனை நேசித்த மார்க்கண்டர்க்
கஞ்ச லென்ற வருளறிந் தேயையா
தஞ்ச மென்றுன் சரணடைந் தேனெங்குஞ்
செஞ்செ வேநின்ற சிற்சுக வாரியே. (௰௭)

வாரி யேழு மலையும் பிறவுந்தான்
சீரி தானநின் சின்மயத் தேயென்று
லாரி லேயுள தாவித் திரளதை
யோரி லேனெனை யாண்ட வொருவனே. (௧௮)

ஒருவ னென்னுளத் துள்குறுங் குறிப்பறிந்
தருள்வ னோவெனை யாளுடை யண்ணலே
மருள னேன்பட்ட வாதைவி ரிக்கினே
பெருகு நாளினிப் பேசவி தியின்றே. (௧௯)

இன்று னக்கன் பிழைத்தில னேனென்றே
யன்று தொட்டெனை யாளர சேயென்று
நின்ற ரற்றிய நிலனைக் கைவிட்டான்
மன்ற மெப்படி நின்னருள் வாழ்த்துமே. (௨௰)

வாழ்த்து நின்னருள் வாரம்வைத் தாலன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனு முய்வனோ
சூழ்த்து நின்ற தொழும்பரை யானந்தத்
தாழ்த்து மூக்க னருட்செம்பொற் சோதியே. (௨௧)

சோதி யேசுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநிறை வேநிலை
யாதி யேயுனை யானடைந் தேனகம்
வாதி யாதருள் வாயருள் வானையே. (௨௨)

வானைப் போல விளங்கு கொண் டானந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்துக லந்தமெய்ஞ்

ஞானத் தெய்வத்தை நாடுவ ஞனெனு
மீனப் பாழ்கெட வென்றுமி ருப்பனே. (௨௩)

இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலா
மரும்பச் செய்யென தன்னையொப் பாமனே. (௨௪)

அன்னை யப்பனென் றூவித் துணையெனுந்
தன்னை யொப்பற்ற சற்குரு வென்பதே
னென்னைப் பூரண வின்பவெ ளிக்குளே
துன்ன வைத்த சுடரொனைத் தக்கதே. (௨௫)

தக்க கேள்வியிற் சார்ந்தநற் பூமியின்
மிக்க தாக விளங்குமு தலொன்றே
யெக்க ஞுந்தொழ யாவையும் பூத்துக்காய்த்
தொக்க நின்றமொன் றுய்நிறை வானதே. (௨௬)

ஆன மான சமயங்க ளாறக்குந்
தான மாய்நின்று தன்மயங் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
தீன னேனின்பந் தேக்கித் திளைப்பனே. (௨௭)

தேக்கி யின்பந் திளைக்கத் திளைக்கவே
யாக்க மாயெனக் கானந்த மாகியே
போக்கி ஞேடு வரவற்ற பூரணந்
தாக்கி நின்றவா தன்மய மாவதே. (௨௮)

அதுவென் றன்று மதுவு மறநின்ற
முதிய ஞானிகண் மோனப் பொருளது
வெதுவென் றெண்ணி யிறைஞ்சுவ னேழையேன்
மதியு ணின்றின்ப வாரிவ ழங்குமே. (௨௯)

வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்
பாரிற் கண்டவை யாவும் பருகினே
யோரிற் கண்டிடு மூமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை யையனே. (௩௰)

ஐய மற்ற வதிவரு ணர்க்கெலாங்
கையி லாமல கக்கனி யாகிய
மெய்ய னேயிந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்கும் புகலிட மெங்ஙனே. (௩௧)

எங்ங னேய்ய * யானென தென்பதற்
றங்ங னேயன் னருண்மய மாகிலேன்
றிங்கள் பாதி திகழுப் பணியணி
கங்கை வார்சடைக் கண்ணுத லெந்தையே. (௩௨)

கண்ணிற் காண்பதுன் காட்சிகை யார்த்தொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
யண்ண லேநின் னருள்வடி வாகுமே. (௩௩)

* யானெனதென்பது—அகப்பற்றுபுறப்பற்றுகளை.

வடிவெ லாநின் வடிவென வாழ்த்திடாக்
கடிய னேனுமுன் காரணங் காண்பனோ
நெடிய வானென வெங்கு நிறைந்தொளி
ரடிக ளேயர சேயரு ளத்தனே. (௬௪)

அத்த னேயகண் டானந்த னேயருட்
சுத்த னேயென வுன்னைத் தொடர்ந்திலேன்
மத்த னேன்பெறு மாமல மாயவான்
கத்த னேகல்வி யாதது கற்கவே. (௬௫)

கற்று மென்பலன் கற்றிடு நூன்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோநெறி
நிற்றல் வேண்டு நிருவிகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே. (௬௬)

பெருமைக் கேயிறு மாந்து பிதற்றிய
கருமிக் கையக திபுமுண் டாங்கொலோ
வருமைச் சிரன்பர்க் கன்னையொப் பாகவே
வருமப் பேரொளி யேயுன்ம னாந்தமே. (௬௭)

உன்ம னிக்கு ளொளிர்பரஞ் சோதியாஞ்
சின்ம யப்பொரு ளேபழஞ் செல்வமே
புன்ம லத்துப் புழுவன பாவியேன்
கன்ம னத்தைக் களைக்கக் கடவதே. (௬௮)

களையி லின்பக் கடலமு தேயிது
வளையி னானை வந்து கலந்திலே

னுரையி லாவின்ப முள்ளவர் போலவித்
தரையி லேநடித் தேனென்ன தன்மையே. (சகூ)

மையு லாம்விழி மாதர்க டோதகப்
பொய்யி லாழும் புலையினிப் * பூரைகாண்
கையி † லாமல கக்கனி போன்றவென்
னைய னேயெனை யாளுடை யண்ணலே. (சʊ)

அண்ண லேயுன் னடியவர் போலருட்
கண்ணி னாலுனைக் காணவும் வாவெனப்
பண்ணி னாலென் பசுத்துவம் போயுய்ம்
வண்ண மாக மனோலயம் வாய்க்குமே. (சக)

வாய்க்குங் கைக்கு மவுன மவுனமென்
றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா
நாய்க்கு மின்பமுண் டோநல் லடியரைத்
தோய்க்கு மானந்தத் தூவெளி வெள்ளமே. (சஉ)

தூய தான துரிய வறிவெனுந்
தாயு நீயின்பத் தந்தையு நீயென்றுற்
சேய தாமிந்தச் சீவத் திரளன்றோ
வாயும் பேரொளி யானவ கண்டமே. (சந)

அகண்ட மென்ன வருமறை யாகமம்
புகன்ற நின்றன்மை போதத் தடங்குமோ

* பூரை-குறைவின்மை. † ஆமலகக்கனி—நெல்லிக்கனி

செகங்க ளெங்குந் திரிந்து நன் மோனத்தை
யுகந்த பேருனை யொன்று வரையனே. (௪௪)

ஐய னேயுனை யன்றி யொருதெய்வங்
கையி னாற்றொழ வுங்கரு தேன்கண்டாய்
பொய்ய னாகிலும் பொய்யுரை யேன்சுத்த
மெய்ய னாமுனக் கேவெளி யாகுமே. (௪௫)

வெளியி னின்ற வெளியாய் விளங்கிய
வொளியி னின்ற வொளியாமுன் றன்னைநான்
தெளிவு தந்தகல் லாலடித் தேவென்று
களிபொ ருந்தவன் றோகற்ற கல்வியே. (௪௬)

கல்லை யுற்ற கருத்தினர் கார்நிறத்
தல்லை யொத்த குழலின ராசையா
லெல்லை யற்ற மயல்கொள வோவெழிற்
றில்லை யிற்றிக ழுந்திருப் பாதனே. (௪௭)

திருவரு டெய்வச் செல்வி மலைமக
ளுருவி ருக்கின்ற மேனி யொருபரங்
குருவை முக்கணங் கோவைப் பணிநெஞ்சே
கருவி ருக்கின்ற கன்மமிங் கில்லையே. (௪௮)

கன்ம மேது கடுநர கேதுமேற்
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ
வென்ம னோத மெய்தும் படிக்கரு
ணன்மை கூர்முக்க ணாத னிருக்கவே. (௪௯)

நாத கீதனென் றேதன்முக் கட்பிரான்
வேத வேதியன் வெள்விடை யூர்திமெய்ப்
போதமாய் நின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி மற்றிலை பாழ்நெஞ்சே. (௫௰)

மற்ற னக்கு மயக்கமென் வன்னெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுத லோனருள்
பெற்ற பேரவ ரேபெரி யோரெலா
முற்ற மோர்ந்தவர் மூதுரை யத்தமே. (௫௧)

உரையி றந்துளத் துள்ளவி காரமாந்
திரைக டந்தவர் தேடுமுக் கட்பிரான்
பரைநி றைந்த பரப்பெங்ங னங்ஙனே
கரைக டந்தின்ப மாகக் கலப்பனே. (௫௨)

கலந்த முத்தி கருதினுங் கேட்பினு
நிலங்க ளாதியு நின்றெமைப் போலவே
யலந்து போயின மென்னு மருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்கச் சோதியே. (௫௩)

சோதி யாதெனைத் தொண்டருட் கூட்டியே
போதி யாதவெல் லாமெலப் போதிக்க
வாதி காலத்தி லுன்னடிக் காந்தவ
மேது நான்முயன் றேன்முக்க ணெந்தையே. (௫௪)

எந்த நாளைக்கு மீன்றரு டாயென
வந்த சீரருள் வாழ்கவென் றுன்னுவேன்

சிந்தை நோக்கந் தெரிந்து குறிப்பெலாந்
தந்து காக்குந் தயாமூல ஞாநிதியே. (௩௫)

கன்னல் கன்றலிக் கனியினி லுடைக்கும்
மென்னெஞ் சுடாள்முத லாமென் பிறவியை
யென்னை யோனவி பேதைமை யறிவொடும்
வன்னை முக்கண் மணியுங் காக்குமே. (௩௬)

காக்கு மின்னருட் காட்சியல் லாலொரு
நோக்கு மில்லையென் புந்தியி லெத்தனை
நீக்கி யாளுமை யின்பர மல்லினை
யாக்க வேமுக்க னைத்த வுயிர்த்தியே. (௩௭)

ஆனந் தக்கதி யென்னவென் றுனைத்த
மோனந் தெய்வமே முறைப்பெற முக்கணோங்
கோனிர் இந்த குறிப்பது ருள்செறுந்
தீனன் செய்கை திருவருட் செய்கையே. (௩௮)

கையி னேர்மெழு தேத்திக் கவிந்துவ
மெய்யி னூறுனைக் காண விரும்பினே
னைய வேயிர வேயரு ளேயருட்
டைய வோர்பரம் வாழ்ச கராதனே. (௩௯)

சகத்தின் வாழ்க்கைச் சதமெனக் கொண்டுயே
யிருத்த நிலை விளையவி ளைக்கின்றே
னகத்து ளாசமு நாமைய வின்முத்திச்
சுகத்தி னுள்வந்து தோய்வதெக் காலமே. (௪௰)

காலமூன்றுங் கடந்தொ ளிராநின்ற
சீலமேநின் றிருவரு ளாலிந்த்ர
சாலமாமிச் சகமென வெண்ணிநின்
கோலநாடுத லென்று கொடியனே. (௬௧)

கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரந்திடு
மடிக ளாம்பொரு ளேநினைக் கன்பின்றிப்
படியி லேலழைமை பற்றுகின் றேன்வெறு
மிடிய னேன்கதி மேவும் விதியின்றே. (௬௨)

விதியை யும்விதித் தென்னைவி தித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையிற்
பதிய வைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டுக ளிப்பதே. (௬௩)

கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதியெனப்
பண்டு மின்றுமென் பானின்று ணர்த்திடு
மண்ட னேயுனக் கோர்பதி னாயிரந்
தெண்ட னென்பொய்மை தீர்த்திடல் வேண்டுமே.

வேண்டும் யாவுமி றந்துவெ ளியிடைத்
தூண்டு வாரற்ற சோதிப்பி ரானின்பாற்
பூண்ட வன்பர்தம் பொற்பணி வாய்க்குமே
லீண்டு சன்மமெ டுப்பன நந்தமே. (௬௫)

எடுத்த தேக மிறக்குமு னேயெனைக்
கொடுத்து நின்னையுங் கூடவுங் காண்பனோ

வீந்த போற்றி வாய்றி யாக்கையைக்
கெடுத்த வின்பக் கிளர்படலிக் குன்றமே. (௬௬)

குன்றி டாத கொழுஞ்சுடர் மேனி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
யன்றி யார்துணை யாருற வாரதி
யென்று நீயெனக் கின்னருள் செய்வதே. (௬௭)

அருளொ லாந்திரண் டோர்வடி வாகிய
பொருளொ லாம்வல்ல பொற்பொது நாதவென்
மருளொ லாங்கெடுத் தேயுள மன்னலா
விருளொ லாமிரித் தெக்கொளிர்த் திட்டதே. (௬௮)

எங்கு மென்னை யிகழுற வாட்டியே
பங்கஞ் செய்த பழவினை பற்றற்று
லெங்க ளுவன் னடியினை யன்றியே
தங்க வேறிட முண்டோ சகத்திலே. (௬௯)

உண்ட வர்க்கன்றி யுட்பசி போமோ
கண்ட வர்க்கன்றிக் காத லடங்குமோ
தொண்ட ருக்கெளி யாளென்று தோன்றுவோன்
வண்ட மிழ்க்கிசை வாகம திக்கவே. (௭௰)

மதியுங் கங்கையுங் கொன்றையு மத்தமும்
பொதியுஞ் சென்னிப் புனிதவின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தி லாழ்ந்தவென்
விதியை யெண்ணி விழிதுயி லாதன்றே. (௭௧)

தடமுறு மகில மடங்குநா ளம்மை
தன்னையு மொழித்துவிண் ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடனதோர் நினைப்பு மறப்பெனுந் திரையைக்
கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே. (௨)

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் துரும்பொத் தாவியோ டாக்கை
யானந்த மாகவே யலந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக்
காட்சியே சாட்சியே யறிஞ
ருளம்பெறுந் துணையே பொதுவினி னடிக்கு
முண்மையே யுள்ளவா றிதுவே. (௩)

உள்ளமே நீங்கா வென்னைவா வாவென்
லுலப்பிலா வானந்த மான
வெள்ளமே பொழியுங் கருணைவான் முகிலே
வொப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
பாலிப்ப துன்னருட் பரமே. (௪)

பரம்பர மாகிப் பக்குவம் பழுத்த
பழவடி யார்க்கருள் பழுத்துச்
சுரந்திடவி திரண்டுந் தாளைசற் பகமே
சோதியே யொன்றே யனேகமே
யிரண்டென்ற கடந்து கண்டேயில் பொருள
விருந்தது மென்கணி யிருட்டைக்
கரந்திடுமின் கண்ணூற் றயில்வெறல் வேண்டிக்
கருதினேன் கருத்திது தானே. (௯)

கருத்திலுட் கருத்தா யிருந்தநீ புணர்ந்தாக்
காரணங் கண்டிடப் பாதான்
வருத்தமற் றிருந்து சுகப்பெரு வெள்ளம்
வருந்தினேன் மதியின்மை தீர்ப்பா
பொருத்தரா ருளப்பா கனைப்பவர் யாவ
ருலகவர் பன்னெறி யெனைக்குப்
பொருத்தமோ சொல்லாய் மௌனசற் குருவே
போற்றினேன் பொன்னடிப் போதே. (௰)

அடியெனு மதுவ மருளெனு மதுவு
மழிந்திடி னிர்க்குண நிறைவு
முடியெனு மதுவம் பொருளெனு மதுவு
மொழிந்திடிற் சுகமன மாயைக்
குடிகெட வேண்டிற் பணியற நிற்றல்
குணமெனப் புன்னகை காட்டிப்

படிமிசை மௌனி யாகிநீ யாளப்
 பாக்கிய மென்செய்தேன் பரனே. (எ)

என்செய லின்றி யாவுநின் செயலென்
 றெண்ணுவே னொவ்வொரு காலம்
புன்செயன் மாயை மயக்கினெ னென் செயலாப்
 பொருந்துவே னஃதொரு காலம்
பின்செயல் யாது நினைவின்றிக் கிடப்பேன்
 பித்தனே னென்னிலை பெறநின்
றன்செய லாக முடித்திடல் வேண்டுஞ்
 சச்சிதா னந்தசற் குருவே. (அ)

குருவுரு மாகி மௌனியாய் மௌனக்
 கொள்கையை யுணர்த்தினை யதனாற்
கருவுரு வாவ தெனக்கிலை யிந்தக்
 காயமோ பொய்யெனக் கண்ட
திருவுரு வாள ரனுபவ நிலையுஞ்
 சேருமோ வாவலோ மெத்த
வருவுரு வாகி யல்லவாய்ச் சமய
 மளவிடா வானந்த வடிவே. (௯)

வடிவிலா வடிவாய் மனநினை வணுகா
 மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டினர்க்குன்
 மோனமல் லால்வழி யுண்டோ

[illegible]

(௧)

ஆக பாடல்-[illegible]

சொல்லற்கரிய.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[illegible] (௧)

[illegible] கிளி நீ பேசாயே. (உ)

[illegible]

பற்று மகண்டப் பரப்பான, வீசா பொதுவி னடமாடு மிறைவா குறையா வின்னமுதே. (௩)

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலுந் தோற்று மம, லன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணு வரசே யெனக்கூவிப், பின்புற் றழுஞ்சே யெனவிழிநீர் பெருகிப் பெருகிப் பித்தாகித், துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே. (௪)

கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக் கோவே மன்றிற் கூத்தாடற், கெழுந்த சுடரோ யிமயவரை யென்றாய் கண்ணுக் கினியானே, தொழுந்தெய் வமுநீ குருவுநீ துணைநீ தந்தை தாயுநீ, யழுந்தும் பவநீ நன்மையுநீ யாவி யாக்கை நீதானே. (௫)

தானே யகண்டா காரமயந் தன்னி லெழுந்து பொது நடஞ்செய், வானே மாயப் பிறப்பறுப்பான் வந்துன் னடிக்கே கரங்கூப்பித், தேனே யென்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே சிவலோகக், கோனே யெனுஞ்சொன் னிலதுசெவி கொள்ளா தென்னோ கூறாயே. (௬)

கூறா நின்ற விடர்க்கவலைக் குடும்பக் கூத்துட் டுளைந்துதடு, மாறா நின்ற பாவியைநீ வாவென் றழைத்தா லாகாதோ, நீறார் மேனி முக்கணுடை நிமலா வடியார் நினைவினிடை, யாறாய்ப்பெருகும் பெருங்கருணை யரசே யென்னை யாள்வானே. (௭)

லானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப் புரந்து மாற்றவல்ல, கோனே யென்னைப் புரக்குநெறி குறித்தா யிலையே கொடியேனைத், தானே படைத்திங் கென்னபல ன்றன்னைப் படைத்தா யன்கருத்தை, நானே தென்றிங் கறியேனே நம்பி னேன்கண் டருள்வாயே. (அ)

கண்டார் கண்ட காட்சியுநீ காணார் காணுக் கள்வனு நீ, பண்டா ருயிர்நீ யாக்கையுநீ பலவாஞ் சமயப் பகுதியு நீ, யெண்டோண் முக்கட் செம்மேனி யெந்தாய் நினக்கே யெவ்வாறு, தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ கூட்டிக் கொள்வ தெவ்வாறே. (கூ)

கூட்டி யெனதென் றிடுஞ்சுமையைச் சுமத்தி யெனை யுஞ் சுமையாளாக், கட்டிப் பிடித்து வினைவழியே கூத்தாட் டினையே நினதருளால், வீட்டைக் கருது மப்போது வெளியா முலக வியப்பனைத்து, மேட்டுக் கடங்காச் செப்பனைப்போ லெந்தா யிருந்த தென்சொல்வேன். (௰)

ஆக பாடல்—உ௲௧.

வம்பனேன்.

வேறு.

வம்பனேன் கள்ளங் கண்டு மன்னருள் வெள்ள ராய, வும்பர்பா லேவல் செய்யென் றுணர்த்தினை யோகோ வானோர், தம்பிரா னேநீ செய்த தயவுக்குங் கைம்மா று ண்டோ, வெம்பிரா னுய்ந்தே னுய்ந்தே னினி யொன் றுங் குறைவிலேனே. (க)

குறைவிலா நிறைவாய் ஞானக் கோதிலா னந்த வெ ள்ளத், துறையிலே படிந்து மூழ்கித் தொளைந்துநான் றேன்று வாறுள், ஞறையிலே யுணர்த்தி மோன வொ ண்சுடர் வைவா டந்த, விறைவனே யுனைப்பிரிந் திங் கிருககிலே னிருக்கி லேனே. (உ)

இருநில மாதி நாத மீறதா மிவைக டந்த, பெருநில மாய தூய பேரொளிப் பிழம்பாய் நின் றுங்,கருதரு மகண் டா னந்தக் கடவுணின் காட்சி காண, வருகவென் றழை த்தா லன்றி வாழ்வுண்டோ வஞ்ச னேற்கே. (ங)

வஞ்சனை யழுக்கா றுதி வைத்திடும் பாண்ட மான, நெஞ்சனை வலிதின் மேன்மே னெக்குநெக் குருகப் ப ண்ணி, யஞ்சலி செய்யுங் கையு மருவிநீர் விழியு மாகத், தஞ்சமென் றிரங்கிக் காக்கத் தற்பரா பரமு னக்கே. (ச)

உனக்குநா னடித்தொண் டாகி யுன்னடிக் கன்பு செ ய்ய, வெனக்குநீ தோற்றி யஞ்சே லென்னுநா ளெந்த

நாளோ, மனக்கிலே சங்க டீர்ந்த மாதவர்க் கிரண்டற் றேங்குந், தனக்குநே ரில்லா வொன்றே சச்சிதா னந்த வாழ்வே. (௫)

உன்னரிய சித்த ரிமையோர் முதலான
மன்னவர்கள் பத்தருள் பாலிப்ப தெந்நாளோ. (௯)

---

* வாகீச வடிகள்.

† சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

‡ அருணகிரிநாதர்.

யாக்கையைப்பழித்தல்.

சுக்கிலமு நீருஞ் சொரிமலமு நாறுமுடற், புக்குழலும்
யாக்கையினிப் போதுமென்ப தெந்நாளோ. (௧)

நீர்க்குமிழி புரைமைத்து நின்றுநில்லாமெய்
பார்க்குமிடத் திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ. (௨)

காக்கைநரி செந்நாய் கழுகொருநாள் கூடியுண்ணு
தேக்குமிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ. (௩)

செக்கிழுதி யாதி செனித்தசென்ம பூமியினை
யிச்செனுடை லென்று மிழுக்கொழிவ தெந்நாளோ (௪)

தந்துவர்தோன் முற்றகர் தாமாய்வா ழிந்நாட்டைப்
பித்தரு லென்றும் பிதற்றொழிவ தெந்நாளோ. (௫)

வைதென்றி நாத னுணர்த்துமதை விட்டதிவே
யாதென்ற பாவித்தோ டாறுநா ளெந்நாளோ. (௬)

கேடிலியா வேதன் விதித்தவிக்ர ஜாலவுடல்
மாயிலியா பாரமயக் கொழிவ தெந்நாளோ. (௭)

ஆர்ந்து நீக்கி யசோசியமா மிவ்வுடலில்
வாழ்ந்தபெறும் பேற்றை மதிக்குநா ளெந்நாளோ. (௮)

மும்மலச்சே றான முழுக்குழியி பாசமெனு
மிம்மலகா யத்து விசுழ்ச்சிவைப்ப தெந்நாளோ. (௯)

நாற்றமிகக் காட்டி நவவாயில் பெற்றபசுஞ்
சோற்றுத் துருத்தி சுமையென்ப தெந்நாளோ. (௧௦)

மனமான வானரக்கைம் மாலையா காம
லெனையா ளடிகளடி யெய்துநா ளெந்நாளோ. (ரு)

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் களைகாண்ப தெந்நாளோ. (சு)

உந்து பிறப்பிறப்பை யுற்றுவிடா தெந்தையருள்
வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ. (எ)

புத்தியெனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
யொத்துவிடா தெந்தையரு ளோங்குநா ளெந்நாளோ. ()

ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பா
யேங்காம லெந்தையரு ளெய்துநா ளெந்நாளோ. (கூ)

சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளி னிற்குநா ளெந்நாளோ. (க0)

வித்தியா வத்துவங்க ளேழும் வெருண்டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநா ளெந்நாளோ. (கக)

சுத்தவித்தை யேமுதலாத் தோன்றுமோ ரைந்துவகைத்
தத்துவத்தை நீங்கியருள் சாருநா ளெந்நாளோ. (கஉ)

பொல்லாத காமப் புலைத்தொழிலி லென்னறிவு
செல்லாம னன்னெறியிற் சேருநா ளெந்நாளோ. (கங)

அடிகளடிக் கீழ்க்குடியா யாம்வாழா வண்ணங்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூற்றொழிவ தெந்நாளோ. ()

ஆன புறக்கருவி யாறுபத்து மற்றுளவும்
போனவழி யுங்கூடப் புன்முளைப்ப தெந்நாளோ. (கரு)

அந்தகனுக் கெங்குமிரு ளானவா ருவறிவில்
வந்தவிருள் வேலை வடியுநா ளெந்நாளோ. (கசா)

புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநா ளெந்நாளோ. (கஎ)

கண்டுகண்டுந் தேருக் கலக்கமெல்லாந் தீரும்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநா ளெந்நாளோ. (கஅ)

பைங்கூழ் வினைதான் படுசாவி யாகவெமக்
கெங்கோன் கிரணவெயி லெய்துநா ளெந்நாளோ. (ககூ)

குறித்தவித மாதியாற் கூடும்வினை யெல்லாம்
வறுத்தவித்தாம் வண்ணமருள் வந்திடுநா ளெந்நாளோ.

சஞ்சிதமே யாதி சரக்கான மூச்சேறும்
வெந்தபொரி யாகவருண் மேவுநா ளெந்நாளோ. (உக)

தேகமுத ஞென்காத் திரண்டொன்ருய் நின்றிலகு
மோகமிரு மாயை முடியுநா ளெந்நாளோ. (உஉ)

சத்த முதலாத் தழைத்திங் கெமக்குணர்த்துஞ்
சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ. (உங)

எம்மை வினையை யிறையையெம்மாற் காட்டாத
வம்மை திரோதை யகலுநா ளெந்நாளோ. (உச)

நித்திரையாய் வந்து நினைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவ தெந்நாளோ. (உரு)

சன்னல்பின்ன லான சகலமெனுங் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநா ளெந்நாளோ. ( )

மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தோயா வருளைத் தொடருநா ளெந்நாளோ. (உ௭)

தன்னுண்மை.

உடம்பறியு மென்னுமந்த வூழலெல்லாந் தீரத்
திடம்பெறவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ. (க)

செம்மையறி வாலறிந்து தேகாதிக் குள்ளிசைந்த
வெம்மைப் புலப்படவே யாமறிவ தெந்நாளோ. (உ)

தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான்சுமந்த
சித்துருவா மெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ. (ங)

பஞ்சப் பொறியையுயி ரென்னுமந்தப் பஞ்சமறச்
செஞ்செவே யெம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ. (௪)

அந்தக் கரணமுயி ராமென்ற வந்தரங்க
சிந்தைக் கணத்திலெம்மைத் தேர்ந்தறிவ தெந்நாளோ.

முக்குணத்தைச் சீவனென்னு மூடத்தை விட்டருளா
லக்கணமே யெம்மை யறிந்துகொள்வ தெந்நாளோ. (௬)

காலையுயி ரென்னுங் கலாதிகள்சொற் கேளாமற்
சீலமுட னெம்மைத் தெளிந்துகொள்வ தெந்நாளோ. ()

வான்கெடுத்துத் தேடு மதிக்கேடர் போலவெமை
நான்கெடுத்துத் தேடாம னன்கறிவ தெந்நாளோ. (அ)

அருளியல்பு.

ஈனந் தருநா டிதுநமக்கு வேண்டாவென்
றானந்த நாட்டி லவதரிப்ப தெந்நாளோ. (க)

பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளா
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளெந்நாளோ. (உ)

ஆதியந்தங் காட்டாம லம்பரம்போ லேநிறைந்த
நீதி லருட்கடலைச் சேருநா ளெந்நாளோ. (ரு)

எட்டுத் திசைக்கீழ்மே லெங்கும் பெருகிவரும், வெட்டவெளி விண்ணூற்றின் மெய்தோய்வ தெந்நாளோ. ()

சூதான மென்று சுருதியெல்லா மோலமிடு
மீதான மானவெற்பை மேவுநா ளெந்நாளோ. (௬)

வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்பகலத் தண்ணருளாய், வந்துபொழி கின்ற மழைகாண்ப தெந்நாளோ.

சூரியர்கள் சந்திரர்க டோன்றாச் சுயஞ்சோதிப்
பூரணதே யத்திற் பொருந்துநா ளெந்நாளோ. (எ)

கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரவருட்
டென்றல்வந்து வீசுவெளி சேருநா ளெந்நாளோ. (அ)

கட்டுநமன் செங்கோல் கடாவடிக்குங் கோலாக
வெட்ட வெளிப்பொருளை மேவுநா ளெந்நாளோ. (௯)

சாலக் கபாடத் தடைதீர வெம்பெருமா
ணோலக்க மண்டபத்து ளோடுநா ளெந்நாளோ. (கo)

விண்ணவன்று மென்னும் விரிநிலா மண்டபத்திற்
றண்ணீ ரருந்தித் தளர்வொழிவ தெந்நாளோ. (கக)

வெய்ய புவிபார்த்து விழித்திருந்த வல்லலறத்
துய்ய வருளிற் றுயிலுநா ளெந்நாளோ. (கஉ)

வெய்ய பிறவிவெயில் வெப்பமெலாம் விட்டகல
ஐயனடி நீழ லடைவதுவு மெந்நாளோ. (௪௯)

மாறாப் பிறவி வினைகடலை நீந்தவுன்
பாதப் புணையினையே பற்றுவ தெந்நாளோ. (௫௦)

களங்கில்லா மெய்ப்பொருளை யிக்கையிலே காணவென
ஞானமெனு மஞ்சனத்தை நான்பெறுவ தெந்நாளோ. ( )

எல்லா மிறந்தவிடத் தெக்கையறை வாழ்வுதனைப்
புல்லாமற் புல்லிப் புணருவ தெந்நாளோ. (௫௨)

சடத்துறவிற் பேர்வெருக்குத் தானுமிலாக் ஞான
நடத்தழகைக் கண்டுகண்ணீர் பாய்விடுவ தெந்நாளோ. ( )

எக்கருமமாந் துன்ப விருட்கடலை விட்டுளம்
மிக்கவனா பெறுதி வெளிப்படுவ தெந்நாளோ. (௫௪)

பொருளியல்பு.

கைவிளக்கின் பின்னேபோய் காண்பார்போல் மெய்ஞ்ஞான, மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப தெந்நாளோ. (௧)

கேடில்பசு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமே
லாமென்ற சுகப்பொருளைக் கண்பெறுவ தெந்நாளோ. (௨)

ஆணவத்தை நீக்கி யறிவுடனே யானவையாக்
காணவத்தைக் கப்பாலைக் காணுவ தெந்நாளோ. (௩)

நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்குவர வற்ற பொருளணைவ தெந்நாளோ. (௪)

அண்டருக்கு மெய்ப்பிள்ளைப்பா லமுதை யென்னை
[illegible]த்திற், கண்டுகொண்டு நின்று களிக்குநா ளெந்நாளோ.

[illegible]காட்டுந் திருவருளைக் கண்ணாகக் கண்டுபோ
[illegible]ட்டிடும் மெய்ப்பொருளைச் சேருநா ளெந்நாளோ. (௬)

[illegible]ருவ தன்மை கழுவிய வெவ்வுயிர்க்கும்
[illegible]ருவ வுண்மைதனைச் சாருநா ளெந்நாளோ. (௭)

[illegible]சிந்தை மறந்து திருவருளாய் நிற்பவர்பால்
[illegible]வந்தபொரு ளெய்மையுந்தான் வாழ்விப்ப தெந்நாளோ.

[illegible]ன்னருக்கு மெய்ம்மெய்ப்போ லெங்கும் வியாபகமா
[illegible]புன்னவொன்றை யுன்னபடி போருநா ளெந்நாளோ. (௯)

அருவுருவ மெல்லா மகன்று நிறை வான
பொருளெமக்கு வந்து புலப்படுவ தெந்நாளோ. (௧௦)

ஆரணமு மாறு வகண்டிதா காரமாம்
பூரணமாந் தெய்வப் பொருளுறுநா ளெந்நாளோ. (௧௧)

சத்தெனவுஞ் சித்தெனவு நயங்கியவா னந்தமாம்
சுத்த வகண்டிதந் தோன்றுநா ளெந்நாளோ. (௧௨)

எங்கெங்கும் பார்த்தாலு மின்புருவாய் நீக்கமின்றித்
தங்குந் தனிப்பொருளைச் சாருநா ளெந்நாளோ. (௧௩)

அடிமுடிகாட் டாதசுத்த வம்பரமாஞ் சோதிக்
கடிவெளியுந் தன்னைக் கலக்குநா ளெந்நாளோ. (௧௪)

ஒன்றனையுங் காட்டா துளத்திருளைக் குறையிட்டு
நின்றபரஞ் சோதியுட னிற்குநா ளெந்நாளோ. (௧௫)

எந்தச் சமய மிசைந்துமறி வூடறிவாய்
வந்தபொரு ளேபொருளா வாஞ்சிப்ப தெந்நாளோ. (கசு)

எவ்வாறிங் குற்றுணர்ந்தார் யாவ ரவர்தமக்கே
யவ்வாருய் நின்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ.

பெண்ணு ணலியெனவும் பேசாம லென்னறிவின்
கண்ணூடே நின்றவொன்றைக் காணுநா ளெந்நாளோ.

நினைப்பு மறப்புமற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா வென்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ. ()

ஆனந்தவியல்பு.

பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணுமணிற்குநா ளெந்நாளோ. (க)

சித்தந் தெளிந்தோர் தெளிவிற் றெளிவான
சுத்த சுகக்கடலுட் டோயுநா ளெந்நாளோ. (உ)

சிற்றின்ப மூண்டுழ் சிறையவனந் தங்கடல்போன்
முற்றின்ப வெள்ளமெமை மூடுநா ளெந்நாளோ. (ங)

எல்லையில்பே ரின்பமய மெப்படியென் றோர்தமக்குச்
சொல்லறியா வூமர்கள்போற் சொல்லுநா ளெந்நாளோ. ()

அண்டரண்ட கோடி யனைத்து முகாந்தவெள்ளங்
கொண்டதெனப் பேரின்பங் கூடுநா ளெந்நாளோ. (ரு)

ஆதியந்த மில்லாத வாதிய நாதியெனுஞ்
சோதியின்பத் தூடே துளையுநா ளெந்நாளோ. (சு)

சாலோக மாதி சவுக்கியமும் விட்டநம்பான்
மேலான ஞானவின்ப மேவுநா ளெந்நாளோ. (எ)

தற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோக மாதியெனும்
பொற்பறிந்தா னந்தம் பொருந்துநா ளெந்நாளோ. (அ)

உள்ளத்தி னுள்ளேதா னூறுஞ் சிவானந்த
வெள்ளந் துளைந்து விடாய்தீர்வ தெந்நாளோ. (கூ)

கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
மன்னுமின்ப வாரமுதை வாய்மடுப்ப தெந்நாளோ. (க0)

மண்ணூ டுழன்ற மயக்கமெல்லாந் தீர்ந்திடவும்
விண்ணூ டெழுந்தசுக மேவுநா ளெந்நாளோ. (கக)

கானற் சலம்போன்ற கட்டுழலைப் பொய்தீர
வானமுத வாவி மருவுநா ளெந்நாளோ. (கஉ)

தீங்கரும்பென் றுலிலியா தின்று லினிப்பனபோற்
பாங்குறம்பே ரின்பம் படைக்குநா ளெந்நாளோ. (கங)

புண்ணியபா வங்கள் பொருந்தாமெய் யன்பரொலா
நண்ணியபே ரின்பசுக நாமணைவ தெந்நாளோ. (கச)

அன்புநிலைமை.

தக்கரவி கண்ட சரோருகம்போ லென்னிதய
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ. (க)

வானமுகில் கண்ட மயூரபக்ஷி போலவையன்
ஞானநடங் கண்டு நடிக்குநா ளெந்நாளோ. (உ)

சந்திரனை நாடுஞ் சகோரபக்ஷி போலறிவில்
வந்தபரஞ் சோதியையாம் வாஞ்சிப்ப தெந்நாளோ. (௩)

சூத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம் பொன்
றாட்டுஞ், சித்திரனையென் கண்ணுற் றெரிசிப்ப தெந்
நாளோ. (௪)

அந்தரத்தே நின்றாடு மானந்தக் கூத்தனுக்கென்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்ப தெந்நாளோ. (௫)

கள்ளனிவ னென்றுமெனைக் கைவிடுதல் காரியமோ
வள்ளலே யென்று வருந்துநா ளெந்நாளோ. (௬)

விண்ணுடையாய் காதுவிமலா பரஞ்சோதி
யண்ணலே யாவென் றரற்றுநா ளெந்நாளோ. (௭)

ஏதுசெய்தாலு மென்பணிபோய் நின்பணியா
மாதலா லென்று வருந்துநா ளெந்நாளோ. (௮)

பண்ணிங்கா ணென்னுள் பழம்பொருளே யின்றுனைக்
கண்ணிங்கா ணென்னவுங் கைகுவிப்ப தெந்நாளோ. ( )

பொங்கிதமான புழுக்கமெல்லாந் தீரவின்ப
மெங்கேயெங் கேயென் றிரங்குநா ளெந்நாளோ. (௧0)

கடலின்மடை கண்டதுபோற் கண்ணீ ராறாக
வுடல்வெதும்பி மூர்ச்சித் துருகுநா ளெந்நாளோ. (௧௧)

புலர்ந்தேன் முகஞ்சருகாய்ப் போனே னிற்காண
வலந்தேனென் றேங்கி யழுங்குநா ளெந்நாளோ. (௧௨)

புண்ணீர்மை யாளர் புலம்புமா போற்புலம்பிக்
கண்ணீருங் கம்பலையுங் காட்டுநா ளெந்நாளோ. (௧௩)

போற்றேனென் றூறுமெனைப் புத்திசெய்யும் வேதனைக்கிங், காற்றேனுந் தேனென் றறைகுநா ளெந்நாளோ. (௧௪)

பொய்மூடக் கும்பூமிசில போட்டலறப் பூங்கமலன்
கைமூடக் காண்சனைக் கட்டறுவ தெந்நாளோ. (௧௫)

கற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாம
னற்குணத்தர் கைகோர்த்து நான்றிரிவ தெந்நாளோ. ( )

நாட்டமையா மாயைக் கழலீக்கி யந்தமே
விட்டவையோ கென்று வியக்குநா ளெந்நாளோ. (௧௭)

அன்பர்நெறி.

அத்துவா வெல்லா மடக்கச்சோ தித்தபடிச்
சித்துருவாய் நின்றோர் தெளிவறிவ தெந்நாளோ. (௧)

பற்றற்றுச் சிந்தை முயற்சியற்று மூதறிவாய்ப் பேச் சற்றோர் பெற்றவொன்றைப் பெற்றிடுநா ளெந்நாளோ. (

கேட்டாலே யான குணமிறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநா ளெந்நாளோ. (௩)

கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா னந்த
மடுத்தோ ரடுத்தபொருட் கார்வம்வைப்ப தெந்நாளோ.

கற்கண்டா லோடுகின்ற காக்கைபோற் பொய்ம்மாயச்
சொற்கண்டா லோடுமன்பர் தோய்வுறுவ தெந்நாளோ.

மெய்த்தநுவக் கல்விபுரி வேடமெல்லா மோடவிட்டு
சித்தமொன்றாத் தோரச் செயமுதிக தெக்காவோ. (அ)

குற்றச் சமயக் குறும்படர்ந்த தற்போத
மற்றவைகட் கற்றபொருட் கன்புவைப்ப தெக்காவோ.

தக்கவிட்டுப் பாழாஞ் சமயக்கு தர்க்கம்விட்டு
சித்துருவைக் கண்டவழி சொல்பெறுவ தெக்காவோ. (௯)

வீறியவே தாந்தமுதல் மிக்கவா லாக்கவலா
யாகுமுணர்ச் சோருணர்வுக் கன்புவைப்ப தெக்காவோ.

கண்டவிட மெல்லாங் கடவுளென வெண்ணிக்கு, கொண்டகொள்சச் சோடெருக்கித் தொண்டுறுவ தெக்காவோ. (௧௦)

பாக்கியங்க ளெல்லாம் பழுக்கது பலம்புறப்போக்
கோக்குக் கிருக்கூடியவை சொக்குவ தெக்காவோ (௧௧)

சக்கமுக் கம்புவிபோ லென்னுக் கபோதனைவ
செக்கநிலை காடிக்கச் சித்தமுவைப்ப தெக்காவோ. (௧௨)

ஆர்வுருவா.

இருக்கவுறுப்புக் கிபாகி பெய்தறிருப் பாட்டகல்
பெருமிலையைக் கண்டிணைந்து போக்கறுவ தெக்காவோ.

அற்றவர்கட் கற்றசிவ முயெய்த வக்குவித
முற்றுமொழி கண்டருளின் மூழ்குவ தெக்காவோ. (௨)

நானென்னை முன்படைத்த னென்ற நகவுவையை
நானென்று வன்மைபெற்ற நமுணர்வ தெக்காவோ.

என்றனுடைய தோழனுமா மென்ற திருப்பாட்டி
னன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்வ தெந்நாளோ.

ஆருடனே சேரு மறிவென்ற வவ்வுரையைத்
தேரும் படிக்கருடான் சேருநா ளெந்நாளோ. (௫)

உன்னினுன்று மென்ற வுறுமொழியா லென்னிதயந்
தன்னினுன்னி நன்னெறியைச் சாருநா ளெந்நாளோ. ()

நினைப்பறவே தானினைந்தே னென்றதிலே நாடி
யனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ. (௭)

சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்
றாகி, நின்றவிடு மென்றநெறி நிற்குநா ளெந்நாளோ. ()

ஆதியந்த மில்லா வரிய பரஞ்சோதி
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநா ளெந்நாளோ. (௯)

பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந்தே னென்ற
நெறியுடையான் சொல்வினிலே நிற்குநா ளெந்நாளோ.

திரையற்ற நீர்போற் றெளியவெனத் தேர்ந்த
வுரைபற்றி யுற்றநங் கொடுங்குநா ளெந்நாளோ. (௧௧)

அறியா வறிவி லவிழ்ந்தேற வென்ற
நெறியா முறையுணர்ந்து நிற்குநா ளெந்நாளோ. (௧௨)

எனக்குனீ யென்று மியற்கையாப் பின்னு
முனக்குநா னென்ற வுறுதிகொள்வ தெந்நாளோ.

அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ.

சிற்குருநிலை.

பண்ணினிசை போலப் பரமன்பா லின்றநிற்க
லெண்ணியரு ளாகி யிருக்குநா ளெந்நாளோ. (௧)

அறிவோ டறியாமை யற்றறிவி னூடே
குறியி லறிவுவந்து கூடுநா ளெந்நாளோ. (௨)

சொல்லான் மனத்தாற் றொடராச் சுபூரணத்தி
னில்லா நிலையாய் நிலைநிற்ப தெந்நாளோ. (௩)

செங்கதிரின் முன்மதியந் தேசடங்கி நின்றிடல்போ
லங்கணன்றன் றாளி லடங்குநா ளெந்நாளோ. (௪)

வானூ டடங்கும் வளிபோல வின்பவுருவாங்
கோனூ டடங்குங் குறிப்பறிவ தெந்நாளோ. (௫)

செப்பரிய நன்கருணைச் சிற்சுகனாம் பூரணத்தி
லப்பினிடை யுப்பா யமையுநா ளெந்நாளோ. (௬)

தூயவறி வான சுகரூப சோதிதன்பாற்
றீயினிரும் பென்னத் திகழுநா ளெந்நாளோ. (௭)

தீதிலையாக் கர்ப்பூர தீபமென நானகண்ட
சோதியுட னொன்றித் துரிசறுவ தெந்நாளோ. (௮)

ஆராருங் காணாத வற்புதனார் பொற்பதத்தி
னீரார் நிழல்போ லிலகுநா ளெந்நாளோ. (௯)

எட்டத் தொலையாத வெந்தைபிரான் சந்நிதியிற்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவ தெந்நாளோ. (௧௦)

கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல
விருப்புவட்டா வின்புருவை மேவுநா ளெந்நாளோ.

துச்சப் புலனாற் சுழலாமற் றண்ணருளா
லுச்சிக் கதிர்ப்படிக மொவ்வுநா ளெந்நாளோ. (௧௨)

இம்மா நிலத்தி லிருந்தபடி யேயிருந்து
சும்மா வருளைத் தொடருநா ளெந்நாளோ. (௧௩)

தானவனாந் தன்மையெய்தித் தண்டமெனவண்டமெங்கு, ஞானமத யானை நடத்துநா ளெந்நாளோ. (௧௪)

ஒன்றிரண்டு மில்லதுவா யொன்றிரண்டு முள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர்பெறுவ தெந்நாளோ. (௧௫)

பாசமக லாமற் பதியிற் கலவாமன்
மாசில் சமத்துமுத்தி வாய்க்குநா ளெந்நாளோ. (௧௬)

சிற்றறிவ மெள்ளச் சிதைந்தெம்மான் பேரறிவை
யுற்றறியா வண்ணமறிந் தோங்குநா ளெந்நாளோ. (௧௭)

தந்திரத்தை மந்திரத்தைச் சாரினவை யாமறிவென்
றெந்தையுணர் வேவடிவா யெய்துநா ளெந்நாளோ. ()

போக்குவர வற்றவெளி போனிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி நினைப்பறுவ தெந்நாளோ. (௧௯)

காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்றவந்த
வீண்பாவம் போயதுவாய் மேவுநா ளெந்நாளோ. (௨௦)

வாடாதோ நானுவாய் மாயாதோ வெங்கோவை
நாடாதே நாடி நலம்பெறுவ தெந்நாளோ. (௨௧)

ஆடலையே காட்டியெம தாடலொழித் தாண்டரன்பொற்
றாடலைமேற் சூடித் தழைக்குநா ளெந்நாளோ. (உஉ)

மேலொடுகீ ழில்லாத வித்தகனார் தம்முடனே
பாலொடுநீர் போற்கலந்து பண்புறுவ தெந்நாளோ. ()

அறியா தறிந்தெமையா ளண்ணலைநா மாகக்
குறியாத வண்ணங் குறிக்குநா ளெந்நாளோ. (உச)

ஓராமன் மந்திரமு மூன்றுமெ னம்பரனைப்
பாராமற் பார்த்துப் பழகுநா ளெந்நாளோ. (உரு)

ஊன்பற்று மென்றோ டுறவுபற்றும் பூரணன்பால்
வான்பற்றுங் கண்போன் மருவுநா ளெந்நாளோ. (உசு)

ஆண்டான் மவுனி யளித்தவறி வாலறிவைத்
தூண்டாமற் றூண்டித் துலங்குநா ளெந்நாளோ. (உஎ)

ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ. (உஅ)

நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம்.

கன்மநெறி தப்பிற் கடுநரகென் றெந்நாளு
நன்மைதரு ஞானநெறி நாமணைவ தெந்நாளோ. (க)

ஞானநெறி தானே நழுவிடினு முப்பதத்து
ளானமுத்தி நல்குமென வன்புறுவ தெந்நாளோ. (உ)

பன்மார்க்க மான பலவடிபட் டேனுமொரு
சொன்மார்க்கங் கண்டு துலங்குநா ளெந்நாளோ. (௩)

அத்துவித மென்ற வனனியச்சொற் கண்டுணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடருநா ளெந்நாளோ. (ரு)

*கேட்டன் முத னான்காலே கேடிலா நாற்பதமும்
வாட்ட மறவெமக்கு வாய்க்குநா ளெந்நாளோ. (சா)

என்னதியா னென்பதற வெவ்விடமு மென்றுசான்
சந்நிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ. (எ)

நாம்பிரம மென்றா னடுவேயொன் றுண்டாமாற்
றேம்பியெல்லா மொன்றாய்த் திகழுநா ளெந்நாளோ. ()

முச்சகமே யாதி முழுதுமகண் டாகார
சச்சிதா னந்தசிவந் தானென்ப தெந்நாளோ. (அ)

எவ்வடிவும் பூரணமா மெந்தையரு ளெந்நிறைந்த
வவ்வடிவுக் குள்ளே யடங்குநா ளெந்நாளோ. (கூ)

சிந்தித்த தெல்லாஞ் சிவபூ ரணமாக
வந்தித்து வாழ்த்தி வணங்குநா ளெந்நாளோ. (கo)

சாங்கியபார் விண்ணாதி தானேனா றக்கினியா
யோங்கு மியோகவுணர் வுற்றிடுநா ளெந்நாளோ. (கக)

ஆசனமூர்த் தங்க ளறவகண்டா காரசிவ
பூசைசெய வாசை பொருந்துநா ளெந்நாளோ. (கஉ)

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளா
நெஞ்செழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ. (கங)

* கேட்டன் முத னான்காவன "கேட்டலுடன் சிந்தித்தறெளிதனிட்டை கிளத்தலென வீரிரண்டா" மென்ற தனாலறிக.

*அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் றன்னடிமை
யெவ்வுயிரு மென்றபணி யாஞ்செய்வ தெந்நாளோ. ()

தேசிகர்கோ னான திறன்மவுனி நந்தமக்கு
வாசி கொடுக்க மகிழுநா ளெந்நாளோ. (௧௫)

குருலிங்க சங்கமமாக் கொண்ட திரு மேனி
யருண்மயமென் றன்புற் றருள்பெறுவ தெந்நாளோ. ()

ஆக பாடல் - ௩௯௰௪.

காண்பேனோவென்கண்ணி.

சித்திக்குந் தோறந் தெவிட்டா வமுதேயென்
புத்திக்கு ணீதான் பொருந்திடவுங் காண்பேனோ. (௧)

கேவலத்தி னுங்கிடந்து கீழ்ப்படா தின்பவருட்
காவலன்பா லொன்றிக் கலந்திடவுங் காண்பேனோ. (௨)

துரியங் கடந்தவொன்றே தூவெளியாய் நின்ற
பெரியசிறை வேயுனைநான் பெற்றிடவுங் காண்பேனோ.

மாசற்ற வன்பர்நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் றேசினையுங் காண்பேனோ. (௪)

---

* அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரா னென்பதனை 'அகரமுதல வெழுத்தெல்லா மாதிபகவன்' என்பதனானும், 'அகர வுயிர்போ லறிவாகி யெங்கு நிகரி லிறை நிற்கு நிறைந்து' என்பதனானு மறிக.

மாயா விகார மலமகல வெந்தைபிரா
னேயானு பூதி நிலைபெறவுங் காண்பேனோ. (ரு)

பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே, மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ. (சா)

வாலற்ற பட்டமென மாயாமு னப்படலங்
காலற்று வீழவுமுக் கண்ணுடையாய் காண்பேனோ. (எ)

உள்ளும் புறம்பு மொருபடித்தாய் நின்றசுகங்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ. ()

காட்டுகின்ற முக்கட் கரும்பே கனியேயென்
றேட்டமெல்லாந் தீரவுன தாடலையுங் காண்பேனோ. (கூ)

தூங்காமற் றூங்கிச் சுகப்பெருமா னின்னிறைவி
னீங்காம லிற்கு நிலைபெறவுங் காண்பேனோ. (க0)

வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூ ரேறநின் பொன்னடியுங் காண்பேனோ. (கக)

சாட்டையிலாப் பம்பரம்போ லாடுஞ் சடசால
நாட்டமற வெந்தைசுத்த ஞானவெளி காண்பேனோ. ()

மன்றுடும் வாழ்வே மரகதஞ்சேர் மாணிக்கக்
குன்றேநின் றாட்கீழ் குடிபெறவுங் காண்பேனோ. (கரு)

பொய்யென் றறிந்துமெமைப் போகவொட்டா தையவிந்த, வையங் கனமயக்க மாற்றிடவுங் காண்பேனோ.

தாயினு நல்ல தயாளுவே நின்னையன்றிநீ, தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனோ. (௧௫)

எஞ்செயினு மெம்பெறினு மென்னிறைவா வேழையன்யா, னின்செயலென் றன்று நினைவுவரக் காண்பேனோ. (௧௬)

கள்ளத் தினையு மிரக்கமிலா வன்பாவி
யுள்ளத்து மெந்தை யுலாவிடவுங் காண்பேனோ. (௧௭)

வஞ்சகத்துங் காலயமாம் வல்வினையே னுகெடவே
னெஞ்சகத்தி லையாநீ சேர்பெறவுங் காண்பேனோ. (௧௮)

தொல்லைப் பிறவித் துயர்கெடவெ, மெந்தைபிரான்
மல்லற் கருணை வழங்கிடவுங் காண்பேனோ. (௧௯)

வாளாருங் கண்ணார் மயற்கடலி லாழ்ந்தேனச்
சூளாக வெந்தை யருள்செயவுங் காண்பேனோ. (௨௦)

பஞ்சாய்ப் பறந்துநெஞ்சப் பாவியைநீ கூவியையா
வஞ்சாதை யென்றின் னருள்செயவுங் காண்பேனோ. ()

ஆங்காரங் காதி யலைமத் துழன்றமனம்
வாங்கிமெனை யையாநீ வாவெனவுங் காண்பேனோ. (௨௨)

சிட்டர்க் கெளிய சிவனேயோ தீவினையேன்
மட்டற்ற வாசை மயக்கறவுங் காண்பேனோ. (௨௩)

உண்ணின் றுணர்த்து முலப்பிலா வொன்றேநின்
றண்ணென்ற சாந்தவருள் சார்ந்திடவுங் காண்பேனோ.

ஓடுங் கருத்தொடுங்க வுள்ளுணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ. (௨௫)

வாக்கான் மனத்தான் மதிப்பரியாய் நின்னருளை
நோக்காம னோக்கிநிற்கு நுண்ணறிவு காண்பேனோ. ()

இவ்வுடம்பு நீங்குமுன்னே யெந்தாய்கே ளின்னருளா
மவ்வுடம்புக் குள்ளே யவதரிக்கக் காண்பேனோ. (௨௭)

நித்தமா யொன்றாய் நிரஞ்சனமாய் நிர்க்குணமாஞ்
சுத்தவெளி நீவெளியாய்த் தோன்றிடவுங் காண்பேனோ.

கண்ணிறைந்த மோனக் கருத்தேயென் கண்ணேயென்
னுண்ணிறைந்த மாயை யொழித்திடவுங் காண்பேனோ.

அத்தா வமலா வருளான வானந்த
சித்தா வெனக்குனருள் செய்திடவுங் காண்பேனோ. ()

வீணே பிறந்திறந்து வேசற்றே னாசையறக்
காணே னிறைநின் கருணைபெறக் காண்பேனோ. (௩௧)

சட்டையொத்த விவ்வுடலந் தள்ளுமுன்னே நான்சகச
நிட்டையைப்பெற் றையா நிருவிகற்பங் காண்பேனோ.

எல்லாந் தெரியு மிறைவாவென் னல்லலெலாஞ்
சொல்லாமு னீதான் றெருத்திரங்கக் காண்பேனோ ()

அண்டபகி ரண்ட மனைத்துமொருபடித்தாக், கண்ட-
வர்கள் கண்ட திருக் காட்சியையுங் காண்பேனோ. (௩௪)

ஊனிருந்த காய முடனிருப்ப வெந்தைநின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக் காண்பேனோ.

நிலையத் தனையுந் தெளிவறியாப் பாவியே, னினைவிற்
பரம்பொருணீ நேர்பெறவுங் காண்பேனோ. (ருசு)
துன்பமெனுந் திட்டனைத்துஞ் சூறையிட வையாவே
யின்பவெள்ளம் வந்திங் கெதிர்ப்படவுங் காண்பேனோ.

ஆக பாடல் - ருருக.

ஆகாதோவென்கண்ணி.

கல்லாத நெஞ்சங் கரைந்துருக வெற்றொழிற்றும்
வல்லாய்நின் னின்பம் வழங்கினா லாகாதோ. (க)

என்னை யறிய வெனக்கறிவாய் நின்னருணின்
றன்னை யறிந் தின்பகலந்து சாரவைத்தா லாகாதோ. (உ)

பொய்ம்மையே யான புணர்ப்பொழித் தின்ப
மெய்ம்மையம்பத் தென்னை விழுங்கவைத்தா லாகாதோ. ( )

மட்டிலாச் சிற்சுகமாம் வாழ்வேநின் னின்பமயஞ்
சிட்டர்போல் யானருந்தத் தேக்கவைத்தா லாகாதோ. ( )

அத்தாநின் பொற்றா ளடிக்கே யநுதினமும்
பித்தாக்கி யின்பம் பெருகவைத்தா லாகாதோ. (ரு)

மெல்லியலார் மோக விழற்கிறைப்பே னையாநின்
னெல்லையிலா னந்தநல மிச்சித்தா லாகாதோ. (சு)

சுட்டழகா யெண்ணுமனஞ் சூறையிட்டா னந்தமயக்
கட்டழகா நின்னைக் கலக்கவைத்தா லாகாதோ. (எ)

சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
யாதியே நின்னை யறியவைத்தா லாகாதோ. (அ)

நேசஞ் சிறிதுமிலே னின்மலனே நின்னடிக்கே
வாசஞ் செயவிரங்கி வாவென்று லாகாதோ. (கூ)

என்னறிவுக் குள்ளே யிருந்ததுபோ லையாவே
நின்னறிவு னின்னுடன்யா னிற்கவைத்தா லாகாதோ.

ஆதிப் பிரானேயென் னல்ல விருளகலச்
சோதிப்ர காசமயத் தோன்றுவித்தா லாகாதோ. (கக)

ஆசைச் சுழற்கடலி லாழாம லையாநின்
னேசப் புணைத்தா னிறுத்தினு லாகாதோ. (கஉ)

பாசநிக ளங்களெல்லாம் பஞ்சாகச் செஞ்செவே
யீசனென்னை வாவென் றிரங்கினு லாகாதோ. (கங)

தூய்வுள் ளன்பா யுருகிவாய் விட்டரற்றிச்
சேயாகி யெந்தைநின்னைச் சேரவைத்தா லாகாதோ. ()

ஆதியாம் வாழ்வா யகண்டிதமாய் நின்றபராஞ்
சோதிநீ யென்னைத் தொழும்பனென்று லாகாதோ. ()

விண்ணூறக் கண்ட விழிபோற் பரஞ்சோதி
கண்ணூற நின்னிறைவைக் காணவைத்தா லாகாதோ. ()

சேராமற் சேர்ந்துநின்ற சின்மயனே நின்மயத்தைப்
பாராமற் பாரெனநீ பக்ஷம்வைத்தா லாகாதோ. (கஎ)

கண்ணாடி போலவெலாங் காட்டுந் திருவருளை
யுண்ணாடி யையா வருகவைத்தா லாகாதோ. (கஅ)

மூலவிருள் கால்வாங்க மூதறிவு தோன்றவருட்
கோலம்வெளி யாகவெந்தை கூடுவித்தா லாகாதோ. ( )

சாற்றரிய வின்பவெள்ளந் தாக்குமதி னீமூழ்கி
யூற்றமுறு மென்னவதி லுண்மைசொன்ன லாகாதோ.

கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்யவரு
ளையநின்றாட் கீழே யடிமைநின்ற லாகாதோ. (உ௧)

ஆக பாடல் - ௫௩௭௨.

இல்லையோவென்கண்ணி.

ஏதுந் தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கவொரு ஞானவிளக் கில்லையோ. (௧)

பணியற்று நின்று பதைப்பறவென் கண்ணுண்
மணியொத்த சோதியின்ப வாரியெனக் கில்லையோ. ( )

எம்மா லறிவதற வெம்பெருமான் யாதுமின்றிச்
சும்மா விருக்கவொரு சூத்திரந்தா னில்லையோ. (௩)

நாய்க்குங் கடையானே னாதாநின் னின்பமயம்
வாய்க்கும் படியினியோர் மந்திரந்தா னில்லையோ. (௪)

ஊனாக நிற்கு முணர்வைமறந் தையாநீ
தானாக நிற்கவொரு தந்திரந்தா னில்லையோ. (௫)

அன்றும் பசுறு மகண்டவழி யெய்துமோவன்
றென்றும் பழமொழி போந்து முடிக்கலையோ. (௯)

ஆக பாடல் - ருகஎஅ.

வேண்டாவோ வெண்கண்ணி.

அகண்டவழி வெள்ளையின் காட்சியென்றே தைகூனிக் [illegible]ருப், பண்டையின்று நின்றவென்னைப் பார்த்திரங்க வேண்டாவோ. (௧)

மைந்தனே போடுமே மனப்பாம்பு மாயவொரு
போதத்தால் [illegible] வேண்டாவோ. (௨)

[illegible] நின்றது
நின்றோநீ தெள்ளத் தெளிக்க வேண்டாவோ.

அள்ளக் குறையா வகண்டிதா னந்தமெனும்
வெள்ளமெனைக் கையால் வெளிப்படுத்த வேண்டாவோ.

ஆண்டானே யண்ட ரமுதேயென் னாருயிரே, தொண்டனேற் கின்பந் தொகுத்திரங்க வேண்டாவோ. (௫)

பாராதே நின்று பதையாதே சும்மாதான்
வாரா வெனவும் வழிகாட்ட வேண்டாவோ. (௬)

ஆக பாடல் - ருகஅ௪.

நல்லறிவேயென்கண்ணி.

எண்ணிறைந்த மேன்மைபடைத் தெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்க், கண்ணிறைந்த சோதியைநாங் காணவா நல்லறிவே. (க)

சித்தான நாமென்சடத்தை நாமென்ன வென்றுஞ்
சத்தான வுண்மைதனைச் சாரவா நல்லறிவே. (உ)

அங்குமிங்கு மெங்குநிறை யற்புதனார் பொற்பறிந்து
பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெறவா நல்லறிவே. (ரு)

கான்றசோ றென்னவிந்தக் காசினிவாழ் வத்தனையுந்
தோன்ற வருள்வெளியிற் றோன்றவா நல்லறிவே. (ச)

ஆக பாடல் - ௲௩௮௮.

பலவகைக்கண்ணி.

என்னரசே கேட்டிலையோ வென்செயலோ வேதுமில்லை
தன்னரசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே. (க)

பண்டொருகா னின்பாற் பழக்கமுண்டோ வெந்தைநினைக், கண்டொருகாற் போற்றக் கருத்துங் கருதியதே.

கண்டனவே காணுமன்றிக் காணாவே காணவென்
கொண்டறிவே னெந்தைநினைக் கூடுங் குறிப்பினையே.

[illegible] கற்பகமே [illegible]
[illegible] பொருத்தத்தான் சொல்வேனோ.

[illegible]
[illegible]

[illegible]
[illegible] பாடைத்ததே. (௮)

கற்பதெல்லாங் கற்றேறுங் கண்ணுடையாய் நின்ப
[illegible] பாதத்தே.

[illegible]
[illegible] (௯)

[illegible] வென்னுகின்ற
[illegible] ()

பண்ணாக்க [illegible] போதுவதி
[illegible] யுடையாவென் செய்கேனே. (க0)

முன்னிலைக்கப் பின்மறைக்கு முடவிரு ளாகெவனே
[illegible] வென்மறக்கு வெந்தைப் பெருமானே. ()

வல்லாளா போருதிலன் வாள்கருணை யென்னிடத்தே
யில்லாதே போனாலுன் னெவ்வண்ண முய்வேனே. (க௨)

வாக்கு மனமு மவுனமுற வெங்கதினிலே
நோக்கு மவுனமிக்க நூலறிவி லுண்டாமோ. (க௩)

ஒன்றாய்ப் பலவா யுலகமெங்குந் தானேயாய்
நின்றா யையயாவெனை நீங்கற் கெளிதாமோ. (க௪)

ஆவித் துணையே யருமருந்தே யென்றனைநீ
கூவி யழைத்தின்பங் கொடுத்தாற் குறைவாமோ. (௧௫)

எத்தனையோ நின்விளையாட் டெந்தாய்கே ளிவ்வள
வென், றத்தனையு மென்றே லறியத் தரமாமோ. (௧௬)

தேடுவார் தேடுஞ் சிவனேயோ நின்றிருத்தாள்
கூடுவான் பட்டதுயர் கூறற் கெளிதாமோ. (௧௭)

பற்றினைப் பற்றுமெந்தாய் பற்றுவிட்டாற் கேவ
லத்தி, லுற்றுவிடு நெஞ்சமுனை யொன்றிநிற்ப தெப்ப
டியோ. (௧௮)

ஒப்பிலா வொன்றேநின் றுண்மையெல்லாங் காட்
டாமற், பொய்ப்பவஞ்சை செய்போற் புதுக்கிவைத்த
தென்னேயோ. (௧௯)

காலால் வழிநடக்குங் காலத்தே கண்புதைத்தாற்
போமோ வொருவழியிற் போக்கறிவாய் நில்லாயோ. (௨௰)

தன்னாக் காடாஞ் சடசால பூமிமிசை
யென்னையே யென்னை யிறையாக நாட்டினையோ. (௨௧)

திங்களுமதானின் றிருவாக்கை விட்டனசே
பொங்கு விடமனைய பொய்ந்நூல் புலம்புவதேன். (௨௨)

உன்னவுன்ன வென்னையெடுத் துள்விழுங்கு நின்னி
றைவை, யின்னமின்னங் காணுமெந் தாய் சுழல்
வேனோ. (௨௩)

ஆராவமுதனைய வானந்த வாரியென்பாற்
றாராம லையாமீ தள்ளிவிட வந்ததென்றே. (௨௪)

ஆக பாடல் - ௲௪௱௨.

நின்ற நிலை.

கலித்தாழிசை.

நின்ற நிலையே நிலையாவைத் தானந்த
  நிலைதானே நிருவிகற்ப நிலையு மாகி
யென்றுமழி யாதவின்ப வெள்ளந் தேக்கி [தோ.
  யிருக்கவெனைத் தொடர்ந்துதொடர்ந் திழுக்கு மந்

இருக்காதி மறைமுடிவுஞ் சிவாக மாதி
  யிதயமுங்கை காட்டெனவே யிதயத் துள்ளே
யொருக்காலே யுணர்ந்தவர்கட் கெக்கா லுந்தா
  னொழியாத வின்பவெள்ள முலவா நிற்கும். (௨)

கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
  கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
  குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ. (௩)

ஆக பாடல் - ௲௪௱௫.

பாதிநின்றதுள்ளம்.

வஞ்சிவிருத்தம்.

பாதிநின்ற பனுவ லோங்க
  மேடை நின்ற செல்வமே
சாதிநின்ற ஞான மல்கி
  வாதி நின்ற வுதயமே. (௧)

அந்த மென்ற கிள்ளையே
  பத்தி செய்து பனுவலார்
சித்த வின்ற பேசமே
  வைத்த மென்ன வாமமே. (௨)

சிந்தை யன்பு சேரவே
  வைத்து நின்னை நாடுவோர்
முத்த மைந்த னின்பமே
  முத்தி சக்ர நாளுமே. (௩)

அண்ட ரண்டம் யாவுமே
  கொண்டு நின்ற கோலமே
தொண்டர் வந்து சேர்க்கவே
  கண்ட தெய்வ மானதே. (௪)

நன்மை போல வுள்ளிருந்த
  மன்று ஞான வாதமே

வன்னே பேரின்பக் களித்த
செல்லினை யாறு கிலைவரே. (௯)

ஆக பாடல் - ௩௱௨௰.

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு — சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆதியந் தமில் லாத-எனைக்-காத்த மாயநீ வாய்த்தன் றிலங்குந்து, சோதி மயமாய்த் தோன்றி-அனைச்-சொல்லாத வார்த்தையைச் சொன்னானடி. தோழி—சங்கர சங்கர சம்பு. (௧)

சொல்லைச்சொல் லேயென்று சொல்லேன் - என்னைச்-சுகாந்த் தனிமையே சும்மாவிருத்தி, முன்னிலை யெனுமில் லாதே-சக-முற்றச்செய் தேவியைப் பற்றிக் கொண்டாண்டி—சங்கர சங்கர சம்பு. (௨)

பற்றிய பற்றற வன்னே - தன்னைப் - பற்றச்சொன் னான்பற்றிப் பார்த்த விடத்தே, பெற்றதை யேதென்று சொல்வேன் - சற்றும் - பேசாத காரியம் பேசினான் தோழி—சங்கர சங்கர சம்பு. (௩)

போகா விருப்பங்கள் பெறிச்-சத்தப்-பேயங்க ளாகிப் பிதற்றித் திரிந்தேன், ஆசா பிசாசைத் துரத்தி-ஐய னடி-

யினைச் சிறை யடக்கிக்கொண் டாண்டி—சங்கர சங்கர சம்பு. (௪)

அடக்கிப் புலனைப் பிடித்தே - மன - மாகிய பேயினை லன்பை வளர்த்தேன், மடக்கிக்கொண் டானென்னைத் தன்னுட் - சற்றும் - வாய்பேசா வண்ண மரபுஞ்செய் தாண்டி—சங்கர சங்கர சம்பு. (௫)

மரணைக் கெடுத்தவன் கேட்டேன் - இனை - வாய்விட்டுச் சொல்லிடவ் வாழ்வெனக் கில்லை, கரவு பருடனு மல்லன் - என்னைக் - காக்குந் தலைமைக் கடவுள் காண் பின்னை—சங்கர சங்கர சம்பு. (௬)

கடலின் மடைவிண்ட தென்ன - இரு - கண்களு மானந்தக் கண்ணீர் சொரிய, உடலும் புளகித மாக - என - துள்ள முருக வுபாயஞ்செய் தாண்டி—சங்கர சங்கர சம்பு. (௭)

உள்ளது மில்லது மாய்முன் உற்ற - வுணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாந், தன்னெனச் சொல்லி பென்னையன் - என்னைத் - தானாக்கிக் கொண்ட சமர்த் தைப்பார் தோழி—சங்கர சங்கர சம்பு. (௮)

பாராதி பூதமு மல்ல - உன்னிப் - பார்க்கு மிந்திரியங் கரணமு மல்ல, ஆரா யுணர்வுமே யன்றன் - தூய - னன்பா யுரைத்தசொல் லானந்தத் தோழி—சங்கர சங்கர சம்பு.

அன்பருக் கன்பான மெய்யன்-ஐய-னானந்த மோன னருட்குரு நாதன், தன்பாதஞ் சென்னியில் வைத்தான்-என்னைத்-தானறிந் தேனங்கு நானறி யேனே—சங்கர சங்கர சம்பு. (௰)

இறப்பும் பிறப்பும் பொருந்த-எனைக்-கைவலையம் வந்தென் றெண்ணியான் பார்க்கின், மறப்பு நினைப்புமாய் நின்ற-வந்த-மாயா மனந்தான் தளர்ந்தது தோழி—சங்கர சங்கர சம்பு. (௧௧)

மனமேக லாமெனைக் கன்றோ-தெய்வ-மவுன குருவாகி வந்துகை காட்டி, எனதாம் பணியற மாற்றி-அவ-னின்னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி—சங்கர சங்கர சம்பு. (௧௨)

அருளா லெவையும்பா ரென்றான்-அதை-யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன், இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட-வென்னையுங் கண்டில னென்னேடி தோழி—சங்கர சங்கர சம்ப (௧௩)

என்னையுந் தன்னையும் வேறா-யுள்ளத்-தெண்ணாத வண்ண மிரண்டற நிற்கச், சொன்னது போலொரு சொல்லே-அந்தச்-சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்—சங்கர சங்கர சம்பு. (௧௪)

விளையுஞ் சிவானந்த பூமி-அந்த-வெட்ட வெளிநண்ணித் துட்டவிருளாங், களையைக் களைந்துபின் பார்

த்தேன்-றூயன்-சுவையன்றி வேறொன்றுங் காண்டிலேன் தோழி—சங்கர சங்கர சம்பு. (௧௫)

கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை-இரு-கண்களை நீக்கவுங் கண்டோந் தயிருள், கொண்டார்போற் போனாலும் பொருள்-இதிற்-றுணையேது கலையேது கூறாய்த் தோழி—சங்கர சங்கர சம்பு. (௧௬)

கலையேது மறியாத வென்னை-சுத்த-சாதரக்க மேலா னொடு காட்டக்கத் தோன்று, சலமேது மில்லாமை யெல்லாம்-வல்லான்-றானென் றிலைமீது தாக்கிறான் தோழி—சங்கர சங்கர சம்பு. (௧௭)

தாக்குதல் வரைக்க சோதி-அறுறு-தன்னிற் சிறிய வெளியாத்தன் வருளாற், போக்கு வரவற் றிருக்குஞ்-சுத்த-பூரண மாக்கிறான் புதுமைகாண் பின்னே—சங்கர சங்கர சம்பு. (௧௮)

அக்கி யவித்தரத் தடைக்குச்-சொழி-சுத்தபோ தை துமெள் ளத்தமே யேறுக், தாக்கற விற்குந் சமரத்த நன்மை-சாகஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி—சங்கர சங்கர சம்பு. (௧௯)

சிந்தை பிறந்தது மாங்கே-அந்தச்-சிந்தை யிறந்து தெளிந்தது மாங்கே, அந்த நிலையது மாங்கே-கண்ட-யானென் றிரண்டற் றிருந்தது மாங்கே—சங்கர சங்கர சம்பு. (௨௦)

ஆங்கென்று மிங்கென்று முண்டோ - சத்தி - தானை
த்த சோதி யகண்ட வடிவாய், தங்கி நிறைந்தது கண்
டாற் - பின்ன - மொன்றென்று திரண்டுடன் றனைத்திட
வாயோ—சங்கர சங்கர சம்பு. (உக)

என்று மழியுமிக் காயம் - இதை - பொருளென்று மெய்
யென் றிருந்தீ ருலகீர், ஒன்று மழியாத தேசோ - மய -
ஞான வுடம்பைச் சொல்ல வந்த முண்டோ—சங்கர சங்
கர சம்பு. (உஉ)

உண்டோ நம்மைப்போல வஞ்சர்-மல-மூறித் தூற
ம்ப முடலமெய் யென்று, கொண்டோர் பிழைப்பதுண்
மையோ - அருட் - கோலத்தை மெய்யென்று கொள்ள
வேண்டாவோ—சங்கர சங்கர சம்பு. (உ௩)

வேண்டா விருப்பும் வெறுப்பும்-அந்த-வில்லங்கத்
தாலே விளையுஞ் சனனம், ஆண்டா னுரைத்த படியே-
சத்து-மௌன திருந்தபோ லருள்வழி சேர்ந்திடே—சங்
கர சங்கர சம்பு. (உ௪)

அறிவாருமில்லையோ வையோ - என்னை - யாளென்
றறியாத மாக்கடீச் சத்தியில், வறிதேயலைந் தீர்த் திரிக்கி-
உண்மை-யாம்பொரு ளேடுக்கவோ வக்கீதருள் றோழி—
சங்கர சங்கர சம்பு. (உ௫)

வந்த வரவை மறந்து - மிக்க - மாதர்போன் புவி
மயக்கத்தி லாழும், இந்த மயக்கை மறக்க-மனக்-கெட்

மைமெய்ஞ் ஞான வெளியிலெலாம் பொலிந்தான்—சங்கர
சங்கர சம்பு. (௨௬)

கண்களும் கண்ணிமைப் போகல்-மன-வன்மையைக் காவல்
வளர்க்குமெய்ப் பொருட்டே, போன வழியுமெய் விட்
டான்-மக்களின்-விட்டோர் துறக்கை விதியையிறு செய்
ப்ரி—சங்கர சங்கர சம்பு. (௨௭)

விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம் - சர்ப - மெய்ன்
மந்த்ர மென்னமே வேதாக மங்கள், மதிக்கு மறையே மது
யார் - அவர் - மார்க்கத்துள் மார்க்கஞ்சன் மார்க்கமே
மாமென—சங்கர சங்கர சம்பு. (௨௮)

நல்மார்க்க மாதர் மயக்கம்-மனத்-தாயாக்கும் பற்
றுறு சொன்னேன் சலகன், நல்மார்க்க பிறிதிட்டடாத்
தம் - அவன் - ஞானத்த மான சதானந்த னன்றோ—சங்கர
சங்கர சம்பு. (௨௯)

அன்றென்று மாமென்று முண்டோ - உனக் - கான
ந்தம் வெண்டி வறிவோ யிச் சற்றே, நன்றுந் தெரிய வெ
ளவே - மறை - நீதிமெய் மாதி கெழுத்திருன் னெதுற—
சங்கர சங்கர சம்பு-சிவ-சங்கர சங்கர சங்கர சம்பு. ([illegible])

ஆக பாடல் - ௩௰.

தில்லைமன்றலாசிரியப்பா.

திருவருண் ஞானஞ் சிறந்தருள் கொழிக்குங்
குருவடி வான குறைவிலா நிறைவே
இன்றெ னொன்றே யின்மல வுடைவே
குன்றாப் பொருளே குணப்பெருங் கடலே
யாதியு மந்தமு மானந்த மயமாஞ்
சோதியே சுத்த தொலைவிலா முதலே
சிற்பவி தெய்வத் திருவரு ளாதரும்
பார்முத லண்டப் பரப்பெலா நிறுவி
யண்டச முதலா மெண்டரு நால்வகை
யெழு பிறவியிற் றுழா தோங்கு
மனந்த யோனியி னினைப்பெற மல்க
வநுமுத லசல மான வாக்கையுங்
கணமுத லளவிற் கற்ப காலமுங்
கன்மப் பகுதித் தொன்மைக் கீடா
விமைப்பொழு தேனுந் தமக்கென வறிவிலா
வேழை யுயிர்த்திரள் வாழவ மைத்தனை
யெவ்வுட லெழுத்தா ரவ்வுடல் வாழ்க்கை
யின்ப மெனவே துன்ப மிலையெனப்
பிரியா வண்ண முரிமையின் வளர்க்க
வாதர வாகக் காதலு மமைத்திட்

கேடமின்றியே தேக நானென
வறிவு போலறி யாமை யியக்கிக்
காலமுங் கன்மமுங் கட்டுங் காட்டியே
மேலு நரகமு மேதரு சுவர்க்கமு
மாலற வகுத்தனை யேனும் வண்ண
மமையாக் காதலிற் சமய கோடி
யறம்பொரு ளாதி திறம்படு நிலையிற்
குருவா யுணர்த்தி யொருவர்போ லனைவருஞ்
சத்த நிலையே முத்தி முடிவென
வாத தர்க்கமும் போத நூல்களு
நினைவிற் காட்டியே குறைவின்றி வயங்க
வங்கங்கு நின்றனை யெங்கு மாகிச்
சமையா தீதத் தன்மை யாகி
யிமையோர் முதலிய யாவரு முனிவருந்
தம்மைக் கொடுத்திட் டெம்மை யாளென
வேசற் றிருக்க மாசற்ற ஞான
நலமுங் காட்டினை ஞானமி லேற்கு
நிலையுங் காட்டுதே னின்னருட் கடனே.

ஆக பாடல் - ௯௱௭௰௧.

வண்ணம்.

தனதந் தனனதந்த தனதந் தனனதந்த
தனதந் தனனதந்த தனதன தான - த -
தான தனதன தானதன னே.

உருவென் பதுமன்றி யருவென் பதுமன்றி
யகமும் புறமுமன்றி முறைபிற மூடு
முதிரு மணுவுமன்றி நிறையுங் குறையுமன்றி
மறைமொழியான் மெனவிரிப்ப விமல மாகி
பரமம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சமயஞ் சமயமென்று மறிஞர்கள் காண
ஞானவெளியிடை மேவுமிறைவ, (௭)

அனலென் றிடவெரிந்து புனலென் றிடநனைந்து
புவியென் றிடவிரிந்து மதியில ராதை
சுருதும் பொருளுயர்ந்து சகளம் பகைதந்து
சமயமொன் றுநிலைதந்தெ றியல்பினை தாகு
மலவென் பதுமன்றி மலமென் பதுமன்றி
பதிவென் பதுமன்றி வெறிக்கொடி லாவும்
அருளினையறி யாதபடியே, (௮)

இருளென் பதுமன்றி யொளியென் பதுமன்றி
யெவையுந் தனதடங்க வொருமுத லாகு
மூலமென் பதுமன்றி யிலையென் பதுமன்றி
யுலகந் தொழவிருந்த வயன்முதலோர்க

ஒருவருங் கவலைகொண்டு சமயங் களில்விழுந்து
சுழலும் பொழுதிரங்கி யருள்செயு மாறு
கூறரியசக மாயையறவே, (௨௪)

எனதென் பனையிகழ்ந்த வறிவின் றிறனினின்று
மறிவொன் றெனவிளங்கு மோபய மாக
வறியுந் தானுமன்று பிறியுந் தாமுமன்றி
வசரஞ் சரமிரண்டு மொருபடி யாகி
பெருகத் தானிறைந்த தெருளிற் றிகழ்பிறந்த
தெருமல் லகைபெறின்றன் சகவடி வாகும்
யாதுபரமதை நாடியறிநீ, (௨)

பருவக் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு
படக் கனிவிழுந்து கெடுநினை வாகி
வலைவின் புடைமறிந்த மதியென் றவசமுண்டு
வசனத் திருமையன்றி யவிர்த ழூமல்
பருநுந் தொழிலினங்கி யிரவும் பகலுமின்சொல்
பருகும் படிதுணிந்து குழலழ காக
மாலைவளைபல சூடியுடனே, (௨௫)

பதுமந் தலையிசைந்த மூலையென் றதையகந்து
வரிவண் டெனவுழன்று கலிலென வாடுஞ்
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண் டைகண்முழங்கு
மொலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுமஞ் சளின்வியர்த்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையி னூடு
காலின்மிசைமுடி சூடிமயலாய், (௨௬)

மருளுந் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணம தான
வளிபுண் டனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவச மாகி
மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும்விஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதி சோர
வானரமதென மேனிதிரையாய், (தனா)

வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வரவுஞ் செயலழிந்து விருமலு மாகி
யனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் களைகளின்று சரிபென நாடி
மனையிற் புறவிருந்த வினைமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
எதுதுணைபழி காரமனமே. (க)

ஆக பாடல் - ௲௪௫௨.

தாயுமானசுவாமிகள்
திருப்பாடற்றிரட்டு
முற்றுப்பெற்றது.

அருள்வாக்கியவகவல்.

இஃது தாயுமானசுவாமிகளுடைய

மாணுக்கராகிய

அருளையரென்பவர்

மேற்படி சுவாமிகளைத் துதிசெய்தது.

திருவளர் கருணைச் சிவானந்த பூரண
மொருவரு மறியா வொருதனிச் சிந்து
நவந்தரு பேதமாய் நாடக நடித்துற்
பவந்தனை நீக்கிப் பரிந்தருள் பராபரங்
கண்ணுங் கருத்துங் கதிரொளி போல
நண்ணிட வெனக்கு நல்கிய நன்மை
யொன்றாய்ப் பலவா யொப்பிலா மோனக்
குன்றாய் நிறைந்த குணப் பெருங்குன்ற
மண்ணையும் புனலையும் வளியையுங் கனலையும்
விண்ணையும் படைத்த வித்திலா வித்துப்
பந்த மனைத்தையும் பாழ்பட நூறியென்
சிந்தையுட் புகுந்த செழுஞ்சுடர்ச் சோதி
விள்ளொணு ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளை கொண் டுண்ணக் குறைவிலா நிறைவு
தாட்டா மரைமலர்த் தாணிணைப் பவர்க்குக்
காட்டா வின்பங் காட்டிய கதிநிலை

வடிகளைந் மனத்தான் மதித்திட வர்தென
சொக்கா திருத்த சொல்லிய செல்க
மாநிலம் மதிக்க மண்டபமண்ட
சோதியாய் விரிந்த முனைவியொ தோற்றம்
பரிவொளி தன்னிற் பதித்தெனை முளைத்தின
விரவி விரவி மேற்கொளும் வெள்ளந்
சட்டெக் கடக்கச் சேறி யடியவர்
மட்டில் கடக்கும் வன்பெருங் கருமை
வெள்ளக் கடக்கா வெளிப் பெருமேவி
நின்னைப் பொருவிற் றிருவடி தெய்வம்
கூறது சொற்றைய மர்வையாய் விருகரும
பொருந்துஞ் சோதிப் புராணமுச்
ஊனமாமண்டபம் புரிகொளி வெள்ளம்
இருடிக காட்டிந் நின்பய சாட்சி
தொடுத்தவ் முப்புரஞ் சிவனிச்சை மாலி.
விழுக்கிய நூறை விட்டக மெய்
மெய்த்தரு பட்டனைத் திசைநவை யென்ற
மதிவினை விளிக்க மாக்கிய வாதி
சாந்த பூமி தன்னையுள் வெல்ல
மார்க்கு மீழ மையாக் ககனம்
பாவனாள் தெற்றிற் பாவிய மாட்சி
விரவுபக வற்ற கொக்கக் காட்சி
யாட்டுபோ விருக்கு மீவாந் தனக்குச்

சாட்சியா யிருக்குந் தாரகந் தனிமுத
லாணும் பெண்ணு மலியுமல் லதுவோர்
சாணுமாய் நின்ற சத்தரத் தனிக்கட
லொன்று மெண்ணெனு மெப்படி யப்படி
யுள்ளும் புறம்பு முலாவிய வொருபொரு
ளளவிலா மதத்தொறு மவரவர் பொருளென
வளர்மறைத் திருக்கு மொருபொருட் பனுவ
[illegible]
[illegible]
தெரிய பேறு பேசாப் பெருமை
யரிய வுரிமை யளவிலா வளவு
ளுரிய நிறைவு தோன்று மதீதம்
விரியு நல்லன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணியாஞ் செலவை மறுக்க
வாரா வரவாய் வந்தசஞ் சீவி
யாலைக் கரும்புபா கமுதக் கட்டிதேன்
சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பாறேன் சருக்கரை
யோங்கு கற்கண்டுசேர்த் தொன்றாய்க் கூட்டி
யருந்திய ரசமென வறிஞர் சமாதியிற்
பொருந்திய வின்பம் பொழிசிற் சுகோதய
மெங்கணு நிறைந்த வியல்பினை யெனக்குச்
செங்கையால் விளங்கத் தெரித்தமெய்த் தேசிகன்

றன்னை யறிவித்துத் தற்பர மாகி
யென்றனைத் திருத்தரு ளேக நாயக
னடிமுடி யில்லா வரும்பொரு டனக்கு
முடியடி யிரண்டினை மொழிந்திடு முதல்வன்
மெய்யலான் மறையவை மெய்யல வெல்லாம்
பொய்யென வறிவெனப் பண்ணினை புரிந்தோ
னருளும் பொருளு மபேதமா யிருந்து
மிருதிற னென்று மியலுமுன் டென்றே
யொருவனக் குண்டோ வருளும் வெளிப்படும் [ன்
பொருண்மையத் தானே பொருந்துமென் றுரைத்தோ
சத்தசத் தென்னுந் தன்மையத் தானே
பொத்தலாஞ் சதசத் தெனக்கென வுரைத்தோ
னுணர்வ மறுவிடி னருளுறு மென்னைக்
காணரு மென்மையாற் காணவே யுரைத்தோன்
செல்வமுன் னரவுக் கீர திழுக்குந்
தன்மயம் விடாதெனக் காட்டிய வள்ள
லானதில தெனவு முறுதலான் மாயை
யாமிலா தெனவும் வகுத்திணி துரைத்தோ
னில்லறத் திருந்து மிந்திய மடக்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
றுறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றுறவினை யறியா னஞ்ஞானி யென்றே
னிறவா மனந்தா னிறக்க வுணர்த்திப்

பிறவா வரந்தரும் பேரறி வாள
னத்தன தருளா லனைத்தையு மியக்குஞ்
சுத்தமா மாயையின் றோற்றமென் றுரைத்தோ
ரிருண்மல மகல விசைந்தி லழுத்தும்
பொருளருட் டிரோதைப் பொற்பெனப் புகன்றோன்
வீறு சிவமுதல் விளம்பிய படியே
யாறு மநாதியென் றறிஞருக் குரைப்போன்
கொல்லா விரதங் குவலயத் தோர்க
ளெல்லாம் பெறுமினென் றியம்பிய தயாநிதி
தருமமுந் தானமுந் தவமும் புரிபவர்க்
குரிமையா யவரோ டுறவு கலப்பவன்
றன்னுயிர் போலத் தரணியின் மருவிய
மன்னுயி ரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுஞ் சனைகள்செய் கருமிக டமக்குந்
தெளிவுவந் துறவருள் செய்திடுந் திறத்தோன்
றான்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கியமாரி
தஞ்சமென் றடைந்த தாபதர் தம்மை
யஞ்சலென் றாளு மறிஞர் சிகாமணி
சிவகோ டிகளுஞ் சித்தர்கோ டிகளும்
யாவரும் புகழ யாவையு முணர்ந்தோன்
யானென தென்று மிறைவனெம் பெருமான்
றானவ னாகிய தலைவனெங் கோமா

னருண கிரியார்க் காறுமு கன்சொலும்
பொருணல மல்லது பொருளென மதியான்
பூத முதலாப் பொலிந்திடு நாத
பேதமுங் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தார முதலா யுள்ள
மேலா தாரமும் வெறுவெளி கண்டவன்
மண்டல மூன்றிலு மன்னிய வுருவிலுங்
கண்டவை யத்திலுங் கடவுளாய் நின்றோன்
பகர்சம யந்தொறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னோன்
பேதவபேத பேதா பேத
போத மிதுவெனப் புகன்றிடும் புண்ணிய
னதுநா னெனவே யாற்றிடு மநுபவஞ்
சதுர்வே தாந்தத் தன்மையென் றுரைத்தோ
னல்லும் பகலு மறிவா னோர்க்குச்
சொல்லும் பொருளுஞ் சுமையெனச் சொன்னோன்
சுதனே குருவாஞ் சுவாமிநா யகற்கெனி
னதிகமெய்ஞ் ஞான மல்லவோ வென்றோ
னேசயோ கத்துறு நிருபமெல் லாந்தொழு
மிராசயோ கத்திறை யிராசயோ கத்தான்
பொறுமை தெளிவு புனிதவா சார
மறுவிலா வண்மை வாரமி யற்கை
தண்ணமர் சாந்தந் தயங்கிய கீர்த்தி

பெண்ணெனு மலைப்பி லிணையிலாக் கல்வி
நலமிக்க தமிக்கலை சூத்திய
விக்கலையென் றுர வெலவிக்குந் தருக்கொடை
கற்றுணர் சொல்லா லணரிய பெருந்தகை
சிற்றுணர வாரி திருவருட் செல்வன்
தாமம் வெமித்தக் கருத்துற வணங்கிப்
பாடிய வனைத்து பாவெனப் பகர்ந்தோ
ருரை பெற காசினி மதித்திட
மெய்ப்பெற்ற ஞானக் கொழிந்த னனவுற்
றெந்த மனை திடமிக்க மாக
வைத்த விடையின் வார்த்தை னனையு
நூலைப் பாடின் புனைந்த வகுளத்தன்
பாலன்பா னெனவே பரிசொடும் பகர்ந்தோன்
வடமொழி விழுதையின் மகிமையை யுணர்ந்து
திடமுற வம்பொருட் டிறத்தையுந் தெளிந்து
கண்டமு தென்னக் கனிரச மென்னத்
தண்டமிழ் வாரி தன்னைப் பொழிந்து
நித்திய முத்தியுஞ் சிறக்கருள் கொழிக்கு
சித்திர சேத்துசன சிராலம்ப சிறைநலைப்
பாடிய ராகமும் பணிந்தெழுந் தன்பா
லாடிய பாற்றிய மங்குழை வெய்திய
முடனெங் குறைவுய பிராமஞ் சிலிர்ப்பப்
படபடென் றுள்ளம் படைத்துப் பதைத்துப்

பாங்குறு நெட்டுயிர்ப் பாகிப் பரதவித்
தேங்கி யேங்கி யிரங்கி யிரங்கி
யோய்ந்த பம்பரம்போ லொடுங்கியே சிறிது
மேய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்
சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய்
யார்ந்த வன்போ டவசமுற் றடிக்கடி
யுண்ணெடுக் குறவே யுருகியே சற்றுத்
தண்ணமர் மொழியுந் தழுதழுத் திடவே
யுள்ளறும் புறம்பு மொருமித் துருகி
வெள்ள நீர்போல் விழுநீர் பெருக்கிக்
கன்று பசுவைக் கருதிக் கதறிச்
சென்றுசென் றோடித் திளைப்பது போல
வன்புநெக் குடைய விருகரங் குவித்துப்
புன்புலால் யாக்கை பொருந்தா தினியென
வுணர்ந் துணர்ந் தன்பா யுவகைமேற் கொண்டினிக்
கணம்பிரி யேனெனக் கருதியே குறித்துத்
திருவுரு வெல்லாந் திருநீ றிலங்க
விருகர நளின மியன்முடி குவித்துப்
பூரண சந்திரன் போலொளி காட்டுங்
காரண வதனங் கவின்குறு வெயர்வுற
விளநிலா வெனவே யிலங்கிய சிறுநகை
தளதள வென்னத் தயங்கி யெழில்பெற
வித்தன்மை யெல்லா மிசைந்து மிவனருள்

நெறிமுறை யொழுகி நேர்த்தக வுரைப்பம் ,
பாத்திர மாடம் பரிவட ளுடைச்
சாத்திரங் காட்டித் தயவுசெய் தருளு
கைக்கொ ளொளியெ பன்னுயிர்க் காக
கெல்லாம் வன்ப வீகமென விளக்கி
சின வுளம் நிமிர்தலைபோல் நெஞ்சே
ஞானநூல் மெய்யென வெள்ளிநீர் திருக்கு
கேவல சகலந் தீர்ப்பட மேலாம்
கேவலஞ் சுத்த மெய்யினை சுக்க
வருவினை பருவகொண் டகளியுள் வசு
பொருளினை வினைவரப் பொலிந்திடும் புலியும்
வைகளு கெகுடன் சம்புரு பெரும்பது
மெய்வளர் ஞானம் விளக்குமென நிலைநடுநாள
சந்திரிற் பொலிபதக் கவைதரும் சித்தாந்த
வித்திமுறை பரமென விளைவிய பேரொளி
முதல்வினை வாசக முறைநலைகி ளுகவுலமை
பைங்கனைத் தெளிந்துணர்த் தருளிய வண்ணலக்
கிருபா பெரியவ நிருபமா வுணர்த்திடை
பரம்பர வெளிப்பர பரமென்றுஞ் ஞானி
முத்திபெறு சாத்திர முறைநலைகி வைத்தபெருஞ்
சத்தியம் புவிமேலாச் சார்த்தவர்க் குரைத்தோ
னாருமெழுத் துவிழ்ம மினைத்தையுயி சாட்டுமெய்
மெழுத்துந் திருநிறுதி நித்திய பாதம்

எல்லா நிறைந்த விறைவன் செயலெனக்
கல்லா ரெனக்குங் கருணைசெய் துடையர்
அருவுரு வாகிய கூடிய கல்லாற்
றிருவரு ளருநெறி தனைத் தெரித்திட வைத்தான்
அருவுரு வருளினைக் கொண்டபின் குறையாப்
பொருண்மைய மானெனைப் புகன்றிடு போத
னெக்குறைத் திகழ்வு மெய்யிற்குரு வடிவெனச்
சிந்தையிற் றியக்கறத் தேர்ந்தவர்க் குரைத்தோனே
சதாசிவ மென்றபேர் தான்படைத் ததுதா ல
னேதாவதே பொருளென் றெடுத்தெடுத் துரைத்தோ
கல்லாரை கன்னல் சுவைக்கிடச் செய்தவ
னெல்லாம் வல்லசித் தெம்பிறை யென்றே
னெவ்வுயிர் தோறு மிறைமே வியநிறைந்து
செவ்விய பிரம்படி செப்பிடு மென்றே
னெவ்வண மேவரோ விசைத்தன ரவரவர்க்
கவ்வண மாயெனம் மானெனை யறைந்தோ
னொருபா ணனுக்கே யொருசிவ னேட்படின்
வருமடி யார்திறம் வழுத்தொரு தென்றேன்
சிவனடி யாரைச் சிவனெனக் காண்பவ
னெவனவன் சிவனே யென்றெடுத் துரைத்தோன்
விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக்
கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோ
னிருசொல் லுரையா தியானின்ப மெய்த

ஒருசொல் லுரைத்த வுயர்குண பூதர
னத்துவா மார்க்க மாறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன்
றிருமகன் மருவிய திகழ்வள மறைசையில்
வருமுணர் வாளன் மருளிலா மனத்தா
னெண்ணிய வெண்ண மெலாந்தெரிந் தெனக்குத்
தண்ணருள் செய்தவன் றாயு மானவ
னொருமொழி பகர்ந்த வுதவியா லவன்ற
னிருபத முப்போ திறைஞ்சிவாழ்த் துவனே

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானஸ்வாமிகள் திருவடிவாழ்க.

மெய்கண்டதேசிகன் விபன்கழல் வாழ்க.

இவ்விரண்டு திருவிருத்தமும் தத்துவங்கள் தொழிற்படுதற்கண் நிகழும் அவத்தைவேறுபாடுதெரிவித்து அவையேதுவாதலை வலியுறுத்துகின்றன.

சாக்கிரமாநுதலினிலிந்திரியம்பத்துஞ் சத்தாதி
வசனாதிவாயுபத்து,நீக்கமிலந்தக்கரணம்புருடனோ
டுநின்றதுமுப்பானைந்துநிலவுகண்டம், தாக்கிய
சொப்பனமதனில்வாயுபத்துமடுத்தனசத்தாதிவச
னாதியாக,நோக்குகரணம்புருடனுடனேகூடநுவல்
வதிருபத்தைந்தாநுண்ணியோரே.

எ-து. இலாடத்தானத்தில் இந்திரியம்பத்தும், சத்தமுதலிய வைந்தும், வசன முதலிய வைந்தும், வாயு பத்தும், அந்தக்கரணநான்கும் புருடனோடுகூடிய முப்பத்தைந்து கருவிகளு நின்றநிலையைச் சாக்கிராவத்தையாகவும், கண்டத்தானத்தில் வாயுபத்தும், சத்தமுதலிய வைந்தும், வசன முதலிய வைந்தும், அந்தக்கரண நான்கும் புருடனோடு கூடிய இருபத்தைந்து கருவிகளு நின்ற நிலையைச் சொப்பனாவத்தையாகவும் சொல்லுவர் பெரியோர். எ-று.

இந்திரியம் பத்தாவன:—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னுங் கன்மேந்திரியமைந்தும், மெய்

வாய், கண், மூக்குச், செவி யென்னு ஞானேந்திய மைந்துமாம்.

சத்த முதலிய வைந்தாவன:—சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்த மென்பனவாம்.

வசன முதலிய வைந்தாவன:—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்த மென்பனவாம்.

வாயு பத்தாவன:—பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்செய னென்பனவாம்.

அந்தக்கரண நான்காவன:—மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்பனவாம்.

ஆன்மாவுக்குப் புருடதத்துவ மென்னும் பெயராதலை; 'ஐவகையா லுறுபயன்க ளுகரவருங் காலமது புருடதத் துவமென் றடைக்கிடுவ ரறிந்தோர்' என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தாலு முணர்க.

சாக்கிரமெனினு நினைவெனினும், சொப்பன மெனினுங் கனவெனினு மமையும். (௪)

சுழுத்தியிதயந்தனிற்பிராணஞ்சித்தஞ் சொல்லரியபுருடனுடன்மூன்றதாகும், வழுத்தியநாபியிற்றுரியம்பிராணனோடுமன்னுபுருடனுங்கூடவயங்காநிற்கும், அழுத்திடுமூலந்தன்னிற்றுரியாதீதமதனி

டையேபுருடனென்றியமருஞானம், பழுத்திடுசிந்தையாறிவாவத்தைநேதாறும் பாங்குபெறக்கருவிநிற்கும்பரிசுதானே.

எ-து. இதயத்தானத்தில் பிராணவாயு, சித்தம், புருடனோடு நின்றநிலை சுழுத்தியவத்தை யெனப்படும். உந்தித்தானத்தில் பிராணனோடு புருடனின்ற நிலை துரியவவத்தை யெனப்படும். மூலாதாரத்தில் புருடனின்ற நிலை துரியாதீதவவத்தை யெனப்படும். ஆகையால் உண்மை யுணர்ந்தோர் அவத்தை யைந்திலும் கருவிகணின்ற தன்மையை யறிவார். எ-று.

சுழுத்தி என்றது வடசொற்சிதைவு. இவ்விரு திருவிருத்தங்களின் கருத்தைச் சிவஞானபோத நான்காஞ்சூத்திரத்து 'அமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே' என்ற மூன்று மதிகரணத்தும், சிவஞான சித்தியாரில் 'சாக்கிரமுப்பத்தைந்தும்' என்ற திருவிருத்தத்தும் சிவஞானமுனிவ ரருளிச்செய்த வுரையானு முணர்க.

சிவஞானயோகிகள்சேவடிவாழ்க.



உ

சிவமயம்.

தாயுமானசுவாமிகள்

திருப்பாடற்றிரட்டு.



பாடல்.	பக்கம்.

முற்றிற்று.





Arul G

20 12 78

